வெளியீடு 21-3-2001

Issued 21-3-2001

282 / 2001

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மே 15, 2000 - தொகுதி 106 – எண் 2

**Monday the 15th May, 2000 -- Volume 106 – No. 2**

சட்டப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

tive Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

[Price Rs. 3.00

D
V2 11, 31 P00
P00. 106.2
222391

**15-5-2000**

# உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 259-298 |
| **2. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | 298-307 |
| (அ) நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கக் கோரிக்கை | 298-304 |
| டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் | 298, 299-302 |
| மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி | 302-304 |
| (ஆ) நெல்லை, களக்காடு பகுதியில் சூறாவளிக் காற்றால் வாழை மரங்கள் சேதம் | 304-307 |
| திரு. மு. அப்பாவு | 304-305 |
| *மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் | 306-307 |
| **3. ஒழுங்குப் பிரச்சினை—** | |
| பாரதிய ஜனதா கட்சிப் பொதுச் செயலாளர் பெயர் தவறாகக் குறிப்பிடப்பட்டது | 298-299 |
| **4. அறிவிப்பு—** | |
| சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு மேதகு ஆளுநர் அளிக்கும் விருந்து | 307-308 |

பக்கங்கள்

5. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை—தொடர்ச்சி ..
(ஆ) கோரிக்கை எண் 15—காவல் துறை—தொடர்ச்சி .. .. .. } 308-381
(இ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்—தொடர்ச்சி ..

திரு. ஜி. பழனிசாமி .. .. 308-318
திரு. சோ. பாலகிருஷ்ணன் .. .. 319-332
மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 332-370

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— .. .. 381


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## வைகாசி 2, விக்கிரம—திருவள்ளுவர் ஆண்டு 2031

## 2000 மே 15, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பிடி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி."

நலவாழ்வுக்கு வேண்டியவற்றை வழங்கியும், நிலையுணர்ந்து கருணை காட்டியும், நடுநிலை தவறாமல் ஆட்சி நடத்தியும், மக்களைப் பேணிக் காப்பதே ஓர் அரசுக்குப் புகழொளி சேர்ப்பதாகும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 621, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**621—**

### துணை மின் நிலையம்

***21244—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 மே 15

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, குறிச்சி, அலிவலம் போன்ற பகுதிகளில் குறைவான மின் அழுத்தம் ஏற்படுவதால், அப்பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி தொகுதி, குறிச்சி கிராமமானது, பேராவூரணி துணை மின் நிலையத்திலிருந்து ஏறக்குறைய 22 கிலோமீட்டர் தூரத்திலே உள்ளது. குறிச்சி கிராமம் மற்றும் அதனைச் சுற்றி அலிவலம், பாலத்தளி, மேட்டுவயல், வட்டாத்திக்கோட்டை, கொல்லைக்காடு, இடையாத்தி, காயாவூர், பாதரங்கோட்டை, அதம்பை உட்பட ஏறக்குறைய 15 கிராமங்கள் உள்ளன. இந்தக் கிராமங்களிலே தொடர்ந்து பல மணி நேரம் மின்அழுத்தக் குறைவு ஏற்படுவதால், அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகளுடைய ஆழ்குழாய்க் கிணறுகள் மற்றும் மேல்நிலைத் தொட்டிகள் எல்லாம் இயங்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே அந்தப் பகுதியிலே ஒரு துணை மின் நிலையம் தொடங்க மாண்புமிகு அமைச்சர் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, குறிச்சி, அலிவலம் போன்ற பகுதிகள் பட்டுக்கோட்டை 110/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து 8 கிலோமீட்டர் தூரத்திற்குள் உள்ளதால், அந்தப் பகுதியில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை. ஆனால் பட்டுக்கோட்டை துணை மின் நிலையத்தில் மேலும் 16 எம்.வி.ஏ. மின்மாற்றி நிறுவப்பட்டு, 8-2-1999 முதல் பணியிலே உள்ளது. அலிவலம் பகுதியில் கூடுதல் திறன் கொண்ட மின்மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. ஆங்காங்கே மின் கம்பிகள் மாற்றப்பட்டு, மின் அழுத்தம் சரி செய்யப்பட்டுள்ளது. அழுகப்புலக்காடு, குறிச்சி பகுதியில் புதிதாக விநியோக மின்மாற்றிகள் அமைக்கப்பட்டும், ஆங்காங்கே கம்பிகள் மாற்றப்பட்டும், மின் அழுத்தம் சரி செய்யப்பட்டுள்ளது. இந்த மின்தொடர் மூலம் ஒண்டிக்குளம், நடுவிக்கோட்டை, அலிவலம்,



2000 மே 15]

கழுகப்புறக்காடு, குறிச்சி, காயாவூர், கொல்லைக்காடு, வட்டாத்திக்கோட்டை, இடையாத்தி சென்னியவிடுதி, கோட்டைக்காடு ஆகிய பகுதிகளுக்கு மின் விநியோகம் செல்கிறது. மேலும் இந்த மின் தொடரில் இடையாத்தி, மாஞ்சாங்காடு, பூவாளுர், கோட்டைக்காடு ஆகிய கிராமங்களில் புதிய விநியோக மின் மாற்றிகள் அமைத்து, மின்சாரம் சீராக இப்போது வழங்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக இப்படிப்பட்ட துணை மின் நிலையங்களில் 33/11 கி.வோ. உள்ள இடங்களில் 230 கி.வோல்ட்டாக நிலை உயர்த்தும்போது ஏற்கெனவே இருக்கிற அந்த 33/11 கி.வோல்ட்டை 110 கி.வோல்ட்டாக மாற்றக்கூடிய அவசியம் ஒரே நேரத்தில் இருக்கிறது. ஆனால் என்னுடைய தொகுதியிலே கடலங்குடியில் 230 கி.வோ. பணி விரைந்து நடைபெறுகிற அளவுக்கு 110 கி.வோ. பணி நடைபெறவில்லை. எனவே இப்படிப்பட்ட நிலையங்களில் அதை ஒரே நேரத்திலே இணைந்து முடிக்கக்கூடிய அளவிற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட பகுதியில் 230 கி.வோ. துணை மின் நிலையத்தையும், 110/11 கி.வோ. துணை மின் நிலையத்தையும் ஒரே நேரத்தில் அமைக்க முடியாது. முதலிலே 230 கி.வோ. துணை மின் நிலையத்தை அமைத்ததற்குப் பிறகு, அடுத்த கட்டமாக அது எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழகத்தில் துணை மின் நிலையங்கள் கணிசமான அளவுக்கு அமைக்கப்பட்டு வருவது பாராட்டுக்குரியது. நான் சென்ற ஆண்டு ஒரு கேள்வியை இந்த அவையிலே கேட்டேன். கிராமப்புறங்களிலே கிட்டத்தட்ட 15, 20 ஆண்டுகளுக்கு முன்னாலே அமைக்கப்பட்ட டிரான்ஸ்பார்மர்கள்தான் பல இடங்களிலே இருக்கின்றன. அப்போது அந்த கிராமத்திலே 100 மின் இணைப்புகள் அல்லது 200 மின் இணைப்புகள் மட்டுமே இருந்திருக்கும். இப்போது கிட்டத்தட்ட 500-விருந்து 1000 மின் இணைப்புகளுக்கு வழங்கக்கூடிய அளவிற்கு அதிலிருந்து மின்சாரத்தைப் போதுமான அளவு எடுக்க

[2000 மே 15

இயலாத சூழ்நிலை இருக்கிறது. அவற்றையெல்லாம் தேவை அறிந்து மாற்ற வேண்டுமென்று கேட்டபோது அமைச்சர் அவர்கள்கூட பல இடங்களிலே மாற்றப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். ஆகவே தமிழகம் முழுவதிலேயும் ஒட்டுமொத்தமாக ஒரு பெரும் திட்டமாக, ஒரு சிறப்புத் திட்டமாக எடுத்து மின் அழுத்தம் குறைவாக இருக்கிற இடங்களில் எல்லாம் டிரான்ஸ்பார்மர்களை மாற்றச் செய்வதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்ததைப்போல பல ஆண்டுகாலமாக டிரான்ஸ்பார்மர்கள் பொருத்தப்பட்டு அவையெல்லாம் மாற்றப்படாமலேயும், சரியான மின் விநியோகம் இல்லாமலும் இருந்தது உண்மை. ஆனால் 1996 ஆம் ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நான்காவது முறையாகப் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு ஒவ்வொரு இடத்திலேயும் புதிய டிரான்ஸ்பார்மர்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்கிறேன். 1996 ஆம் ஆண்டு வரையிலே நம்முடைய கோவை மாநகரிலே மட்டும் 40 டிரான்ஸ்பார்மர்கள் இருந்தன. இப்போது 110 டிரான்ஸ்பார்மர்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. இப்படி தமிழ்நாட்டில் ஏறக்குறைய 6,000 புதிய டிரான்ஸ்பார்மர்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு மட்டும் 3,000 டிரான்ஸ்பார்மர்கள் கொள்முதல் செய்யப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் உள்ள பழைய டிரான்ஸ்பார்மர்களை அகற்றி புதிய டிரான்ஸ்பார்மர்கள் பொருத்தப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராசிபுரம் பகுதியில் அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது என்று தங்களிடம் ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருந்தோம். அது கவன ஈர்ப்பு அறிவிப்பாக மாற்றப்பட்டிருக்கிறது; அது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று கூறியிருந்தீர்கள். ஆகவே பேரவைத் தலைவர் மூலமாக நான் கேட்டுக்கொள்வது, இராசிபுரம் பகுதியில் இருக்கின்ற மின்தடையை நீக்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வதற்குண்டான நடவடிக்கையை எடுப்பார்களா? அதுபற்றிய ஒரு விவர அறிக்கையைக் கொடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



2000 மே 15]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளைக்கு அந்த விவர அறிக்கை இந்த அவையில் கொடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழ்நாடு எங்கும் Low Voltage-ம் மின் தடையும் அதிகமாக ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. வட மாநிலங்களான குஜராத், ஓரிசா, மஹாராஷ்டிரா போன்ற மாநிலங்களிலேயிருந்து வரக்கூடிய மின்சாரம் இப்போது நமக்குக் கொடுக்கப்படாமல் நிறுத்திவிட்டதால்தான் இப்படி அடிக்கடி மின்அழுத்தக் குறைவு Low Voltage ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது.

அதைப்போல, ஜெயங்கொண்டம் Project ஆரம்பிப்பதாகச் சொல்லியும்கூட இன்னும் Power Purchase Agreement போடப்படாமல் இருக்கிறது. 'சட்டியிலே இருந்தால்தான் அகப்பையிலே வரும்' என்று சொல்வார்கள். அங்கேயிருந்து நாம் எத்தனை மெகாவாட்டைக் கூடுதலாக உற்பத்தி செய்யப்போகிறோம்? அதேப்போன்று எப்போது மின்தடையையும் Low Voltage-ஐயும் நிறுத்த இருக்கிறோம் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Low Voltage-ஐப் பொறுத்தவரையிலே, வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவிற்கு இந்த மாநிலத்திலேதான் 4 ஆண்டு காலத்திலே 240 துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டு, 90 சதவீத Low Voltage-ஐக் குறைத்திருக்கிறோம். மீதமுள்ள 10 சதவீதத்தையும் குறைக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு 60 புதிய துணை மின் நிலையங்களை ஆரம்பிப்பதற்கு ஏறக்குறைய 250 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அதிலே பணிகள் நடந்து அடுத்த ஆண்டிற்குள்ளாக Low Voltage இல்லாத அளவிற்கு முடிக்கப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் ஜெயங்கொண்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். ஜெயங்கொண்டம் திட்டத்தை இந்த அரசு தீவிரமாக அமல்படுத்த வேண்டுமென்று முயற்சித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் அந்த நிறுவனத்திற்குச் சொந்தக்காரர்கள் Escrow இல்லாமல் P.P. Agreement போடமாட்டோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நம்மிடத்தில் Escrow நிலுவையிலே இல்லை. எனவேதான், IDBI இடத்திலே மேலும் 1500 மெகாவாட்டிற்கு Escrow உயர்த்தித் தாருங்கள் என்று

[2000 மே 15

கேட்டிருக்கின்றோம். இந்த மாதம் 25 ஆம் தேதி நம்முடைய நிதித் துறைச் செயலாளர், தொழில் துறைச் செயலாளர், மின் துறைச் செயலாளர் மற்றும் மின்சார இலாகாவினுடைய தலைவர் ஆகியோர் மும்பை சென்று அதுகுறித்து பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிறார்கள். அது கிடைத்தால், உடனடியாக ஜெயங்கொண்டம் திட்டத்திற்கு 500 மெகாவாட்டிற்கு Escrow கொடுக்கப்படும். பிறகு P.P.A. sign செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். மூக்கையா.

**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து போகக்கூடிய ஒரு நகரமாக விளங்குகிறது. அங்கு துணை மின் நிலையம் அமைப்பதற்கு அரசு அனுமதி வழங்கியும் நீண்டகாலம் ஆகியும் அந்தப் பணி இன்னும் தொடங்கப்படாமல் இருக்கிறது. எப்போது அந்தத் துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணி தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானலிலே ஒரு துணை மின் நிலையம் அமைக்க 1997 ஆம் ஆண்டே நாம் நிதியொதுக்கம் செய்திருக்கின்றோம். அந்தத் துணை மின் நிலையம் அமைப்பதற்கு 2 ஏக்கர் நிலம் கேட்டிருக்கின்றோம். அந்த நிலத்தை இதுவரையில் மின் வாரியத்திற்கு ஒப்படைக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்புகொண்டு நிலம் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்வார்களேயானால் நிலம் கொடுத்த நாளிலேயிருந்து 8 மாதத்திற்குள்ளாக துணை மின் நிலையம் அமைத்துத் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டுகளில் அரசு அனுமதித்து தொடங்கப்பட்ட துணை மின் நிலையங்களில் சில இடங்கள் இன்னும் வேலை செய்ய முடியாத நிலையிலே இருக்கின்றன. அவற்றையெல்லாம் உடனடியாக இயக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.



2000 மே 15]

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு தொடங்கப்பட்ட எல்லா துணை மின் நிலையங்களும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஓரிரு துணை மின் நிலையங்கள் சில இடங்களிலே பழுதாகி இருக்கின்றன. இதற்குமுன் இருந்த துணை மின்நிலையங்களும் சரி செய்யப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 622, திரு. விஜி. தனபால், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**622—**

**மருத்துவமனையை விரிவுபடுத்துதல்**

***29597—திரு. விஜி. தனபால்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடியாத்தம் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. விஜி. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் அரசு மருத்துவமனையில் தினசரி ஆயிரத்திற்கும் மேற்பட்ட வெளி நோயாளிகள் வந்து போகிறார்கள். அங்கு 100 படுக்கை வசதிகள்தான் இருக்கின்றன. வெளி நோயாளிகள் தங்குவதற்குக்கூட இடவசதிகள் கிடையாது. மேலும் மக்கள்தொகை பெருகி வருகின்ற காரணத்தினால் நோயாளிகளின் எண்ணிக்கையை கவனத்தில் கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மருத்துவமனையை விரிவுபடுத்த ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் அரசு மருத்துவமனை 118 படுக்கை வசதிகளுடன் இயங்கி வருகின்றது. சராசரியாக 149 உள் நோயாளிகளும்

2,177 வெளி நோயாளிகளும் தினந்தோறும் வந்து செல்கின்றனர். இந்த மருத்துவமனையை விரிவுபடுத்த வேண்டும் என்று அரசு ஏற்கெனவே திட்டமிட்டது. ஆனால் தீப்புண் சிகிச்சைப் பிரிவிற்காக 12 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவப்பிரிவைக் கட்டுவதற்கு நிதி ஒதுக்கம் செய்தும் அங்கே விஸ்தரிப்பதற்குப் போதுமான இடமில்லை என்று தெரிவித்துவிட்டார்கள். இப்போது மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்திலே அந்த 12 படுக்கைகள் கொண்ட பிரிவைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர், குடியாத்தம் மருத்துவமனையை விஸ்தரிக்க வேண்டுமென்று விரும்பினால் 3 ஏக்கர் நிலம் வாங்கித் தந்தால் அதை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 623, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**623—**

**வாரிசு சான்றிதழ்**

***32408—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாரிசு சான்றிதழ் பெறும்போது கணவனை இழந்த மனைவியர் அதனை நிரூபிக்க வேண்டும் என்பதைத் தவிர்க்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாரிசு சான்றிதழ் பெறும்போது கணவனை இழந்த மனைவியர் அதனை நிரூபித்துத்தான் சான்று பெற வேண்டும். அதனைத் தவிர்க்க இயலாது.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரிசு சான்றிதழ் பெறும்போது அதை நிரூபிக்க வேண்டும் என்பதிலே எனக்குக் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் நம்முடைய கிராம அதிகாரிகள், Revenue Inspectors போன்றவர்களின் விசாரணைக்குப் பிறகுதான் வாரிசு சான்றிதழ் அளிக்கப்படுகிறது. ஒருசில நிகழ்வுகளில் மனைவி மட்டும் இருந்தால் அவர்தான் நிரூபிக்க வேண்டும் என்று





கேட்டு, நானே அதிகாரிகளிடத்திலே போய் பேசிப் பார்த்தேன். சில நேர்வுகளில் இரண்டு பேர் உரிமை கொண்டாடுவதால் இப்படிச் செய்கிறோம் என்று சொல்கிறார்கள். எத்தனை பேர் உரிமை கொண்டாடினாலும் விசாரிக்க வேண்டியவர்கள் நம்முடைய வருவாய்த் துறை அதிகாரிகள்தான். எனவே விசாரணையை சரியான முறையில் நடத்தி, காலதாமதம் நேராவண்ணம் பார்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க கண்டிப்பான உத்தரவினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பிறப்பிப்பாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்களின் கேள்விக்குக் கொஞ்சம் விரிவான பதில். வாரிசு சான்று பொதுவாக குடும்ப அட்டை, இறந்தவரது இறப்புச் சான்று, வாரிசுகள் என்று நிரூபிப்பதற்குத் தேவையான ஆவணங்கள் மற்றும் விசாரணையின் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது. கணவனை இழந்த மனைவியர் வாரிசு சான்று பெற, காலம் சென்ற கணவரின் இறப்புச் சான்று மற்றும் அவர்தான் வாரிசு என்பதற்கு உணவுப் பொருள் விநியோக அட்டை மற்றும் அவர்களிடம் உள்ள ஆதாரங்களைக் கொடுக்க வேண்டும். பிரச்சினைக்குரிய நேர்வுகளில் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோர், வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து மனு வரப்பெற்றவுடன், சம்பந்தப்பட்ட மனுதாரர் வசிக்கும் இடத்திற்குச் சென்று முதலில் மனுதாரரையும், அவர்தம் குடும்பத்திலுள்ள அனைவரையும் பின்னர் அவரது உறவினர்கள், அந்த வட்டார மற்றும் பொது மக்கள் அனைவரையும் நன்கு விசாரணை செய்து அவர்களிடமிருந்து வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. பின், குடும்ப அட்டை, இறந்து போனவருக்குச் சொந்தமான சொத்துக்கள், உயில், திருமணப் பத்திரிகை மற்றும் அவரால் விட்டுச் செல்லப்பட்ட ஏனைய ஆவணங்கள் அல்லது அவரிடத்தில் கைவசம் உள்ள ஏதாவது ஆவணங்களைப் பெற்றுக்கொண்டு பரிசீலனை செய்து இறந்துபோனவரின் வாரிசுதாரர் யார் யார் என்பது குறித்த விவர அறிக்கையை வட்டாட்சியருக்கு அனுப்புகிறார்கள். வட்டாட்சியர் அதனை நன்கு பரிசீலனை செய்கிறார். பரிசீலனைக்குப்பின் இறந்துபோனவரின் வாரிசுதாரர்கள் யார் யார் என்பதை தீர்க்கமாக முடிவு செய்து வாரிசு சான்றிதழ் வழங்கப்படுகிறது. வாரிசு சான்றிதழ் வழங்க வட்டாட்சியருக்கு 15 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இந்நேர்வுகளில் சரிவர நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றாலோ, துறை

அலுவலர் பணியில் குறைபாடு இருந்தாலோ, தொடர்புடைய வருவாய்க் கோட்ட ஆட்சியருக்கோ அல்லது மாவட்ட ஆட்சியருக்கோ முறையிட்டு அவரிடம் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *624*, திரு. சி. வேலாயுதன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**624—**

**வேளாண்மை ஆராய்ச்சி மையம்**

***30539—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, உதயகிரிக்கோட்டையில் மத்திய அரசின் வேளாண்மை ஆராய்ச்சி மையம் அமைக்க இடம் கேட்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இடம் வழங்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இல்லை. இருப்பினும் கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, உதயகிரிக்கோட்டையில் வேளாண்மை அறிவியல் மையம் (கேவிகே) அமைப்பது குறித்த கருத்துரு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடன் கலந்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *625*, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.





**625—**

**விதைகளைத் தரம் பிரிக்கும் நிலையம்**

***30864—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் ஒன்றியத்தில் விவசாய விளைபொருட்களுக்கான விதைகளைத் தரம் பிரிக்கும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆண்டிமடம் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் விதைகள் தரம் பிரிக்கப்படுவதற்கு, தற்சமயம் போதுமான வசதிகள் அரசால் செய்து தரப்பட்டுள்ளன.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும், ஏற்கெனவே தரம் இல்லாத விதைகள் தரப்படுவதாக விவசாயிகளிடமிருந்து சில புகார்கள் வந்த காரணத்தினால் இந்தக் கேள்வி கேட்கப்பட்டது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், என்னுடைய ஆண்டிமடம் தொகுதியிலே முந்திரி அதிகமாகப் பயிரிடப்படுவதன் காரணத்தினாலே, தரமான முந்திரிக் கன்றுகளை வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நெல் விதை தரம் பிரிப்பதைப் பற்றித்தான் மூலக் கேள்வியிலே கேட்டிருந்தார்கள். இப்போது முந்திரியைப் பற்றிக் கேட்கிறார்கள். அது பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *626*, திரு. வெ.அ. ஆண்டமுத்து, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

[2000 மே 15

626—

**பழத் தோட்டம்**

***24627—திரு. வெ.அ. ஆண்டமுத்து:**

மாண்புமிகு பொதுப்பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானிசாகரில் பழத்தோட்டம் (மா, பலா, கொய்யா மற்றும் சப்போட்டா) அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெ.அ. ஆண்டமுத்து, இருக்கையில் இல்லை.

வினா எண் 627, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

627—

**அணைக்கட்டு**

***28623—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய நீர்வள ஏஜென்சி, பம்பா, அச்சன்கோயில் நதிகளின் குறுக்கே அணை கட்டும் திட்டக் குறிப்பை அரசு தயாரித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



2000 மே 15]

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தேசிய மேம்பாட்டு முகமையின் இத்திட்டத்திற்கு தமிழ்நாடு அதன் இசைவினை அளித்துள்ளது. கேரள அரசு இன்னமும் இம்முகமைக்கு அதன் இசைவினை அளிக்கவில்லை.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள அரசின் இசைவைப் பெறுவதற்காக தமிழ்நாடு அரசு ஏதாவது முயற்சி செய்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பம்பா, அச்சன்கோயில் திட்டம் குறித்து ஓர் ஆய்வு அறிக்கையை, National Water Development Agency-யின்கீழ் இருக்கின்ற, அதனுடைய Technical Advisory Committee தயாரித்து இருக்கிறது. அதன் அடிப்படையில் தமிழ்நாட்டுக்கு 25 T.M.C. தண்ணீர், அங்கிருந்து கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்தத் திட்ட அறிக்கையை 1995 ஆம் ஆண்டே, National Water Development Agency தயாரித்தது. தமிழ்நாடு அரசு அதற்கு ஒப்புதலைக் கொடுத்து இருக்கிறது. ஆனால் கேரள அரசுதான் இன்னும் அதனுடைய ஒப்புதலைத் தரவில்லை, பல கூட்டங்கள் நடத்தியும், அதனுடைய ஒப்புதலைத் தராத காரணத்தினால், 2-7-1999 அன்று நடைபெற்ற 29-வது கூட்டத்தில், National Water Development Agency-யினுடைய அறிக்கையை ஏற்றுக்கொள்வது என்று அந்தக் குழு தீர்மானித்தது. அதற்குப் பிறகு, 24-2-2000 அன்று இதனை ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாக, பல ஆவணங்களை நீங்கள் அனுப்ப வேண்டுமென்றும், அந்தக் குழு, National Water Development Agency, கேரள அரசைக் கேட்டிருக்கிறது. இதை கேரள அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும், ஏற்றுக்கொள்ளச் செய்ய வேண்டும் என்று தமிழக அரசு, மத்திய அரசை, குறிப்பாக National Water Development Agency-யை வற்புறுத்தி இருக்கிறது. 11-1-1999-ல் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், இந்தத் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டுமென்று பிரதமருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். 13-4-1999 மற்றும் 28-6-1999-ல் நான் மத்தியிலே இருக்கிற நீர்வளத் துறை அமைச்சருக்கு 2 கடிதங்களை எழுதியிருக்கிறேன்.

[2000 மே 15

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவ்வளவு விவரம் சொன்ன பிறகும் எதற்காகத் துணைக் கேள்வி?

**திரு. கே. சுப்பராயன்:** கேட்டால்தான் நல்லது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேளுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள அரசு இந்தத் திட்டங்களை, தேசிய நீர் வள Commission-உடைய, இந்த முன்மொழிவுகளை ஏற்க காலதாமதப்படுத்துவதற்கு ஏதாவது நியாயமான காரணங்கள் இருக்கின்றனவா? அதுபற்றி மாநில அரசு ஏதாவது அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, கேரள அரசு, எங்களுடைய கேரளத்தின் சார்பிலே ஓர் ஆய்வு மையம் இருக்கிறது. அதன் சார்பிலே இந்தத் திட்டத்தை நாங்கள் ஆராய வேண்டும், National Water Development Agency தயாரித்த அறிக்கை உண்மைதானா என்று கேரள அரசின் சார்பிலே அவர்கள் மாநிலத்திலே அமைக்கப்பட்டிருக்கிற ஒரு குழுவின் சார்பிலே நாங்கள் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறது. இரண்டாவது வெம்பக்கோட்டை நாடு என்று ஒரு பகுதி இருக்கிறது. அங்கிருந்து இந்தத் தண்ணீர் முழுவதும் அரபிக் கடலுக்கு போனால்தான் அரபிக் கடலிலிருந்து, பூமியை நோக்கி வருகின்ற அந்த உப்பு நீரைத் தடுக்க முடியும் என்று கேரள அரசு கருதுகிறது. ஆனால் இப்போது கிட்டத்தட்ட 1,000 T.M.C. தண்ணீருக்கு மேலே ஆண்டுக் கணக்கிலே ஓடிக்கொண்டிருக்கின்ற நிலைமையில் நாம் கேட்பது 22 T.M.C. தண்ணீர்தான். அதோடு ஒப்பிடும்போது மிக மிகக் குறைவு. அந்தத் தண்ணீரைத் தருவதால் கேரளத்திற்கு ஒன்றும் நஷ்டம் ஏற்படப் போவதில்லை.

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 628, திரு. லா. சந்தானம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.



2000 மே 15]

**628—**

## பேருந்து

***25103—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை, பழங்காநத்தத்திலிருந்து வாடிப்பட்டிக்குப் பேருந்து விடும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பழங்காநத்தம் - வாடிப்பட்டி தூரம் 30.5 கிலோ மீட்டர் என்பதால் நகரப் பேருந்து இயக்க இயலாது. மதுரை பழங்காநத்தத்திலிருந்து பெரியார் பேருந்து நிலையத்திற்கும் மற்றும் பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து வாடிப்பட்டிக்கும் போதுமான அளவு பேருந்து வசதி உள்ளதால் பழங்காநத்தத்திலிருந்து வாடிப்பட்டிக்குப் பேருந்துகளை நேரடியாக இயக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் பகுதிகளாகிய விருதுநகர், சிவகாசி, நெல்லை, நாகர்கோவில், கன்னியாகுமரி போன்ற பகுதிகளுக்கெல்லாம் பழங்காநத்தம் பேருந்து நிலையத்திலிருந்துதான் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எனவே வாடிப்பட்டியிலிருந்து நேராக அந்தப் பேருந்து நிலையத்திற்கு நிறைய மக்கள் சென்று வருகிற காரணத்தினால், அவர்கள் பெரியார் பேருந்து நிலையத்திலே இறங்கி மற்றொரு பேருந்து மூலம் திரும்பவும் பழங்காநத்தம் செல்கின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால் மீண்டும் மறுபரிசீலனை செய்து நேரடியாக இந்த வழித்தடத்திலே பேருந்து இயக்குவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரத்தில் பெருகி வருகிற போக்குவரத்து வசதிக்காகத்தான் பேருந்து நிலையங்கள் எல்லாம் இயக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அங்கே மாட்டுத் தாவணியிலே ஒரு பேருந்து நிலையம், பழங்காநத்தத்திலே ஒரு பேருந்து நிலையம், பெரியார் பேருந்து நிலையம் என்று பேருந்து நிலையங்களை இவ்வாறு பிரித்து

[2000 மே 15

வைத்திருப்பதே மதுரை நகரத்திற்குள்ளே இருக்கின்ற போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காகத்தான். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல வாடிப்பட்டியிலிருந்து நேரடியாக பழங்காநத்தம் வரை பேருந்து இயக்குவோம் என்று சொன்னால் அதிலே சிக்கல்கள் நிறைய வரும். வாடிப்பட்டியிலிருந்து பெரியார் பேருந்து நிலையத்திற்கு 15 நிமிடத்திற்கு ஒரு பேருந்து என்ற அடிப்படையிலே தினசரி 150 நடைகள் அங்கே இயங்கிக் கொண்டிருக்கின்றன. பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து பழங்காநத்தத்திற்கு 5 நிமிடத்திற்கு ஒரு பேருந்து வீதம் 360 பேருந்து நடைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே பேருந்து வசதிகள் போதுமானதாக இருக்கின்றன. நேரடியாக இதுபோன்று பேருந்துகளை இயக்குவோம் என்று சொன்னால் மறுபடியும் போக்குவரத்து நெரிசல்தான் உருவாகும். இவற்றைத் தவிர்ப்பதற்காகத்தான் இதுபோன்ற பேருந்து நிலையங்களை எல்லாம் மாற்றியமைத்து மதுரை மாநகரத்தின் வசதிக்காக இதை உருவாக்கி இருக்கிறார்கள். ஆகவே நேரடியாக பேருந்துகளை இயக்குகின்ற தேவை இப்போது எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 629, திரு. நீ. பாண்டுரங்கன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**629—**

**போக்குவரத்து வசதி**

***29942—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி நகரம், பெரணமல்லூர், போளூர், கொழப்பலூர் போன்ற மிகப் பெரிய ஊர்களிலிருந்து வந்தவாசி, மேல்மருவத்தூர், செங்கல்பட்டு, தாம்பரம் வழியாக சென்னைக்கும், வந்தவாசி, உத்திரமேரூர், செங்கல்பட்டு வழியாக சென்னைக்கும் நேரடிப் போக்குவரத்து வசதி இல்லாமலிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2000 மே 15]

(அ) மற்றும் (ஆ): பெரணமல்லூர் வழியாக வந்தவாசி வரையிலுள்ள 30 கிலோமீட்டர் பகுதியில் பயணிகள் அடர்வு 37 சதவிகிதமும், வந்தவாசியிலிருந்து மேல்மருவத்தூர் வரையுள்ள 28 கிலோமீட்டர் பகுதியில் பயணிகள் அடர்வு 56 சதவிகிதமும் உள்ளது. மேல்மருவத்தூரிலிருந்து சென்னைவரை உள்ள 86 கிலோமீட்டர் தூரத்திற்கு தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும் இயங்கி வருகின்றன. எனவே இத்தடத்தில் பராமரிப்புச் செலவுகளைக்கூட ஈடுகட்டுமளவிற்கு வருமானம் இருக்காது என்பதால் இத்தடத்தில் பேருந்து இயக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

வந்தவாசி, உத்திரமேரூர் பகுதியில் பயணிகள் அடர்வு 40 சதவிகிதம் உள்ளது. உத்திரமேரூர்-செங்கல்பட்டு பகுதியிலும் பயணிகள் அடர்வு குறைவாகவே இருக்கும். செங்கல்பட்டிலிருந்து சென்னைக்கு அனைத்துக் கழகப் பேருந்துகளும் இயங்கி வருகின்றன. எனவே கோரியுள்ள தடத்தில் பேருந்து இயக்குவது சாத்தியமில்லை. மேலும் ஆரணி, பெரணமல்லூர், கொழப்பலூர் ஆகிய ஊர்கள் சென்னையுடன் வேறு மார்க்கங்களில் பேருந்துத் தொடர்பு உள்ள ஊர்கள் என்பதால் கோரிக்கை வழித்தடங்களில் பேருந்து இயக்கம் சாத்தியமில்லை.

**திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது உத்திரமேரூர், மேல்மருவத்தூர் மற்றும் வந்தவாசியிலிருந்து செல்கின்ற பேருந்துகளில் பயணம் செய்வது பாதுகாப்பானது என்று கருதி இந்தப் பகுதியிலே செல்கிறார்கள். குறிப்பாக பெரணமல்லூர், கொழப்பலூர் பகுதியிலேயிருந்து செய்யார், காஞ்சிபுரம் வழியாகச் செல்கின்ற பேருந்துகளில் செல்லாமல் வந்தவாசிவரை வந்து பேருந்து மாறி அதற்குப் பிறகு பயணத்தை மேற்கொள்கிறார்கள். காரணம் பாதுகாப்பான பயணம் என்பதால். ஆயிரக்கணக்கான மக்கள் இந்தப் பயண வழித்தடத்தில் பயணம் செய்வதால் மாண்புமிகு அமைச்சர் மறுபரிசீலனை செய்வாரா? அல்லது வந்தவாசிவரை வருகிற வழித்தடம் 104-A பேருந்தை பெரணமல்லூர்வரை நீட்டிப்புச் செய்து இயக்குவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆரணி நகரத்திலிருந்தும், பெரணமல்லூரிலிருந்தும், கொழப்பலூரிலிருந்தும் நேரடியாக சென்னைக்குப் பேருந்துகளைக் கேட்கிறார். பேருந்துகள் அங்கே

இயங்கிக் கொண்டு இருக்கின்றன. ஆனால் பேருந்துகளை வேறு வழித்தடங்களிலே கேட்கிறார். இவர் கேட்கின்ற வழித்தடங்களிலேயிருந்தும் பேருந்துகள் சென்னைக்கு நேரடியாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. மேல்மருவத்தூரிலிருந்து சென்னைக்கு எவ்வளவு பேருந்துகள் இயங்குகின்றன என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். செங்கல்பட்டிலிருந்தும் எவ்வளவு இயங்குகின்றன என்று தெரியும். ஆகவே இவர்கள் அந்த வழியாக பேருந்துகளைக் கேட்கிறபோது அங்கேயிருக்கின்ற, ஆரணியிலிருந்து மேல்மருவத்தூருக்கு வருகிற வழித்தடங்களில் பேருந்துகளின் எண்ணிக்கை குறைகிறது. 40 சதவிகிதம், 50 சதவிகிதம்தான் வரும். பெரணமல்லூரிலிருந்து நேரடியாக சுருக்கு வழியிலே சென்னைக்கு இயக்குகிறபோது அந்த வழித்தடத்திலேதான் பயணிகள் பயணம் செய்வார்கள். அந்த வழித்தடத்திலேயும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு வழித்தடங்களிலே பேருந்துகளைக் கேட்கிறபோது, நட்டத்திலே இயங்கிக்கொண்டிருக்கிற போக்குவரத்துக் கழகங்களுக்கு மேலும் நட்டத்தை அதிகரிப்பதாகத்தான் இருக்கும். இந்த அடர்வு அதிகரிக்கும் என்று சொன்னால், பொதுமக்களுடைய தேவை அதிகரிக்கும் என்று சொன்னால், வருங்காலங்களிலே இதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 630, திரு. மா. இராமச்சந்திரன், மாண் [illegible] நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**630—**

**புதிய பாலம்**

***27141—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், மன்னார்குடி-புதுக்கோட்டை சாலையில் வேதபுரி ஆற்றில் புதிய பாலம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?



**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இயலாது.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மன்னார்குடி, ஒரத்தநாடு, திருவோணம் செல்கிற சாலை. M.D.R. இனத்தைச் சார்ந்தது. வேதபுரியாறு என்பது காட்டாறு. அந்தக் காட்டாற்றிலே வெள்ளம் வருகிறபோது அதைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்காகத்தான் அந்தப் பாலங்களை அமைத்து வழிவகை ஏற்படுத்துகிறோம். அதைக் கட்டுக்குள் கொண்டு வருகிறபோது வெள்ளத்தின் வேகம் காரணமாகப் பாலத்திற்கு அதிர்வு ஏற்பட்டு, கிட்டத்தட்ட 100 ஆண்டுகாலமாக இருக்கிற அந்தப் பாலம், கொஞ்ச காலத்திற்கு முன்னாலே சிதைந்து உடைந்துகூட விழுந்துவிட்டது. அதனாலே போக்குவரத்தை நிறுத்தி வேகத் தடையை ஏற்படுத்தி இப்போது அதிலே மெதுவாகச் செல்ல வேண்டுமென்ற சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். என்றைக்காவது விழுந்துவிடுமோ என்ற ஐயம் அந்தப் பகுதியிலே இருக்கிறது. கிட்டத்தட்ட 100 கிராமங்களுக்கு அந்த வழியாகச் செல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** ஆகையினாலே இப்படிப்பட்ட பாலங்களைத் தேர்வு செய்துதான் பாலங்கள் கட்டுவது அரசுக்கு நல்ல பெயரைத் தருகிற ஒன்றாக இருக்கும். ஏனென்று சொன்னால், கிராமங்களுக்குப் போகின்றபொழுது இந்த அரசாங்கத்தைப்பற்றி பேசிக்கொள்வதற்கு, பெருமை சேர்ப்பதற்கு வழிவகை ஏற்படும். ஆகையினாலே இந்த ஆற்றுப் பாலத்தை சீர்செய்து, கட்டிக்கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிரம்ப விளக்கம் தந்திருக்கிறார்கள். அந்தப் பாலத்தினுடைய முக்கியத்துவத்தை துறை உணர்கிறது. ஓராண்டில் எட்டுமாத காலம் அதிலே தண்ணீர் போய்க்கொண்டிருக்கிறது என்பதும் உண்மைதான். ஆனால் இது பெரிய மாவட்டச் சாலையாக இருக்கிற காரணத்தினால் அப்படிப்பட்ட சாலைகளுக்கு எல்லாம் பகுதி இரண்டு திட்டத்திலேதான் பாலம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர்களுக்குத்

[2000 மே 15

தெரியும். பகுதி இரண்டு திட்டத்திலே அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்ய முடிவதில்லை. இருந்தாலும், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிலே பாலங்கள் கட்டுவதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அதிகமான பாலங்களை எடுத்து இப்போது கட்டிக்கொண்டிருக்கிறோம். இந்த நான்கு ஆண்டுகாலத்தில் 395 பாலங்கள் எடுத்து, இப்பொழுது கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன; பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்தப் பாலத்தினுடைய முக்கியத்துவத்தையும் உணர்கிறோம். ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் தேவைப்படும் என்று தோராயமாக மதிப்பீடு செய்யப்பட்டு, HUDCO நிறுவனத்திற்கு சிபாரிசு செய்யலாம் என்றும் துறை கருதிக்கொண்டிருக்கிறது. அதை அரசு ஏற்றுக்கொள்கிறபோது, இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 631, திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**631—**

### புறவழிச் சாலை

***29911—திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் நகரில் புறவழிச்சாலைப் பணி நடப்பாண்டில் ஆரம்பிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): மேலூர் நகருக்குப் புறவழிச் சாலை அமைக்கும் திட்டத்தின் ஆய்வானது மத்திய அரசின் தேசிய நெடுஞ்சாலை அதிகாரக் குழுமத்தால் (National Highways Authority of India) மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் நகரிலே அதிகமான விபத்துக்கள் நடப்பதால் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு வசதியாக எப்போது இந்தத்



2000 மே 15]

திட்டம் ஆரம்பிக்கப்படும் என்று தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியிலிருந்து விராலிமலை, துவரங்குறிச்சி, மேலூர் வழியாக வரக்கூடிய அந்தச் சாலையை நீண்ட நெடுங்காலமாக தேசிய நெடுஞ்சாலையாக ஆக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1969 ஆம் ஆண்டு முதலமைச்சராக இருக்கிற காலத்திலே முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அதற்குப் பிறகு, இப்போதுதான் அது தேசிய நெடுஞ்சாலையாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்தச் சாலையை நேர்படுத்துவதற்கு மேலூர் போன்ற நகரங்களில் புறவழிச் சாலை அமைப்பதற்கு Lee Associates என்ற ஒரு நிறுவனத்திடம் ஆய்வு மேற்கொள்வதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆய்வுகள் முடிந்திருக்கின்றன. தேசிய நெடுஞ்சாலை அதிகாரக் குழுமம்தான் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதாக இருக்கிறது. அதற்கு உலக வங்கியினுடைய நிதி ஆதாரத்தை தேசிய நெடுஞ்சாலை அதிகாரக் குழுமம் கேட்டிருக்கிறது. எனவே ஆய்வு முடிவுற்றிருக்கிறது. உலக வங்கியிடமிருந்து நிதி ஆதாரம் கிடைத்தவுடன் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சாலை சம்பந்தமான கேள்வி என்பதாலே நானும் கேட்கின்றேன். வத்தலகுண்டிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னிடம் சொல்ல வேண்டும், எப்படிக் கேட்கிறீர்கள் என்று. அவரைப் பார்த்துச் சொல்லக் கூடாது.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு தலைவர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும். திண்டுக்கல்லுக்கு அந்தப் பக்கம் போகிற நூற்றுக்கணக்கான பேருந்துகள் எல்லாம் இடையிலே நிற்கின்றன. தடங்கல் இருக்கிறது. 15 நிமிடம், 20 நிமிடத்திற்கு மேலே போக்குவரத்துத் தடையிருக்கிற காரணத்தினாலே, அதை இருவழிச் சாலையாக மாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நம்முடைய மாண்புமிகு தலைவர் அவர்கள் மூலமாக முயற்சி எடுத்துக்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால் அவர்களும் கொடைக்கானலுக்குப் போக வேண்டும்; ஆகையினாலே சொல்கிறேன்.

[2000 மே 15

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்-வத்தலகுண்டு-பெரியகுளம் சாலை முக்கியமான சாலை என்பதை துறை உணர்ந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை இருவழிச் சாலையாக ஆக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைக்கிறார்கள். குறிப்பாக திண்டுக்கல்லிலேயிருந்து வத்தலகுண்டு வரையிலே அது இருவழிச் சாலையாகத்தான்-இருக்கிறது. வேண்டுமானால், இன்னொன்றை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கலாம். அதை தேசிய நெடுஞ்சாலையாக ஆக்குவீர்களா என்று கேட்டிருந்தால் நான் நன்றாக அதற்குப் பதில் சொல்லியிருப்பேன். தேசிய நெடுஞ்சாலையாக குமுளிவரை ஆக்க வேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறது. மத்திய அரசு ஏற்றுக்கொண்டவுடன் இதுவும்கூட தேசிய நெடுஞ்சாலையாக விரைவிலே ஆகலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 632, திரு. செங்கை சிவம், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**632—**

### நுழைவுக் கட்டணம்

***26814—திரு. செங்கை சிவம் :**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள கோயில்களில் பொதுமக்களிடம் நுழைவுக் கட்டணம் வசூலிப்பதைத் தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2000 மே 15]

(அ) தமிழகத்திலுள்ள திருக்கோயில்களில், சில திருக்கோயில்களில் மட்டுமே பக்தர்களின் வசதிக்காக, சிறப்பு நுழைவுக் கட்டணம் வசூலிப்பதைத் தவிர, பிற திருக்கோயில்களில் பொதுமக்களிடம் நுழைவுக் கட்டணத்திற்காக தொகை ஏதும் வசூலிப்பது இல்லை. கட்டணம் செலுத்தினால் மட்டுமே திருக்கோயில்களில் இறைவனை தரிசிக்கலாம் என்ற நிலை தமிழகத்தில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலுக்கு பாரதிய ஜனதா கட்சித் தலைவர் சென்றதாகவும், அங்கே விளக்கு பூஜைக்கு சிறப்புக் கட்டணம் வசூலிக்கப்பட்டதாகவும் அவர் ஒரு பேட்டியிலே கூறியிருக்கிறார். அதையொட்டி போடப்பட்ட கேள்விதான் இது. விளக்கு பூஜைகளுக்குக் கட்டணம் வசூலிக்கிறார்கள். அது தவிர்க்கப்படுமா? இப்போது பல இடங்களில், பல இலட்சக்கணக்கான ரூபாய் வருமானமுள்ள கோயில்களை தனியார்களே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதை இந்து சமய அறநிலையத் துறை ஏற்று நடத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு கேள்விகளைத் தொடுத்திருக்கிறார்கள். ஒன்று, இந்து சமய அறநிலையத் துறை ஒரு கோயிலை ஏற்பது என்று சொன்னால், அதற்குச் சில அடிப்படை விண்ணப்பங்களும், அடிப்படைக் குற்றச்சாட்டுக்களும் இருக்க வேண்டும். காரணம், இப்போது நம்முடைய துறையின்கீழ் இருக்கின்ற கோயில்கள் *36,324. 1925*-ஆவது ஆண்டு நீதிக் கட்சி ஆட்சிக் காலத்தில்தான் பல்வேறு முறைகேடுகள் பற்றிய குறிப்பாணைகள், குற்றச்சாட்டுக்கள் எல்லாம் எழுந்து, இதை முறைப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில்தான் அறநிலையத் துறை என்று ஒன்று உருவாக்கப்பட்டது. அப்படி உருவாக்கியவர்களில் நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய தந்தையாருக்கு அதிலே பெரிய பங்கு உண்டு. அதற்குக் காரணம், இந்த முறைகேடுகளின் அடிப்படையிலேதான் எடுக்க முடியுமே தவிர திடீரென்று ஒரு கோயிலை இந்து அறநிலையத் துறையால் தனிப்பட்ட முறையிலே எடுக்க முடியாது. எனவே இன்றைக்கும்கூட இந்தக்

[2000 மே 15

கோயில்களுக்கு அப்பால், ஏறத்தாழ 10 ஆயிரம் கோயில்கள், தனி நபர்களால் தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெறுகின்றன. ஆங்காங்கே குற்றச்சாட்டுக்கள் எழுகின்றன. அப்படி குற்றச்சாட்டுக்கள் எழுந்து, அரசுக்கு விண்ணப்பிக்கப்படுமானால், அது முறையாக இருக்குமானால், உடனே துறை தலையிட்டு அதன்கீழ் கொண்டுவரும். இது ஒரு நிலை.

மற்றொன்று. கோயில்களில் சிறப்புக் கட்டணம் வசூலிப்பதில் இரண்டு நிலைகள் இருக்கின்றன. தனிப்பட்ட முறையில் இறைவனை வணங்குபவர்களுக்கு, இறையன்பர்களுக்கு எந்தவகையான தடையும் எங்கும் கிடையாது. அதேநேரத்தில் வெளியூரிலேயிருந்து வருகின்றவர்கள், குறிப்பிட்ட ஒரு கோயிலுக்கு வருகின்றவர்கள், ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் திரும்பிப் போகவேண்டும் என்று வருகிறபோது அவர்களுக்கு என்று சில கோயில்களில் சிறப்பு தரிசனக் கட்டணங்கள் வைக்கப்பட்டுள்ளன. அதைப் பெற்றுக்கொண்டு, அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அவர்களை வழிபடவைத்து அனுப்புகிறார்களே தவிர, மற்றபடி தனிப்பட்ட முறையில் எதுவும் நிகழ்வது இல்லை. அப்படி ஏதேனும் ஓர் அமைப்பு தனிப்பட்ட முறையில் கட்டணம் வசூலிக்க வேண்டும் என்று கருதினால், ஏற்கெனவே அறநிலையத் துறையினுடைய செயல் அலுவலர் மற்றும் துணை ஆணையர், இணை ஆணையருடைய ஒப்புதல் பெற்றுத்தான் அது நடக்குமே தவிர, தனிப்பட்ட முறையில் யாரும் எந்தக் கட்டணத்தையும் வசூலிக்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 633, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**633—**

### நூல்களை அரசுடைமையாக்குதல்

***29375—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

*மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



2000 மே 15]

*தமிழறிஞர் சாமி. சிதம்பரனார் அவர்கள் எழுதிய நூல்கள் அரசுடைமையாக்கப்படுமா?*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்களுடைய ஒப்புதலோடு திருத்திய விடையைப் படிக்கிறேன். 24-3-2000 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டமன்றத்தில் 2000-2001-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட அறிக்கையைத் தாக்கல் செய்தபோது, சுயமரியாதை இயக்கத்தின் பெரும் எழுத்தாளர் சீர்திருத்தச் செம்மல் சாமி. சிதம்பரனார் அவர்கள் எழுதிய நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு காப்பு நிதியாக ரூபாய் 10 இலட்சம் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 634, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

*முற்பகல் 10-05*

**634—**

### கூட்டுறவு நகர வங்கி

***28327—திரு. ஜி.கே. மணி:**

*மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்தில் கூட்டுறவு நகர வங்கி அமைக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்தில் கூட்டுறவு நகர வங்கி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

{2000 மே 15

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்தில் நகர கூட்டுறவு வங்கியைத் தொடங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். பெண்ணாகரம் ஒரு தாலுகாவின் தலைநகரம். அரசினுடைய அனைத்து துறை அலுவலகங்களும் அங்கு இருக்கின்றன. அத்தியாவசியத் தேவைகளை கருத்திற்கொண்டு நடப்பு ஆண்டிலே விரைந்து அங்கே நகர கூட்டுறவு வங்கி தொடங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் பெண்ணாகரம் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலிருந்து தருமபுரியில் உள்ள கூட்டுறவு நிலவள வங்கிக்குச் செல்ல வேண்டியுள்ளது. ஏறக்குறைய 65, 70 கி.மீ. தொலைவு இருக்கின்றது. நானும் 4 ஆண்டுகளாக தொடர்ந்து அதனை வலியுறுத்தி வருகிறேன். ஆகவே கூட்டுறவு நிலவள வங்கியை அங்கே தொடங்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரடியாக நாம் நினைத்தவுடன் கூட்டுறவு நகர வங்கியைத் தொடங்கிவிட முடியாது. அதற்கு ரிசர்வ் வங்கியின் அனுமதி வேண்டும். ரிசர்வ் வங்கியின் முன் அனுமதி பெற்றாலும் அதற்கு 1,000 கூட்டுறவாளர்களை இணைக்க வேண்டும். கிட்டத்தட்ட 25 இலட்சம் ரூபாய் அதற்கு நிதி திரட்டி அதன் மூலமாகத்தான் அமைக்க முடியும். அப்படி ஏற்கெனவே நிதி திரட்டி அமைக்கப்பட்ட 6 வங்கிகளுக்கு அனுமதிக்காக விண்ணப்பித்தபோது இரண்டே இரண்டு வங்கிகளுக்கு மட்டும் அனுமதி தந்திருக்கிறார்கள். மீதம் இருக்கின்ற 4 வங்கிகளுக்கு இன்னும் அனுமதி தரவில்லை. அதையும் பெற முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் நிலவள வங்கி தொடங்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். புதிய வட்டங்களில் நிலவள வங்கி தொடங்கப்படும் என்று சட்டமன்றத்திலே அறிவித்திருக்கிறோம். இந்த ஆண்டு 39 இடங்களுக்கு அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு, கிட்டத்தட்ட 19 இடங்களில் மட்டும் முன்மொழிவுகள் பெறப்பட்டு 14 இடங்களுக்கு அனுமதி அளிக்கக்கூடிய நிலை இருக்கிறது. உங்களுடைய பகுதியை கவனித்து விரைவாக நிலவள வங்கியைத் திறப்பதற்கு முயற்சி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2000 மே 15]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், பவானி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கவுந்தப்பாடியிலே தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி இயங்கி வருகின்றது. அங்கே 1991 ஆம் ஆண்டு கணக்குப்படி மக்கள் தொகை 48 ஆயிரம் பேர். இன்று கணக்குப்போட்டுப் பார்த்தோமேயானால் 62,000-க்கு மேல் இருப்பார்கள். அப்படி இருக்கக் கூடிய சூழ்நிலையில் சலங்கைபாளையம் பேரூராட்சியிலே, இன்று இருக்கக் கூடிய மக்கள் தொகை 25,000 என்ற நிலையில் தனியாக ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஆரம்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே 15 முறைகளுக்கும் மேலாக நேரடியாகவும், அதிகாரிகளிடத்திலே விண்ணப்பத்தின் மூலமாகக் கொடுத்தும்கூட சலங்கைபாளையம் பேரூராட்சியிலே சட்டவிதிகள் அனைத்தும் ஏற்புடையதாக இருக்கக்கூடிய சூழ்நிலையில் இந்த நிதியாண்டிலாவது அங்கே தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஆரம்பித்துக் கொடுப்பீர்களா என்பதை தங்கள் வாயிலாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏன் புதிதாகத் தொடங்கப்பட முடியவில்லை என்ற காரணம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும். ஆனால் தனிப்பட்ட முறையில் நேரிடையாக என்னிடம் சொல்லிவிட்டு, சட்டமன்றத்திலே அமைச்சரை 15 தடவை பார்த்திருக்கிறேன் என்பதை மட்டும் சொன்னால் மீதியை நான் சொல்ல இயலாது. அந்தத் தலைவர் ஒத்துக்கொள்ளவில்லை. General Body-யைக் கூட்டி தலைவர் தீர்மானம் போட்டு கையெழுத்து போட்டுத் தருவாரானால் அதற்கான முயற்சி எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 635. திரு. சி.வெ. கிருஷ்ணன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

635—

### வெங்காயக் கிடங்கு

***31978—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதி, எரியோட்டில் செயல்படாமல் இருந்து வரும் வெங்காயக் கிடங்கை சிறுதொழில் நிறுவனத்திற்கு வாடகைக்கோ, குத்தகைக்கோ விட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வெங்காயத்தை விவசாயிகள் கொள்முதல் செய்து சேமித்து வைத்து விற்பனை செய்யும் நோக்கத்துடன் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து கடன் பெற்று கட்டப்பட்ட மூன்று கிடங்குகளில் எதிர்பார்த்ததைவிட ரூ.11.20 இலட்சம் நட்டம் ஏற்பட்டதாலும், இக்கிடங்குகளை பயன்படுத்திக்கொள்ள செய்தித்தாளில் விளம்பரம் செய்தபோது எவரும் முன்வராததாலும், மேற்படி கழகத்திற்கு செலுத்தப்பட வேண்டிய அசல் தொகை திரும்பச் செலுத்தப்படாமல் வட்டி இழப்பு ஏற்பட்டு வருவதாலும் இக்கிடங்குகளை விற்பனை செய்யலாம் என்று தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் முடிவெடுத்துள்ளதால் இக்கிடங்குகளை வாடகைக்கோ அல்லது குத்தகைக்கோ அளிக்க சாத்தியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேடசந்தூர் தொகுதியில் வடமதுரை—வேடசந்தூர் சாலையில் எரியோட்டுக்கு அருகிலே சுமார் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டிலே கிடங்கு கட்டப்பட்டு இருக்கிறது. நம்முடைய எரியோட்டு பகுதியில் வேடசந்தூர் பகுதியில் நிறைய சிறிய விவசாயிகள், பெரிய விவசாயிகள் வெங்காயம் உற்பத்தி செய்து, விவசாயம் செய்யும் இடத்திலேயே பட்டறை போட்டு வெங்காயத்தை சேமித்து வருகிறார்கள். எனவே அந்தக் கிடங்குகளிலே வெங்காயத்தை வைக்க அமைச்சர் அவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.





முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கிட்டங்கிகள் திண்டுக்கல் நகரிலிருந்து 21 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கின்றன. இந்திய தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து ரூ.37 இலட்சமும், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் சொந்த நிதியிலிருந்து ரூ.13.69 இலட்சமும் செலவழித்து, மூன்று இடங்களிலும் கிட்டங்கிகள் கட்டப்பட்டன. கிட்டங்கிகள் கட்டப்படுகின்றபோது, மகாராஷ்டிரா மாநிலத்தில் இருக்கின்ற அமைப்பைப்போல அவை கட்டப்பட்ட காரணத்தால், அங்கே வெங்காயத்தைக் கொண்டு சென்று வைத்தால், விரைவிலேயே அழுகிவிடுகின்ற சூழ்நிலை இருந்தது என்பதால், அந்த கிட்டங்கிகளை வாடகைக்கு எடுப்பதற்கு விவசாயிகள் முன்வரவில்லை. ஆனால் உடனடியாக அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும் என்பதற்காக, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்கும் நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கும் கோப்புகள் அனுப்பப்பட்டபோது, அவர்களும் அந்தக் கிட்டங்கிகளை வாடகைக்கு எடுத்துக்கொள்ள முன்வராததால், அவற்றை விற்பனை செய்யலாம் என்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. அதை விற்பனை செய்யத் தேவையில்லை, நல்ல வாடகைக்கு நாங்கள் எடுத்துக்கொள்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யாரையாவது அழைத்துக்கொண்டு வர முன்வருவார்களேயானால், அதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்னிருந்து செய்து தருவார்களேயானால் விற்பனை செய்வதை நிறுத்திவிட்டு, வாடகைக்கு விடுவதைப் பற்றி அரசு முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெங்காயம், தேசிய விவசாயிகளுடைய பிரச்சினை. வெங்காயத்தை தாராளமாக ஏற்றுமதி செய்வதற்கு மத்திய சர்க்காருக்கு மாநில சர்க்கார் கடிதம் எழுதியிருப்பதாக வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நேற்றையதினம்கூட, இது தேசியப் பிரச்சினை, தேசிய விவசாயிகள் பிரச்சினை என்று சொல்லி, பாரதிய ஜனதா கட்சித் தலைவர் வெங்காய நாயுடுமீது வெங்காயத்தை வீசியிருக்கிறார்கள். அதனால் அதை முக்கியமாகக் கருதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு தாராளமாக ஏற்றுமதி செய்வதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[2000 மே 15

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல, அவர் வெங்காய நாயுடு இல்லை. வெங்கைய்ய நாயுடு. (சிரிப்பு) உறுப்பினர், அவர் பெயரை மீண்டும் நன்றாகத் தெரிந்துகொள்ளவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது, வெங்கைய்ய நாயுடுவும் கூட அல்ல. அவர் வம்புக்குச் சொல்கிறார். மத்திய அமைச்சர், திரு. பிரமோத் மகாஜன் மேலே வீசிய வெங்காயம். அவர் பெயரை மாற்றிச் சொல்கிறார். மாற்றிச் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்கிறார். அமைச்சர், நீங்கள் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** இது சம்பந்தப்பட்ட முடிவு எடுக்கப்பட வேண்டுமானால் மத்திய அரசுதான் அதில் முடிவு எடுக்க வேண்டும். உள்ளூரில் விளைகின்ற வெங்காயத்தின் நிலவரத்தைப் பொறுத்து, உபரியாக விளையுமானால், ஏற்றுமதிக் கொள்கை பற்றி முடிவெடுக்கிறார்கள். இது மத்திய அரசு எடுக்க வேண்டிய முடிவு. தமிழகத்தைப் பொறுத்தவரையில், வெங்காயம் பற்றாக்குறையாக இருக்கிறது. அது அதிகமான விலைக்கு விற்கின்றபடியால் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யக்கூடிய சூழ்நிலை இப்போது இல்லை.

**THIRU B. VENKATASAMY:** I am on a Point of Order, Sir.

**HON. SPEAKER:** No Point of Order. Please sit down.

**THIRU B. VENKATASAMY:** Point of Order, Sir.

**HON. SPEAKER:** There is no Point of Order in Question Hour.

*வினா எண் 636. திரு. ஐ. கணேசன், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.*

**636—**

**வாடகைக் குடியிருப்புகள்**

***27454—திரு. ஐ. கணேசன்:**

*மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2000 மே 15]

*(அ) வட்டத் தலைநகரங்களில் அரசு ஊழியர்கள் குடியிருக்க, வாடகைக் குடியிருப்புகள் கட்டித்தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மாவட்டத் தலைமையிடம் மற்றும் வருவாய்க் கோட்டத் தலைமையிடங்களில் மட்டும்தான் அரசு வாடகைக் குடியிருப்புகள் கட்டித் தரப்படுகின்றன. வட்டங்களில் இயலாது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசில் பணியாற்றுகின்ற 11 இலட்சம் அரசு ஊழியர்களுக்கு, மாநகராட்சிகள் மற்றும் வருவாய்க் கோட்டத் தலைமையிடங்களில் குடியிருப்பவர்களுக்கு மட்டும் வாடகைக்குக் குடியிருக்க, அரசு குடியிருப்புக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதில் எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன? அவை போதுமானதாக உள்ளதா? இல்லையென்றால், அதை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா? (மணியடிக்கப்பெற்றது) இரண்டாவது, கேள்விதான் அனுமதிக்கப்படுவதில்லையே! அதேபோல, தாலுகா அலுவலகங்களில் பணியாற்றுகின்ற அரசு ஊழியர்களுக்கும் வாடகைக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு மீண்டும் பரிசீலனை செய்து, சிறிது சிறிதாகவாவது நிறைவேற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் சுமார் 25 ஆயிரத்திற்கு மேல் அரசு வாடகைக் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. எடப்பாடி, வட்டத் தலைநகராக இருக்கிறது. சங்ககிரி கோட்டத் தலைநகரத்திலும் ஏற்கெனவே 60 குடியிருப்புகள் கட்டப்பட்டிருக்கின்றன. இப்போது 60 குடியிருப்புகள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எடப்பாடியிலே கண்டிப்பாகத் தேவையிருப்பின், அரசு நிலம் கிடைக்கப்பெற்றால், மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கோரிக்கை வந்தால், அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2000 மே 15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், நீங்கள் பேசும்போது இரண்டாவது துணைக் கேள்விக்கு அனுமதிப்பது இல்லை என்று சொன்னீர்கள். நான் உங்களுக்கு இரண்டாவது துணைக் கேள்விக்கு அனுமதி கொடுக்காததன் காரணம், முதல் துணைக் கேள்வியிலேயே 3 கேள்விகளைக் கேட்டுவிடுகிறீர்கள்.

**திரு. ஐ. கணேசன்:** நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 637, திரு. ஆர்.ஆர். சேகரன் மற்றும் திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**637—**

**திரைப்பட நகர் வருவாய்**

***25529—திரு. ஆர்.ஆர். சேகரன்:**
**திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரைப்பட நகர் மூலமாக ஆண்டொன்றிற்கு அரசுக்கு எவ்வளவு வருவாய் வருகிறது?

(ஆ) திரைப்பட நகரை மேலும் நவீனப்படுத்த அரசு ஏதேனும் திட்டங்கள் வைத்துள்ளதா?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) எம்.ஜி.ஆர். திரைப்பட நகர் மூலமாக, ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக ரூ.2.00 கோடி அளவிற்கு, திரைப்பட வளர்ச்சிக் கழகத்திற்கு வருமானம் கிடைக்கப்பெற்று வருகிறது.

(ஆ) தமிழ்நாடு திரைப்பட வளர்ச்சிக் கழகத்திடம் தற்போது போதிய நிதி வசதி இல்லை. நிதி வசதி சீரான பின்னர் எம்.ஜி.ஆர். திரைப்பட நகரை மேலும் நவீனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.



2000 மே 15]

*முற்பகல் 10-15*

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எம்.ஜி.ஆர். திரைப்பட நகரில் பராமரிப்பு மற்றும் வசதிகள் சரியாக இல்லாத காரணத்தால், அண்டை மாநிலமான ஆந்திராவில் உள்ள ராமாஜி ராவ் திரைப்பட நகருக்கு இங்கேயுள்ள தயாரிப்பாளர்கள் செல்வதை அரசு அறியுமா? சின்னத் திரையின் காரணமாக, ஏற்கெனவே நலிவடைந்த நிலையில் உள்ள திரைப்படத் தொழிலை ஊக்குவிக்கும் விதத்தில் இங்கேயே அவர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுத்து கட்டணச் சலுகையை அளிக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, எம்.ஜி.ஆர். திரைப்பட நகரை மேம்படுத்துவதற்காக பல்வேறு ஆக்கப் பணிகளை நிறைவேற்றி இருக்கிறோம். குறிப்பாக, குடில்கள், நீச்சல் குளம், பில்லியர்ட்ஸ், டென்னிஸ், டேபிள் டென்னிஸ், இறகுப் பந்து விளையாட்டுகள் ஆகியவற்றை, அரசு நிறுவனங்களுக்கு, தனியாருக்கு, Tidle Park போன்றவற்றிற்கு வாடகைக்கு விடுவதன் மூலம் மாதம் ஒன்றிற்கு 3 இலட்சம் ரூபாய் வருமானம் வருகிற வகையிலே அதை விரிவாக்கித் தந்திருக்கிறோம். அதேபோல திரைப்பட நகரிலுள்ள உணவகங்களையும் மேலும் பல கடைகளை நடத்துவதற்கான நிலையில் மாதம் ஒன்றிற்கு ரூபாய் 3 இலட்சத்து 10 ஆயிரம் மதிப்பீட்டில் வாடகைக்குவிட்டு, அதன்மூலம் ஆண்டுக்கு 37 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் வருமானம் வருகிற வகையிலும் உருவாக்கித் தந்திருக்கிறோம். திரைப்பட நகரில் திரைப்படங்களை எடுக்கத்தக்க அளவுக்கு, பண்ணையார் குடியிருப்பு போன்ற பகுதிகளை விரிவுபடுத்தியும், அங்கே இருக்கிற மீன் பண்ணைகள், ஏரிகள், படகுகள் போன்ற அமைப்புகளை செம்மைப்படுத்தியும், இருக்கிற பூங்காக்களை அமைப்படுத்தியும், குடிநீர் வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளை செம்மைப்படுத்தியும், திரைப்படங்களை திரைப்பட நகரில் உருவாக்கித் தந்ததாலும், திரைப்படங்களை திரைப்பட நகரில் எடுப்பதற்காக சலுகைக் கட்டணம் வழங்கியதாலும், இன்னும் பல்வேறு காரணங்களால் அதனுடைய வருமானம் இப்போது உயர்ந்திருக்கிறது. குறிப்பாக ஆண்டுக்கு இரண்டு கோடி ரூபாய் வருமானம் வருகிற அளவுக்கு இந்த ஆட்சியிலேதான் உயர்ந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மானிய அடிப்படையிலே படம் எடுப்பவர்கள் 5 நாட்கள் அங்கே படங்கள் எடுக்கவேண்டும்

[2000 மே 15

என்ற அடிப்படையில் அந்தத் திரைப்படங்களை எடுப்பவர்கள் திரைப்பட நகரைப் பயன்படுத்திக்கொண்டு படம் எடுத்து வருகிறார்கள். ஆகவே திரைப்பட நகரைப் பொறுத்தவரையில், குறிப்பாக திரையுலகைப் பொறுத்தவரையில், கலைஞருடைய ஆட்சி அதை முன்னேற்றுவதற்காகப் பல்வேறு வாய்ப்பு வசதிகளை உருவாக்கித் தந்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டு கோடி ரூபாய் ஆண்டுக்கு வருமானம் வருகிறது என்று சுட்டிக்காட்டினார்கள். 1996-க்கு முன்பாக இந்தத் திரைப்பட நகரில் எவ்வளவு வருமானம் வந்தது? இலாபத்தில் இயங்கியதா? நட்டத்தில் இயங்கியதா? எத்தனை பேர் அதிலே பணியாற்றுகிறார்கள்? அதிலே நிரந்தரமானவர்கள் எத்தனை பேர்? தற்காலிகமானவர்கள் எத்தனை பேர்? நிர்வாகச் செலவு எவ்வளவு என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1994-95-இல் கடந்த கால ஆட்சியில் ஆண்டு ஒன்றுக்கு வெறும் 45 இலட்சம் ரூபாய் மாத்திரம் வருமானம் என்றும் செலவு 57 இலட்சம் ரூபாய் என்றும் இருந்தது. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, 1999-2000-த்தில் வருமானம் ரூ.209.70 இலட்சம், செலவு 164.48 இலட்சம் ரூபாய், இலாபம் ரூ.45.22 இலட்சம் கிடைத்திருக்கிறது. 134 பேர் தற்காலிகப் பணியாளர்களாக, தோட்ட வேலை போன்ற பணிகளைச் செய்து வருகின்றார்கள். பல்வேறு நிறுவனங்களிலிருந்து மாற்று அடிப்படையில், deputation என்ற பெயரில் பணியாளர்கள் அங்கே பணியாற்றுகிறார்கள். ஆகவே மொத்தப் பணியாளர்களுடைய நிலை இதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 638, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.



2000 மே 15]

**638—**

**கால்நடை மருந்தகம்**

***29371—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு கால்நடைப் பாரமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001-ஆம் ஆண்டிற்கான அண்ணா மறுமலர்ச்சி கிராமமான கலையூரில் கால்நடைக் கிளை மருந்தகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

கி.பி. 2000-2001-ஆம் ஆண்டிற்கான அண்ணா மறுமலர்ச்சி கிராமமான கலையூரில் கால்நடைக் கிளை நிலையம் தொடங்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மக்களுக்கு மட்டுமல்ல, மாக்களுக்கும் பாதுகாப்பு தருகின்ற திட்டங்களைத் தீட்டி இந்த அரசு செயல்பட்டு வருகின்றது. கலையூர் கிராமமானது பிரதான சாலையிலிருந்து வெகு தொலைவிலே இருக்கிற காரணத்தாலும் ஆதிதிராவிடப் பெருமக்கள் அங்கே அதிகம் வாழ்ந்து வருகிற காரணத்தாலும், பக்கத்தில் சுமார் 6 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அரியனேந்தல் கிராமத்திற்கு தினமும் கால்நடைகளைக் கொண்டு செல்கிற ஒரு நிலையிருக்கிற காரணத்தாலும் மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படுகின்ற கிராமங்களிலாவது பார்வைக் கிளை நிலையங்களை அமைத்துத்தர அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கலையூர் கிராமமானது இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்திருக்கிறது. மேலும் இந்த ஊராட்சி ஒன்றியத்தில் பரமக்குடியில் ஒரு கால்நடை மருத்துவமனையும், பார்த்திபனூர், பாம்பூர் ஆகிய இரண்டு இடங்களில் கால்நடை

[2000 மே 15

மருந்தகங்களும், பிடாரச்சேரி, சுழுதக்குடி, எமனேஸ்வரம், மேலாயக்குடி, நெடுங்குளம், அரியனேந்தல் ஆகிய 6 இடங்களில் கால்நடைக் கிளை நிலையங்களும், இவற்றிற்கு முறையே புதுக்குடி, கீழப்பெருங்கரை, இ.சுத்தனேந்தல், விளத்தூர், பெருமாள்கோவில், உரப்புளி ஆகிய 6 இடங்களில் பார்வைக் கிளை நிலையங்களும் தற்போது செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் கலையூர் கிராமத்தைச் சுற்றியுள்ள சுமார் 4 கிலோ மீட்டர் தொலைவில் போகலூர் ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள அரியனேந்தல் கால்நடைக் கிளை நிலையம் மூலமாகவும், சுமார் 5. கி.மீ. தொலைவிலுள்ள முதுகளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள மஞ்சூர் கால்நடை மருந்தகத்தின் மூலமும், அப்பகுதி கால்நடைகளுக்குத் தற்போது சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட சிறப்புக் கால்நடைப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலமும், அந்தப் பகுதிகளில் உள்ள கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. எதிர்வரும் காலங்களில், கலையூரில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டும், அரசின் நிதிநிலைமையைக் கருத்திற்கொண்டும், கால்நடை மருந்தகம் அமைப்பது குறித்து பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கடந்த ஒரு வார காலமாக கால்நடை மருத்துவர்கள், மத்திய அரசுக்கு இணையான ஊதியம் வேண்டுமென்று போராட்டம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுகுறித்து நீங்கள் ஏற்கெனவே தீர்மானம் கொடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே பதில் சொல்லி விட்டார்களே, பிறகு திரும்பவும் என்ன கேட்கிறீர்கள்?

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊதியம் வேண்டுமென்று போராட்டம் நடத்தி வருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட கருணை உள்ளத்தோடு அன்றைக்கு பதிலளிக்கிறபோது, Veterinary Assistant Surgeon என்கிற ஒரு Post இல்லை என்கிற தகவலைச் சொன்னார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத்



2000 மே 15]

தவறான தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறதோ என்கிற ஐயம் எனக்கு இருக்கிறது. அதை நிரூபிப்பதற்கும், மத்திய சர்க்காரிலே Gazette வெளியிட்டதற்கும் நான் ஆதாரம் சமர்ப்பிப்பதற்குத் தயாராக இருக்கிறேன். அப்படி நாங்கள் நிரூபித்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு, அவர்களுடைய வேண்டுகோளைப் பரிசீலித்து, மத்திய அரசுக்கு இணையான ஊதியத்தை வழங்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். மத்திய அரசில் கால்நடை உதவி மருத்துவர்கள் என்ற ஒரு பதவியே இல்லை என்பது உண்மைதான். ஆனால் புதுச்சேரி, அந்தமான் போன்ற நேரடி ஆட்சிமுறை இல்லாத பகுதிகளில், அப்படி வேண்டுமானால் இருக்கலாம். அது முழுமையாகப் பரிசீலிக்கப்பட்டு, மத்திய அரசில் இருந்து வாங்கப்பட்டுத்தான், நிதித் துறையின் மூலமாக அளிக்கப்பட்டுத்தான், அந்த பதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அளிக்கப்பட்டிருக்கிறது. கால்நடை மருத்துவர்கள்தான் அங்கே இருக்கிறார்கள். கால்நடை உதவி மருத்துவர்கள் என்பது அங்கு இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாக பதில் அளித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 639, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**639—**

**பள்ளி தொடங்குதல்**

***23023—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டத்தில் காது கேளாதோர் மற்றும் பார்வையற்றோர் பள்ளி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

[2000 மே 15

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை மாவட்டத்தில், காது கேளாதோர் மற்றும் பார்வையற்றோருக்கு பள்ளி தொடங்க அரசுக்குக் கருத்துரு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்திலே இன்றைக்கு ஒதுக்கப்பட்டவர்களாக காது கேளாதவர்களும், பார்வையற்றவர்களும் இருக்கின்றார்கள். அவர்கள் கல்வித் தகுதி பெற்று, ஏதாவது வேலை தேடி பிழைத்துக்கொள்வதற்கு, மாவட்டத்திற்கு ஒரு காது கேளாதோர் பள்ளி என்ற நிலையை உருவாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்படியாவது முயற்சி செய்வார்களா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்வையற்றோருக்காக அரசின் சார்பில் 11 பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. காது கேளாதோருக்கான பள்ளிகள் 10 இடங்களிலும், நகராட்சிகள் சார்பிலே ஒன்றும் மாநகராட்சி சார்பிலே ஒன்றும் ஆக 12 பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. மாவட்டந்தோறும், இவர்களுக்கான பள்ளிகளைத் தொடங்குவதற்கு அரசுக்கு எண்ணமில்லை. தனியார் தொண்டு நிறுவனங்கள் முன்வரும் என்று சொன்னால், அந்தத் தொண்டு நிறுவனங்களுக்கு, அங்கு சேர்ந்து பயிலும் மாணவர்களுக்கான பராமரிப்பு உதவித் தொகையை அரசு வழங்கி வருகின்றது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டபடி, திருவண்ணாமலை மாவட்டத்திலே, சூசை நகர் என்ற பகுதியில், பார்வையற்றோருக்கான ஒரு பள்ளி, அமலராகினி என்ற பெயரிலே இயங்கி வருகின்றது. 53 மாணவர்கள் அங்கு பயின்று வருகிறார்கள். காது கேளாதோருக்கான பள்ளி, ரங்கம்மாள் மெமோரியல் பள்ளி என்ற பெயரில், சம்மதனூர் என்ற கிராமத்திலே நடைபெற்று வருகின்றது. 200-க்கும் மேற்பட்ட மாணவர்கள் அங்கு பயின்று வருகிறார்கள். எனவே உறுப்பினர் யாருக்கேனும் அந்தப் பள்ளியில் சேர அனுமதி வேண்டுமென்று விரும்பினால், அந்த அனுமதியைப் பெற்றுத்தர அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2000 மே 15]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 640, திரு. ஏ.வி.ஏ. நாசர், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**640—**

**மனைப் பட்டா**

***5383—திரு. ஏ.வி.ஏ. நாசர்:**

*மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், கிள்ளை பேரூராட்சிக்குட்பட்ட சிங்காரக்குப்பம், கலைஞர் நகர், இருளர் காலனியில் வசிக்கும் மக்களுக்கு, அவர்கள் வசிக்கும் அந்த இடத்தையே மனைப் பட்டாவாக வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், கிள்ளை பேரூராட்சிக்குட்பட்ட சிங்காரக்குப்பம் கலைஞர் நகர், இருளர் காலனியில் வசிக்கும் மக்களுக்கு ஏற்கெனவே வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு விட்டது.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது 1996 ஆம் ஆண்டு கேட்கப்பட்ட வினா. இப்போதுதான் பதில் வருகின்றது. அவர்களுக்கு மனைப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டும், இன்னும் அந்த மனைகள் அளந்து, பிரித்துக் கொடுக்கப்படவில்லை. எனவே அதுகுறித்து அரசு ஆவன செய்து, உடனடியாக அதைப் பிரித்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுமனைப் பட்டாக்கள் மொத்தம் 131 வழங்கப்பட்டு இருக்கின்றன. பல்வேறு தேதிகளில் — 10-3-1987-ல் 21 பட்டாக்களும், 14-5-1993-ல் 95 பட்டாக்களும், 13-1-2000-ல்

[2000 மே 15

15 பட்டாக்களும் வழங்கப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் பிரித்து, அளந்து கொடுக்கவில்லை என்று புகார் கூறுகின்றார். தகுந்த அதிகாரிகளிடம் அதுபற்றி அறிக்கையைக் கேட்டு, நடவடிக்கை எடுத்து விரைவில் பகிர்ந்து அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[*குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

*முற்பகல் 10-25*

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கக் கோரிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, நெசவாளர்களுக்கு இலவசமாக மின்சாரம் வழங்க வேண்டிய அவசியம் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ச. அழகிரி, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. இ.ஏ.பி. சிவாஜி ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்புக்கான அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களைப் பேச அழைக்கின்றேன். சுருக்கமாகப் பேச வேண்டும்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

## 3. ஒழுங்குப் பிரச்சினை

### பாரதிய ஜனதா கட்சி பொதுச் செயலாளர் பெயர் தவறாகக் குறிப்பிடப்பட்டது

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, Point of Order.

**HON. SPEAKER:** What is the Point of Order?



2000 மே 15]

**THIRU B. VENKATASAMY:** At the time of question hour, our Hon. Member Tamaraikani was telling jokingly `Vengaaya Naidu'. It is not `Vengaaya Naidu'. I wanted to inform you that his name is `Vengaiya Naidu' and at the same time, I request ......

**HON. SPEAKER:** The Hon. Minister himself has corrected it. Therefore, there is no Point of Order in it. (Interruption) No. No. The correction will find a place in the record. You please sit down.

**THIRU B. VENKATASAMY:** Point of Order.

**HON. SPEAKER:** No. There is no Point of Order. Please sit down. It is already in the record. You please sit down.

**THIRU B. VENKATASAMY:** I request you to remove that portion.

**HON. SPEAKER:** No. No. There is no question of removal. The Member's remark and the Minister's clarification will find a place in the record.

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### (அ) நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கக் கோரிக்கை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் பேசுங்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர்களைப் பற்றிய சிறப்புக் கவன ஈர்ப்பிலே பேசுவதற்கு முன்பாக, பிறப்பால் விவசாயியாகவும், உணர்வால் நெசவாளியாகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற எங்கள் அன்புத் தலைவர் மூப்பனார் அவர்களுடைய அன்பினைப் போற்றி ஆரம்பிக்கின்றேன். இப்போது நாட்டிலே வாழ்கின்ற விவசாயிகளுடைய எண்ணிக்கைக்கு அடுத்தபடியாக இருக்கின்றவர்கள் நெசவாளிகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஆரம்பிப்பதைப் பார்த்தாலே ஒரு பெரிய சொற்பொழிவு ஆற்றப்போகிற மாதிரி தெரிகிறது. இதை நான் அனுமதிக்கமாட்டேன். ரொம்ப சுருக்கமாகப் பேச வேண்டும். ஏனென்றால் நீங்கள் முன்னுரை போடுவதிலேயே எனக்குக் கொஞ்சம் பயம் வந்து விட்டது.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இப்போது விவசாயிகளுடைய எண்ணிக்கைக்கு அடுத்தபடியாக இருக்கின்றவர்கள் நெசவாளர்கள். நவீன யுகத்திலே. 2004-லே W.T.O. என்று சொல்லப்படுகின்ற உலக வர்த்தகச் சந்தை இங்கே திறக்கப்படுகிறபோது, இங்கிருக்கிற நெசவாளர்களெல்லாம் நிச்சயமாகத் தங்களை நவீனப்படுத்திக்கொள்வது அவசியம் என்பதை அரசு மறுக்காது என்பதை நம்புகின்றேன். பொதுவாக தமிழக முதல்வர் அவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் தங்களுடைய பொதுவாழ்க்கையை ஆரம்பிக்கிறபோது, கையெழுத்துப் பிரதியில் ஆரம்பித்து இன்று website-க்கு வந்திருக்கிறார்கள். கையெழுத்துப் பிரதிக்கும், website-க்கும் இருக்கிற நீண்ட தூரம், நீண்ட இடைவெளி, நீண்ட தலைமுறை உங்களுக்கெல்லாம், நமக்கெல்லாம் நன்றாகத் தெரியும். ஆகவே conversion என்பது தவிர்க்க முடியாத ஒன்று. எனவே கைத்தறியை விசைத்தறியாக மாற்ற வேண்டியது மிகமிக அவசியம் என்பதை யாரும் மறுக்க இயலாது, மறுக்க முடியாது.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், விசைத்தறி நெசவாளர்கள் என்பவர்கள் கைத்தறியையே மாற்றிக்கொண்டு, தாங்கள் வாழ்கின்ற இல்லத்திலே சாதாரண குடிசையிலே, ஓலை வீட்டிலே அவர்கள் ஒரு சாதாரண Motor-ஐ வைத்துக்கொண்டு உள்ளார்கள். இயந்திரமயமாக்கப்பட்ட கைத்தறி (Mechanised handloom) என்றுதான் சொல்ல வேண்டும். அப்படிப்பட்ட தொழில் செய்து கொண்டிருக்கிறார்கள். 5 H.P-க்குக் குறைவான இயந்திரம் வைத்துள்ள நெசவாளப் பெருமக்கள் இப்போது ஏறக்குறைய 60 சதவீதத்திற்கு மேலாக இருக்கிறார்கள். இந்தியாவிலே இருக்கிற நெசவாளர்கள் எண்ணிக்கை என்று பார்த்தால், 75% விசைத்தறி நெசவாளர்கள்தான் மிகுந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய வாழ்வு வளமாக இருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. அவர்களுடைய வாழ்வு வளம் குன்றியிருக்கிறது. அவர்கள் வாங்கிய கடனை அடைக்க முடியாமல் நடுத் தெருவிலே நிற்கின்றார்கள். அவர்கள் வாங்கிய கடனையெல்லாம் திருப்பித் தரமுடியாமல், இப்போது TIIC போன்ற நிறுவனங்களெல்லாம் ஜப்தி நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றன. இதற்கு என்ன காரணம் என்றால், உற்பத்தித் திறன், Order குறைவு என்று சொன்னாலும்கூட மிகப் பெரிய பளுவாக இருப்பது மின்கட்டணம் என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

நம்முடைய அண்டை மாநிலமான ஆந்திரப் பிரதேசத்தில் அரசாணையை மிகத் தெளிவாக வெளியிட்டிருக்கிறார்கள். 1996 ஆம் ஆண்டு வெளியிட்ட ஆந்திரப் பிரதேச அரசாணையை மாண்புமிகு



222391



மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம் நேரடியாகக் கொடுத்திருக்கின்றேன். நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய பார்வைக்கும் கொண்டு வந்திருக்கின்றேன். அதிலே அவர்கள் தெளிவாகக் குறிப்பிடுகிறார்கள் 5 H.P.க்குக் குறைவாக இயந்திரம் வைத்திருக்கிற நெசவாளர்களுடைய தொழில், குடிசைத் தொழிலாகப் பாவிக்கப்படும்; எந்தவொரு மீட்டர் கட்டணமும் வசூலிக்கப்படாமல், யூனிட்டுக்கு 1-20 பைசா என்ற விகிதத்திலே அவர்கள் எந்த அளவுக்கு மின்சாரத்தைப் பயன்படுத்தினாலும் uniform tariff என்ற முறையில் மின்கட்டணத்தை வசூல் செய்கின்றார்கள். மிகத் தெளிவாகக் கொடுத்திருக்கிறார்கள். அந்த வீட்டுக்குத் தேவையான மின்வசதி, மின்சார விளக்கு போன்ற அத்தனையையும் அதிலே பயன்படுத்திக்கொள்ளலாம் என்று மிகத் தெளிவாக எந்தவித சந்தேகத்திற்கும் இடமில்லாது அதைக் கொடுத்திருக்கிறார்கள். விசைத்தறி நெசவாளர்களுக்கு மிகப் பெரிய ஆபத்து காத்து இருக்கிறது. எப்படி 2001 நமக்கு வெகு தொலைவில் இல்லையோ, எப்படி நம்மை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறதோ, அரசியல்வாதிகளையும், அரசியல் கட்சிகளையும் எப்படி அச்சுறுத்திக் கொண்டிருக்கிறதோ அதேபோல, 2004 என்பது நெசவாளர் குடும்பங்களை அச்சுறுத்திக்கொண்டிருக்கிறது. ஆகவே அந்த அச்சுறுத்தலுக்கு ஆளாகாமல், அவர்களுடைய வாழ்வினைப் பாதுகாக்கும்பொருட்டு, அவர்கள் வாழ்வுரிமை பெறும்பொருட்டு, இந்த அரசு ஒரு நல்ல முடிவை எடுத்து அவர்களுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நினைவாற்றலில் யாருக்கும் சளைத்தவர் அல்ல. 1991ஆம் ஆண்டு ஏப்ரல் 28 அன்று அவர்கள் எழுத்து மூலமாகக் கொடுத்த வாக்குறுதியை அவர்கள் மறந்திருக்கமாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். அந்த வாக்குறுதியின் பிரகாரம் நெசவாளர் பெருமக்களையெல்லாம் மகிழ்விக்கின்ற வண்ணம், சிறு நெசவாளர்கள் மகிழ்கின்ற வண்ணம், அவர்களுக்கு மாத்திரமே—confined to the Small Scale Weavers அவர்களுக்கு மட்டுமே—பயன்படக்கூடிய அளவிற்கு நிச்சயமாக நல்லதொரு positive reply-யை, தகுந்த பதிலை, சாதகமான பதிலை அளிப்பார் என்று நம்புகின்றேன். விவாதத்திற்கும், வாதத்திற்கும் பொருளானதல்ல. ஏனென்றால் இது வாழ்வுறுதி பற்றிய பிரச்சினை. ஆகவே இதில் இல்லை என்ற பதிலை எதிர்பார்க்கவில்லை. ஆண்டவனைப் பார்த்துச் சொல்லுகின்றபோது 'அருளே, திருவே இதுவே தருணம்' என்று சொல்லுவார்கள். அதுபோல நம்முடைய மாண்புமிகு முதல்வர்

V2h,21'900 P00.1062

அவர்களைப் பார்த்துக் கேட்கின்றேன். இந்த ஆபத்திலிருந்து உதவுவதற்கு இதுவே தருணம்; நீங்கள் கருணை காட்டுங்கள் என்று கேட்டுக்கொண்டு நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

(முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்கள் விசைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்க வேண்டும் என்பதற்கான காரண காரியங்களை எல்லாம் எடுத்துச் சொல்லி அவரே ஆந்திர அரசாங்கத்தை முன்னுதாரணமாகக் காட்டி நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய பெரும்பாலான விசைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்க வேண்டும் என்று தெரிவித்தார்கள். ஒரு முக்கியமான செய்தியை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இலவச மின்சாரத்தை இப்போது விவசாயிகளுக்குக் கொடுத்துக்கொண்டு இருக்கின்றோம். அதுபோல குடிசையிலே வாழக்கூடிய ஏழை எளியவர்களுக்கு ஒரு விளக்குத் திட்டத்திற்கு நாம் இலவச மின்சாரம் கொடுக்கின்றோம். நான் உண்மையிலே சொல்லுகின்றேன். குடிசைகளிலே வாழக்கூடியவர்கள் எவரும் ஒரு விளக்குடன் வாழ்வதில்லை. அவர்கள் வீட்டிலே radio இருக்கிறது. சில வீடுகளிலே T.V. இருக்கிறது. சில வீடுகளிலே grinder கூட இருக்கிறது. அப்படியெல்லாம் வைத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னபோதுகூட முதலமைச்சர் அவர்கள் அதிலே நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தால் மறுபடியும் பிரச்சினையாகும், பொறுத்துக்கொள்ளலாம், பொறுத்து இருங்கள் என்று இலாக்காவிற்கு அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். ஒரு யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு ரூ. 2.80 ஆகிறது. ஆனால் மின்சாரத்தைப் பயன்படுத்துகின்ற 3.5 இலட்சம் ஏழைகளுக்கு நாம் 0.80 பைசாவுக்கு மின்சாரத்தை வீட்டு உபயோகத்திற்காகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். விவசாயத்திற்கு இலவச மின்சாரம்; அதைப்போலவே குடிசையிலே வாழ்கின்றவர்களுக்கு இலவச மின்சாரம்; 3.5 இலட்சம் ஏழை எளியவர்களுக்கு குறைந்த விலையிலே மின்சாரம் என்று கொடுப்பதால் ஆண்டு ஒன்றுக்கு 1,200 கோடி ரூபாய் இழப்பிலே மின்சார வாரியம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. நம்முடைய மத்திய அரசாங்கம், அதைப்போல நிதி நிறுவனங்கள், உலக வங்கி அத்தனையும் தமிழக



அரசுக்கு மிகவும் தொல்லை கொடுத்துக்கொண்டிருக்கின்றன. நீங்கள் இதையெல்லாம் இலவசமாகக் கொடுத்தால் எதிர்காலத்தில் உங்களுடைய திட்டங்களுக்கு நிதியுதவி செய்யவே முடியாது என்று அச்சுறுத்திக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும்கூட கொடுக்கப்பட்ட அந்தச் சலுகைகளை இரத்து செய்யக்கூடாது என்பதிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உறுதியாக இருக்கின்ற காரணத்தினாலே இதுவரையிலே அந்தச் சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இப்போது ஆந்திரத்திலே வழங்குவதாகச் சொன்னார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலே ஒரு மாதத்திற்கு 250 யூனிட் வரை — ஏனென்றால் சாதாரண கைத்தறி நெசவாளர்கள் ½ H.P., 1 H.P., 5 H.P. வரையிலே வைத்து இருக்கின்றவர்கள் 250 யூனிட்டுக்கு மேலே பயன்படுத்த மாட்டார்கள். அதுவரையிலே பயன்படுத்துகின்றவர்களுக்கு ஒரு யூனிட்டுக்கு ரூ. 1.40 காசுதான் கட்டணம் வசூலிக்கின்றோம். நமக்கு உற்பத்திச் செலவு ரூ. 2.80 வெறும் மின்சாரக் கட்டணம் மட்டும். அது இல்லாமல் line loss, அதற்குப் பிறகு ஊழியர்களுடைய சம்பளம், இதையெல்லாம் சேர்த்தால் கிட்டத்தட்ட யூனிட்டுக்கு ரூ. 3.50 ஆகிறது. இருந்தாலும் கூட ரூ. 2.80-க்கு உற்பத்தி செய்து, ரூ. 1.40 காசுக்கு நாம் மின்சாரத்தை அவர்களுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். நிலைக் கட்டணம் என்று சொல்லி, ஒரு மின் இணைப்பிற்கு நாம் 30 ரூபாயை அவர்களிடத்திலே வாங்குகிறோம். இதையும் சேர்த்து நாம் மொத்தத்திலே பார்த்தால், ஒரு யூனிட்டுக்கு ரூ. 1.52 காசுவீதம் 250 யூனிட் பயன்படுத்துகின்ற நெசவாளர்களிடம் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் ஆந்திராவைப்பற்றிச் சொன்னார். அவர்கள் ரூ.1.20 காசு வசூலிப்பது உண்மை. ஆனால் ஒரு Horse Power-க்கு ரூ.10.00 என்று சொல்லி, 5 Horse Power-க்கு ரூ.50.00 வாங்குகிறார்கள். அதையும் சேர்த்துப் பார்த்தால் 1 யூனிட்டுக்கு ஆந்திராவிலே ரூ.1.40 காசு இன்றையதினம் வசூலிக்கப்படுகிறது. தமிழ்நாடு மின்சார வாரியக் கட்டணத்தைவிட ஆந்திரா மின்சார வாரியக் கட்டணம் ஒரு யூனிட்டுக்கு 12 பைசா குறைவாக இருப்பதுபோல் தோன்றினாலும், அந்தச் சலுகைக் கட்டணம் ஆந்திர மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையிலே 5 குதிரைத்திறன் உபயோகத்திற்கு மட்டும்தான் அவர்கள் அனுமதிக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலே 10 குதிரைத் திறன் அளவுக்கு மின்சாரத்தைப் பயன்படுத்திக்கொள்ள நெசவாளர்களை அனுமதிக்கிறோம். எனவே இப்படிப்பட்ட சூழ்நிலையிலே நாம் மேலும் கைத்தறி நெசவாளர்களுக்கு, விசைத்தறியைப் பயன்படுத்துகின்றவர்களுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கக்கூடிய சூழ்நிலையிலே மின்சார வாரியம் இல்லை

என்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினருக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டினுடைய நன்மையைக் கருதி, மின்சார இலாகாவினுடைய நன்மையைக் கருதி மாண்புமிகு உறுப்பினர்கள் இதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். மின்சார இலாகா இதே நிலையில் நீடிக்குமானால் 10 ஆண்டு காலம் கழித்து இழுத்து மூட வேண்டிய நிலை வந்துவிடுமோ என்ற அச்சம்கூட எங்களுக்கு ஏற்படுகிறது. எனவே இந்தச் சூழ்நிலையிலேதான் கைத்தறி நெசவாளர்களுக்கு இலவசமாக மின்சாரம் வழங்குவதற்கு இயலவில்லையே தவிர, முடியவில்லை என்பது அர்த்தமல்ல.

முற்பகல் 10-35

**Dr. E.S.S. RAMAN:** Point of Order.

**HON. SPEAKER:** No Point of Order. I do not allow the Point of Order. Please sit down.

### (ஆ) நெல்லை, களக்காடு பகுதியில் சூறாவளிக் காற்றால் வாழை மரங்கள் சேதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து நெல்லை மாவட்டம், களக்காடு பகுதியில் சூறாவளிக் காற்றால் வாழை மரங்கள் சேதம் அடைந்தது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மு. அப்பாவு, திரு. எஸ்.வி. கிருஷ்ணன், திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்புக்கான அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் திரு. மு. அப்பாவு. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, No. Reply கிடையாது. டாக்டர் இராமன். நீங்கள் நேரே போய் represent பண்ணுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருகிறீர்களா, இல்லையா? I have not given you permission. You must resume your seat. (Interruption) No. I am not allowing. திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் களக்காடு பகுதியில் களக்காடு, சிதம்பரபுரம், மாவடி, மீனவன்குளம், ஏர்வாடி, திருக்கரன்குடி, கீழபத்தை, மேலபத்தை,





கள்ளிக்குளம், துவரங்குளம், பெருமாள்குளம், கருவிலங்குளம் போன்ற பகுதிகளில் விவசாயிகள் வாழை பயிரிட்டிருந்தார்கள். வாழை பயிரிடுவது பற்றி உங்களுக்குத் தெரியும். ஓராண்டு காலமாக வாழையைக் கண்போல் காத்து அதற்கு உரம் எல்லாம் இட்டு ஒரு வாழைக்கு கிட்டத்தட்ட 50 ரூபாய் செலவு செய்தால்தான் ஒரு வாழையைப் பலன் கொடுக்கின்ற நிலைக்குக் கொண்டு வர முடியும். இந்த நிலையில் கடந்த 2-5-2000 அன்று மாலை 5 மணி அளவில் கடுமையான சூறாவளிக் காற்றோடு பெய்த மழையின் காரணத்தினால் கிட்டத்தட்ட ஒரு மாத காலத்திற்குள் பலன் அளிக்க இருக்கும் 25 இலட்சம் வாழைகள் அரை விளைச்சல், முக்கால் விளைச்சல் என்ற நிலையில் இருக்கிற வாழைகள் சேதம் அடைந்து அதனால் ஆயிரக்கணக்கான விவசாயக் குடும்பங்கள் என்ன செய்வது என்று அறியாமல் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மீண்டும் தங்களால் வாழ முடியுமா என்று எண்ணும் நிலைக்கே சென்றுவிட்டார்கள். விவசாயப் பொருட்களின் விலை குறைந்துகொண்டே வருகின்றது. அதோடு மட்டுமல்லாமல், இந்த வாழை மரமானது ஓராண்டுக் காலத்திற்குப் பின்புதான் பயன் அளிக்கின்ற நிலையிருக்கிறது. திடீரென்று அடித்த சூறாவளிக் காற்றினால் ஏழை விவசாயிகள் பாதிக்கப்பட்டு நிலை குலைந்துள்ளார்கள். ஆகவே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு அந்தப் பகுதியில் சூறாவளிக் காற்றினால் அழிந்த வாழை ஒன்றுக்கு ரூ.100 வீதம் நட்ட ஈடாக விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும். வருங்காலங்களில் விவசாயிகள் பயிரிடுகின்ற வாழை மரங்களுக்கு அரசே Insurance திட்டத்தை அறிமுகப்படுத்தி ஒரு வாழைக்கு எவ்வளவு Insurance பணம் கட்ட வேண்டுமோ அதையும் இந்த அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும். விவசாய அலுவலர்கள் மூலமாக அறிந்து தெரிந்து விவசாயிகள் விவசாயம் செய்கின்ற வாழை மரத்திற்கு Insurance தொகையையும் அரசே கட்ட வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்தச் சூறாவளியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வாழை ஒன்றுக்கு 50 ரூபாய் வீதம் உடனடியாக நீங்கள் கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்தி அமர்கிறேன். கொடுப்பீர்களா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

*முற்பகல் 10-40*

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் 2-5-2000 அன்று சுமார் ஒரு மணி நேரம் வீசிய திடீர் சூறாவளிக் காற்றால் நாங்குநேரி வட்டம் களக்காட்டுக்கு அருகில் உள்ள துவரங்குளம், மீனவன்குளம், முதலிய 12 கிராமங்களில் விவசாயிகளுடைய வாழைத் தோட்டங்களில் குலை தள்ளிய நிலையிலிருந்த வாழை மரங்கள் ஒடிந்து விழுந்து முற்றிலும் சேதமடைந்துவிட்டதாக மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அரசுக்குச் செய்தி வந்துள்ளது. தகவல் அறிந்ததும் 3-5-2000 அன்று திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர், வேளாண்மைத் துறை அலுவலருடன் சென்று பாதிக்கப்பட்ட வாழைத் தோட்டங்களை விவசாயிகள் முன்னிலையில் நேரடியாகப் பார்வையிட்டு விவசாயிகளுக்கு ஆறுதல் கூறினார்கள். இந்தச் சூறாவளியால் களக்காடு, பத்தை, பத்மநேரி, கீழக்கருவேலங்குளம், தேவநல்லூர், கீழக்காடுவெட்டி, கள்ளிகுளம், சிங்கைகுளம், கூலம், கரந்தானேரி, சீவலப்பேரி, கோவிலம்மாள்புரம், ஆகிய 12 கிராமங்களில் வாழைமரங்கள் சேதமடைந்துள்ளன. மொத்தம் 743 விவசாயிகள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பின்னர் வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை மற்றும் வருவாய்த் துறை அலுவலர்கள் உதவியுடன் கூட்டாக பாதிக்கப்பட்ட வாழைகளை கணக்கெடுப்பு செய்ததில் 12 கிராமங்களில் 25 குக்கிராமங்களில் 114.20 எக்டர் பரப்பில் பயிரிடப்பட்டு இருந்த மொத்தம் 1,45,968 மரங்கள் சேதமடைந்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவி அளிக்கலாம் என திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்துள்ளார். அக்டோபர் திங்கள் முதல் டிசம்பர் திங்கள் வரையிலான வடகிழக்குப் பருவமழை காலத்தில் முழுவதும் சேதமடைந்த வாழைப் பயிர்களுக்கு மட்டும் பயிரிடப்பட்ட பரப்பளவின் அடிப்படையில் ஒரு ஹெக்டேருக்கு ரூ.4,000 வீதம் நிவாரணம் வழங்கப்படுகிறது. தற்போது, பருவமழை இல்லாத காலங்களில் இயற்கைச் சீற்றங்களினால் பாதிக்கப்படும் பயிர் வகைகளுக்கு நிவாரணம் வழங்கக் கோரும் கோரிக்கைகளை ஆராய்வதற்காக அரசு சார்பில் அமைக்கப்பட்டுள்ள, வருவாய்த் துறை அமைச்சரைத் தலைவராகவும், தலைமைச் செயலாளர் அவர்களை துணைத் தலைவராகவும், வருவாய்த் துறைச் செயலாளர் அவர்களை உறுப்பினர்-செயலாளராகவும் மற்றும் நிதித் துறை, ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,



வேளாண்மைத் துறை, பொதுப் பணித் துறை ஆகிய துறைகளின் செயலாளர்கள் மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட, உயர்மட்டக் குழு இது குறித்து ஆராய்ந்து பரிந்துரையை அளிக்கும். அப்பரிந்துரைகளைப் பெற்ற பின்னர் மாநில இயற்கைச் சீற்ற நிவாரண நிதியிலிருந்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் அளிப்பது குறித்து முடிவு எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து...

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு, டாக்டர் இராமனுக்கும் allow பண்ணவில்லை; உங்களுக்கும் allow பண்ணவில்லை. (குறுக்கீடுகள்)

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் allow பண்ணவில்லை என்றால் உட்கார வேண்டும். You are misbehaving in the House. Please sit down.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் தவறான தகவல்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, No. You give a Privilege Motion. I will consider it.

## 4. அறிவிப்பு

### சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு மேதகு ஆளுநர் அளிக்கும் விருந்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

மேதகு ஆளுநர் அவர்கள் 15-5-2000 இரவு 7-30 மணிக்கு ஆளுநர் மாளிகையில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கு விருந்து அளிக்க உள்ளார்கள். அதற்கான அழைப்பிதழ்கள் உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் விருந்தில் கலந்துகொள்ள ஏதுவாக இன்று மாலை சட்டமன்ற

உறுப்பினர்கள் விடுதியிலிருந்து ராஜ் பவன் வரையில் செல்வதற்கும், பின் திரும்புவதற்கும் தனிப் பேருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 2 - மாநில ஆயத் தீர்வைத் துறை—தொடர்ச்சி

### (ஆ) கோரிக்கை எண் 15 - காவல் துறை—தொடர்ச்சி

### (இ) கோரிக்கை எண் 16 - தீயணைப்புப் பணிகள்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 2000-2001 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை, மதுவிலக்கு மற்றும் தீயணைப்புத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல நான் விழைகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

முதலில் என்னுடைய தொகுதியினுடைய நீண்டகாலக் கோரிக்கைகளை முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். திருத்துறைப்பூண்டி தொகுதியில் உள்ள கோட்டூரிலே காவலர் குடியிருப்பும் காவல் நிலையமும் சிறந்த முறையில் கட்டப்பட்டு இருக்கின்றன; நன்றாகவே கட்டப்பட்டு இருக்கின்றன. ஆனால் திருத்துறைப்பூண்டி தாலுகா காவல் நிலையத்திற்குப் போதுமான இடவசதி இல்லை. குடியிருப்பதற்கான இடம் இருந்தும் பல ஆண்டு காலமாக காவலர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படாமல் இருக்கின்றது. அதையும் செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.



முற்பகல் 10-45

முத்துப்பேட்டை காவல் நிலையம் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது. காவல் நிலையம் மற்றும் காவலர் குடியிருப்புகள் கட்டுவதற்குப் போதுமான இடம் இருந்தும்கூட அவை கட்டப்படாமல் இருக்கின்றன. அதையும் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, கோட்டூர் போன்ற இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு நீண்டகாலமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. 1996 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் பொறுப்புக்கு வந்த பின்னால் கோட்டூர், முத்துப்பேட்டை ஆகிய இடங்களில் புதிய தீயணைப்பு நிலையங்களை வழங்கினார்கள். இன்றையதினம் அவை வாடகைக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. திருத்துறைப்பூண்டி தீயணைப்பு நிலையத்திற்கென போதுமான இடம் வாங்கப்பட்டு 7 ஆண்டுகள் ஆகியும் அங்கே தீயணைப்பு நிலையத்திற்கென கட்டடம் கட்டுவதற்கு அனுமதிக்கப்படாமல், நிதியொதுக்கப்படாமல் இருக்கிறது. அதையும் கட்டித் தர வேண்டுமென்று பணிவோடு, வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

கோவில்பட்டியிலே, கடலையூர் என்ற இடத்தில் காவல் நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டிருக்கிறார். அதைப்போல, திருப்பூரிலே மங்கலம் என்ற இடத்தில்—ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் சுப்பராயன் அவர்களுக்கு வாக்குறுதி தந்திருக்கிறார்கள்—காவல் நிலையத்தினை உருவாக்கித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பல ஆண்டு காலமாக இருக்கக்கூடிய இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவலர்களுடைய கோரிக்கைகள், ஊதியக் குழுவினுடைய பரிந்துரையில் காவலர்கள் ஊதியம் குறித்த முரண்பாட்டினை நீக்க வேண்டுமென்று அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். களப் பணியாளர்களுக்கு இணையாக அவர்களுக்குச் சலுகைகள் வேண்டுமென்று வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். இந்தச் சலுகைகளைப் பரிசீலிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவலர்கள் 25 ஆண்டு காலம் பணி புரிந்தால் அவர்களுக்கு உதவி ஆய்வாளர்கள் பதவி உயர்வு வழங்கப்படுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூடச் சொன்னார்கள். ஆனால் 32 ஆண்டு காலமாகப் பணியாற்றும் காவலர்களுக்குக்கூட பதவி உயர்வு வழங்கப்படாமல் இருக்கிறது என்று அவர்கள் கூறுகிறார்கள். இதையும் மாண்புமிகு முதல்வர் பரிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பிலே "குற்றங்களை பதிவு செய்வதிலேயும், வழக்குத் தொடர்வதிலேயும், தண்டனை பெற்றுக் கொடுப்பதிலேயும் இந்தியாவிலேயே தமிழ்நாடு காவல் துறை மிகச் சிறந்த முறையிலே செயலாற்றியிருக்கிறது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது உண்மையிலே வரவேற்கக்கூடியதுதான். நம்முடைய காவல் துறை மிகச் சிறந்த காவல் துறை. அதை நான் மறுப்பதற்கு இல்லை. மிகவும் நுட்பமான முறையிலே, நவீனமான முறையிலே பல்வேறு நிகழ்வுகளைக் கண்டுபிடித்து, அவர்கள்மீது வழக்குகளைத் தொடுத்து, அதன் மூலமாக தண்டனை பெற்றுக் கொடுப்பதிலே இந்தியாவிலேயே நம்முடைய காவல் துறைதான் உறுதியாக, மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது என்பதை நான் மறுப்பதற்கு இல்லை. ஆனால் அதேநேரத்தில் இன்னொன்றையும்—நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மட்டுமல்ல—காவல் துறையினர் குறிப்பாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்பிலே 15,984 பெரிய திருட்டுக்கள் நடந்திருக்கின்றன என்றும், இதில் 12 ஆயிரத்திற்கு மேற்பட்டவை கண்டுபிடிக்கப்பட்டு வழக்குகள் போடப் பட்டிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதுகுறித்து ஆண்டுவாரியான பட்டியலும் இதில் இருக்கிறது. இதைப் பார்க்கிறபோது எண்ணிக்கை கூடியிருக்கிறதே தவிர பெரிய திருட்டுக்கள் நடக்காமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. கண்டுபிடிக்கின்ற சதவீதத்தினை அதிகரித்திருந்தால் நன்றாக இருக்கும். ஆனால் பெரிய திருட்டுக்கள் நடந்து, அவற்றைக் கண்டுபிடித்திருப்பதை சாதனையாகச் சொல்லியிருப்பதை, எப்படி ஒரு சாதனையாகக் கருத முடியும்?

இப்போது திருட்டுக் குற்றங்கள், களவு போவது, கற்பழிப்பு, வரதட்சணைக் கொடுமை போன்ற சம்பவங்கள் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறதே தவிர கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை காவல் துறை எடுக்கவில்லை என்பதை காவல் துறை கொள்கை விளக்கக் குறிப்பு தெளிவுபடுத்தியிருக்கிறது. ஏனென்றால் இவையெல்லாம் குறைந்திருக்க வேண்டும். சென்ற ஆண்டு 15,000 பேர், அடுத்து இந்த ஆண்டு 10,000 பேர், 5,000 பேர் என்று குறைந்திருக்குமானால் காவல் துறையினுடைய சிறப்பான செயல்பாட்டை, அதனுடைய திறமையை வெளிப்படுத்தியிருக்க முடியும். களவு நடந்த பின்னால் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதை ஒரு சாதனையாகச் சொல்வது பொருத்தமற்ற செயலாக இருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.



இதுகுறித்த விவரங்களுக்குப் பின்னால் குறிப்பிடப்பட்டிருப்பது சிலைத் திருட்டுக்கள். இது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. ஏற்கெனவே அதிகமாக நடந்தது; அதற்குப் பின்னால் குறைந்தது. மீண்டும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஏற்கெனவே களவு போன சிலைகளே இன்னும் கண்டுபிடிக்கப்படாத சூழ்நிலை இருக்கிறது. அமெரிக்காவுக்குப் போன சிலையைக்கூட கண்டுபிடித்து திரும்பக் கொண்டு வந்தது காவல் துறையினுடைய சாதனை; அதைப்போன்று செய்ய வேண்டும்.

முற்பகல் 10-50

இரண்டாவது, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே ஒன்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கலவரங்கள், ஊர்வலங்கள், சாதிச் சண்டைகள் போன்ற சம்பவங்களிலே 17 அப்பாவி பொது மக்கள் செத்திருக்கிறார்கள். ஒரு குற்ற நிகழ்வில் போராட்டத்தில் ஈடுபடுகிற, சமூக விரோதக் காரியங்களில் ஈடுபடக்கூடிய சமூக விரோத சக்திகளைச் சுட்டதாக இல்லை. ஆனால் சாதாரண அப்பாவி மக்கள், துப்பாக்கிச் சூட்டில் 17 பேர் செத்திருக்கிறார்கள் என்று சொன்னால், அந்த அளவுக்குக் காவல் துறை அப்பாவி மக்களைச் சுடுகிற நிலையினை நாம் பார்க்க வேண்டும். யாரோ ஒருவன் கலவரம் செய்வான், அந்தப் பக்கத்திலே குறுக்கே போகிறவன், வருகின்றவன், அப்பாவிகள் மீது வழக்குப் போடுவது, அவர்களையும் சேர்த்து வழக்குத் தொடுப்பது காவல் துறையினருக்கு ஒரு கைவந்த கலையாக இருக்கிறது. ஒரு கூட்டத்தில் கலவரம் ஏற்படும்போது, 100 பேரைக் கைது செய்கிறார்கள், 1,000 பேரைக் கைது செய்கிறார்கள் என்று சொன்னால் பிறகு விசாரணையிலாவது அவர்கள் சம்பந்தப்படவில்லை, எனவே நீக்க வேண்டுமென்று சொன்னால் நீக்குவது கிடையாது. காவல் துறை அந்த வழக்கில் அவனைச் சேர்த்து உள்ளே

அனுப்புவதோடு அவன் தலையெழுத்து முடிந்து போகிறது. பலமுறை நம்முடைய மாவட்டத்திலே இதைக் காண முடிகிறது. மகன் திருமணத்திற்கு சாமான்கள் வாங்கிக்கொண்டு, தாலி வாங்கிக்கொண்டு போகிறான். இந்தக் கலவரம் நடக்கிறபோது அவனைக் கைது செய்கிறார்கள். அவனை என்ன செய்கிறார்கள் என்று கேட்டால், கலவரம் நடைபெறும்போது அவனை அழைத்துச் சென்றுவிடுகிறார்கள். அவன் என்னென்னவோ வாதாடிப் பார்க்கிறான். 'நாளைக்கு என்னுடைய மகனுக்குத் திருமணம், நான் தாலி கையிலே வைத்திருக்கிறேன்' என்று கூறுகிறான். 'யாரிடமாவது கொடுத்து அனுப்பி வைய்யா, உன்மீது வழக்குப் போட்டது போட்டதுதான்' என்று சொல்லக்கூடிய அளவுக்கு காவல் துறை மனிதாபிமானமற்ற முறையிலே செயல்படக்கூடிய நிலையில் இருக்கிறது. நல்ல பெயர் பெற்ற, பெருமைதரக்கூடிய காவல் நிர்வாகத்தில் கருப்பு ஆடுகளாக செயல்படக்கூடிய சில காவல் துறை அதிகாரிகளை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மற்றும் காவல் துறை கண்காணிக்க வேண்டும். இப்படிப்பட்ட நிலையிலிருந்து ம்ாறுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றை நான் உதாரணத்திற்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சிவகங்கை மாவட்டத்தில், தேவகோட்டை என்ற இடத்தில் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய செயலாளர், கால் ஊனமுற்றவர் அவர்—அங்கே இருக்கக்கூடிய உதவி ஆய்வாளர் திரு. சிவகுமார் என்பவர் சமூகவிரோத சக்திகளோடு தொடர்பு வைத்திருப்பவர், இரவு நேரங்களில் அவர் சாராய வியாபாரிகளோடு தொடர்பு வைத்திருப்பவர். அவர் மீது கம்யூனிஸ்ட் கட்சியினுடைய நகரச் செயலாளர், நகர் மன்ற உறுப்பினர் திரு. சுப்பிரமணி, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மகஜர் கொடுக்கிறார். அவர் மகஜர் கொடுத்தார் என்பதற்காக வேண்டுமென்றே அவர்மீது ஒரு வழக்கு போடப்பட்டிருக்கிறது. அந்த வழக்கே ஒரு வித்தியாசமான வழக்கு. இன்னும் சில விதிகளை ஏன் விட்டுவிட்டார்கள் என்று தெரியவில்லை. இப்போது அவர்மீது வழக்குத் தொடுக்கப்பட்டு குண்டர் சட்டத்தில் திருச்சி சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கிறார். இதை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். குற்ற எண் 206, 341, 556, 145, 235, 236, 237, 239, 240, 241, 247, 258, 379, 77, 379, மற்றும் 506 விதிகளின்படி சாதாரணமான அவர்மீது வழக்குப் போடப்பட்டிருக்கிறது. வழக்கு என்ன என்று கேட்டால் ஒன்றுமேயில்லை. 100 ரூபாய் வழிப்பறி



செய்தார், ஒரு கைக் கடிகாரத்தைத் திருடினார்; இதுதான் வழக்கு. ஒரு காவல் துறை ஆய்வாளர் இத்தனை வழக்குகளை அவர்மீது ஜோடித்து, குற்றம்சாட்டி, குண்டர் சட்டத்தில் அடைத்திருக்கிறார். இது ஏன் என்று கேட்டால், பழி வாங்குகின்ற ஒரு நோக்கம். காவல் துறையை எதிர்த்து சாதாரண அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள், பொதுமக்கள், சேவை மனப்பான்மை உள்ளவர்கள் யாரும் செயல்பட முடியாது. அப்படி ஒரு மனிதாபிமானமற்ற நிலையில் குண்டர் சட்டத்தில் அவர் அடைக்கப்பட்டிருக்கிறார். நான் வேண்டுமானால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே விவரங்களைக் கொடுக்கிறேன்.

அதுபோல இன்னும் ஒன்று. B.J.P. கட்சியினுடைய நகரச் செயலாளர் கதிர்வேலு காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கப்பட்டார். அதற்கு அரசியல் கட்சிகள் கடை அடைப்புகள் எல்லாம் செய்திருக்கிறார்கள். இதுவரையிலும் சம்பந்தப்பட்டவர்களை மாற்றவில்லை. நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, இதுபோன்ற காவல் துறை அதிகாரிகளை பத்து பைசாகூட லஞ்சம் பெற முடியாத துறையில், ஏதாவது ஓரிடத்தில் போடுங்கள். Suspend செய்ய வேண்டாம். தகவல் தொடர்புத் துறை என்று இருக்கும் பாருங்கள், அந்த மாதிரி துறையில் இதுபோன்ற காவல் ஆய்வாளர்களைப் போட நடவடிக்கை எடுக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) இப்போதுதான் நான் பேச ஆரம்பித்தேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 11 நிமிடங்களாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை. இப்போதுதான் பேச ஆரம்பித்தேன். சரியாகப் பாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் சரியாகப் பார்த்துதான் சொன்னேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** இன்னும் ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இந்தத் தகவல்கள் எல்லாம் முதலமைச்சரிடம் சொல்வதற்காக வந்திருக்கின்றன. முதலமைச்சருடைய தகவலுக்காக மனுக்களாக அனுப்பப் பட்டிருக்கின்றன.

பாபநாசம் காவல் நிலையத்தில் ஈச்சங்குடி மேலத்தெருவைச் சேர்ந்த முருகேசன் மற்றும் அவருடைய மனைவி மோகனாம்பாள், ஆடு

மேய்க்கப் போகிறபோது...... (குறுக்கீடு) ஏற்கெனவே சொல்லியாகிவிட்டது என்றால் விட்டுவிடுகிறேன். அடுத்த Subject-க்குப் போய்விடுகிறேன். இருப்பினும் இதுசம்பந்தமாக விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கபிஸ்தலம் என்ற இடத்தில் ஒரு காவல் நிலையம் இருக்கிறது. அங்கே சில ஆய்வாளர்கள் இருக்கிறார்கள். அந்தக் காவல் நிலையத்தை எடுத்துவிட்டால் நல்லது என்று நினைக்கிறேன். அது தேவையில்லை. அங்கு ஒன்றுமே நடப்பதில்லை. ஒரு மனு கொடுத்தாலும் வழக்கு பதிவு செய்யாமல் வாங்கிப் போட்டுவிடுகிறார்கள். அப்படி ஒரு காவல் நிலையம் அங்கே இருக்கிறது. நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோல திருவாரூர் மாவட்டத்தில் ஒரு சம்பவம். நான் போனபோது என்னிடத்தில் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூடச் சொல்வார்கள். முதலமைச்சர் அவர்களைச் சந்தித்துத் தெரிவிக்கவில்லை என்பதல்ல. புகார்களும், மனுக்களும் வந்த உடனே காலத்தோடு கொடுத்து முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று நான் குற்றம் சொல்ல மாட்டேன். ஏனென்றால் பொதுமக்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால் காவல் துறை மானியக் கோரிக்கைமீதான விவாதம் நடைபெறுகின்றபோதுதான் இந்த மனுக்களை அனுப்ப வேண்டும் என்ற உணர்வோடு அனுப்பி வைக்கிறார்கள். அதனால்தான் காலத்தோடு இவற்றைக் கொடுக்க முடியவில்லை. ஏனென்றால் முதலமைச்சர் அவர்கள் கேட்பார்கள். முன்பே வந்துவிட்ட இவற்றை, வைத்திருந்துதான், பேசிவிட்டுத்தான் கொடுக்க வேண்டுமா, முன்கூட்டியே கொடுத்திருந்தால் இவற்றின்மீது நடவடிக்கை எடுத்திருக்க மாட்டேனா என்று கேட்பார்கள். இரண்டு நாட்களுக்கு முன்புதான் இவையெல்லாம் வந்திருக்கின்றன. அதனால் காலத்தோடு அனுப்ப முடியவில்லை.

*முற்பகல் 10-55*

நெல்லை மாவட்டத்திலே ஒருவன் திருடிவிடுகிறான். திருடியவன் பெயர் சித்திரவேலு. 15 வருடங்களாக முத்துப்பேட்டை காவல் எல்லையில் கல் உடைக்கின்ற தொழிலாளியாக அவனது அண்ணன் இருக்கிறான். தம்பி திருடிவிட்டான் என்று சொல்லி அண்ணனைப் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள். இதுவரையில் அந்த ஆளை விடவில்லை. அந்த ஆள் எங்கே இருக்கிறார் என்று தெரியவில்லை. குண்டர் தடுப்புச் சட்டத்திலே போட்டார்களா என்றும் தெரியவில்லை. தம்பி திருடிவிட்டான் என்பதற்காக அண்ணனைப்



பிடித்துக்கொண்டுபோய் சித்திரவதை செய்கிறார்கள். கணவன் திருடிவிட்டான் என்றால் மனைவி யோக்கியமானவளாக இருந்தாலும் அவளைக் கொண்டுபோய் சித்திரவதை செய்கிறார்கள். ஆகவே இந்த நிலையிலிருந்து காவல் துறை ஒரு மாறுதலுக்கு வர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. ஜனநாயகபூர்வமான இயக்கங்கள் இப்போது ஆர்ப்பாட்டங்களையோ, ஊர்வலங்களையோ நடத்த முடிவதில்லை. சமூக விரோத சக்திகள், கடையை உடைப்பவர்கள், பேருந்தை உடைப்பவர்கள் எல்லாம் , ஊர்வலம் நடத்துகிறார்கள். அவற்றையெல்லாம்கூட அனுமதித்து விடுகிறார்கள். ஆனால் அரசியல் கட்சிகள் ஜனநாயக நாட்டிலே கோரிக்கைகளை வைத்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்பதற்காக நடத்தக்கூடிய ஊர்வலங்களுக்கு, ஆர்ப்பாட்டங்களுக்கெல்லாம் அனுமதி கொடுப்பதற்கு காவல் துறை மறுத்து விடுகிறது. ஆகவே தார்மீக முறையில் சில பொறுப்பு வாய்ந்த அரசியல் கட்சிகள், பொறுப்பு வாய்ந்த சங்கங்கள் நடத்தக்கூடிய ஊர்வலங்களுக்கு நீங்கள் அனுமதி வழங்க வேண்டும். ஏனென்றால் நம்முடைய நாடு என்ன சர்வாதிகார நாடா? சர்வாதிகார ஆட்சியா தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது? எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்துவிட்டால் தீர்வு காண்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் சில நேரங்களில் இப்படிப் போகக்கூடாது, அப்படிப் போகக்கூடாது, இதையெல்லாம் செய்யக்கூடாது என்று காவல் துறை சொன்னால் இது என்ன சர்வாதிகார நாடா? அப்படியா நாடு இருக்கிறது? அப்படிப்பட்ட இராணுவ ஆட்சி நடந்து கொண்டிருக்கிறதா? அப்படிப்பட்ட அதிகாரங்களை காவல் துறைக்குக் கொடுத்துவிட்டோமா? என்ன என்றே தெரியவில்லை. எனவே இப்படிப்பட்ட நிலைகளில் மாறுதல்களை நீங்கள் கொண்டுவர வேண்டும்; ஜனநாயகபூர்வமான கோரிக்கைகளுக்கு ஆதரவு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. சமீபத்திலே என்னுடைய மாவட்டத்திலே விவசாயிகளுடைய போராட்டம் நடைபெற்றது. அந்த விவசாயிகள் கடனிலிருந்து தங்களை விடுவிக்க வேண்டுமென்பதற்காக போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். தஞ்சாவூர், திருவாரூர், வேதாரண்யம்,

நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் விவசாயிகளைக் கைது செய்து எங்கே கொண்டு செல்கிறார்கள் என்றால், வேலூருக்குக் கொண்டு வருகிறார்கள். அரியலூருக்குக் கொண்டு வருகிறார்கள், கடலூருக்குக் கொண்டு வருகிறார்கள். பக்கத்திலே இருக்கின்ற திருச்சி ஜெயிலுக்குக் கொண்டு செல்லலாம் அல்லவா? வேலூர் ஜெயில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் தொகுதியில் இருக்கிறது. அங்கே குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை; அது ஜெயிலாகவும் இல்லை. விடுதலைப் புலிகள் எலிகளைப்போல ஓட்டை போட்டுவிட்டுச் சென்ற ஜெயில். அதிலே கொண்டுபோய் நம்முடைய விவசாயிகளைப் போடலாமா? என்ன கொடுமை என்பதைப் பாருங்கள். அங்கே மிகவும் மோசமான நிலை. ஏன் இப்படி சித்திரவதை செய்ய வேண்டும்? விவசாயிகள் எல்லாம் ஏற்கெனவே வேதனையில், துயரத்தில் சிக்கி மோசமான நிலையில் இருப்பவர்கள். (குறுக்கீடு) ஒரு நாளிலேயே ஏகப்பட்ட கஷ்டம். 4 நாட்கள் இருந்திருந்தால் பல விவசாயிகள் காலியாகி இருப்பார்கள். அதனால்தான் முதலமைச்சர் அவர்கள் விட்டுவிட்டார்கள். மிகவும் மோசமான நிலை. காவல் துறையினர் இப்படி பழிவாங்கும் நோக்கத்தோடு விவசாயிகளிடம் நடந்திருக்கக்கூடாது என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 15 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. ஜி. பழனிசாமி:** இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன். கள்ளச் சாராயம் பற்றி எனக்கு நல்ல அனுபவம் இருக்கிறது. கள்ளச் சாராயத்தைப் பொறுத்தவரையில்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்த அனுபவத்தை விரிவாக இரண்டு நிமிடங்களிலே சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** உங்களோடு சேர்ந்துதான், துணைச் சபாநாயகரோடு சேர்ந்துதான், நாம் இரண்டு பேரும் ஒன்றாகத்தான் செய்தோம்.

கள்ளச் சாராயத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய காவல் துறை மதுவிலக்குப் பிரிவு அதிகாரிகள் வெளியிட்டிருப்பது 4 மாதங்களிலே 39 கோடி ரூபாய் அளவுக்கு வாகனப் பறிமுதல், 1½ இலட்சம் பேர் மீது வழக்கு, கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லி, இப்போது



பத்திரிகைச் செய்தியில் பார்த்தேன். இதுகுறித்து நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால், காவல் துறையினர் அனுமதியில்லாமல், கள்ளச் சாராயம் காய்ச்சியவர்களையும், கடத்தியவர்களையும்தான் கைது செய்திருக்கிறார்கள். காவல் துறையின் அனுமதியோடு பல பேர் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் காவல் துறை கைது செய்யவில்லை, தொடவில்லை. கள்ளச் சாராயத்தையும் கிராமப்புறங்களில் இருக்கின்ற காவல் நிலையங்களையும் இரண்டாகப் பிரிப்பதற்கு ஏதாவது புதிய யோசனை இருந்தால் செய்து பாருங்கள். நான் ஏதோ காவல் துறையை ஒட்டுமொத்தமாகக் குற்றம் சொல்ல வேண்டும், களங்கம் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. அவ்வளவு மோசமாக இருக்கிறது. கணக்கில்லாத அளவுக்கு அதனுடைய பிரச்சினைகள் மேலோங்கி இருக்கின்றன. எனவே இதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

(முற்பகல் 11-00)

அடுத்து சாலை விபத்துக்கள். ஆங்காங்கே பல இடங்களிலே பார்த்தீர்களென்றால், இரவு நேரங்களிலே, 50 லாரிகளை, 100 லாரிகளை சாலைகளிலே நிறுத்தி, நம்முடைய போக்குவரத்து காவல் துறை அதிகாரிகள் ஏதேதோ பண்ணுகிறார்கள். சோதனைகளெல்லாம் நடைபெறுகின்றன. ஆனால் அவர்கள் அதோடு முடித்துவிட்டு வந்து விடுகிறார்கள். அதிவேகமாகப் போகிற வாகனங்களைக் கட்டுப்படுத்துவதற்கான அல்லது தண்டனை வழங்குவதற்கான விஷயங்கள் எதுவும் நடக்கவில்லை. நாள்தோறும் பார்த்தீர்களென்றால், தமிழகத்திலே வரலாறு காணாத அளவிற்கு விபத்துக்களாலே உயிர் இழப்புகள் ஏற்படுகின்றன. இதைத் தடுப்பதற்கு காவல் துறையை எந்த அளவிற்குப் பயன்படுத்தலாம்; அப்படி அதிவேகமாக, தாறுமாறாக ஓட்டக்கூடிய, குடி போதையிலே ஓட்டக்கூடிய driver-களை வாகனங்களை, எப்படியெல்லாம் seize செய்யலாம் என்பதைக் குறித்து நம்முடைய அதிகாரிகள் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். அப்படி எடுத்தால்தான்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர். (குறுக்கீடு) 17 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன.

**திரு. ஜி. பழனிசாமி:** அனுமதி கொடுங்கள். இவையெல்லாம் மிகவும் முக்கியம். உயிர்ப் பிரச்சினைகள் இவை. ஏனென்று கேட்டால், அவற்றையெல்லாம் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டும்.

சமீபத்தில் முதலமைச்சர் அவர்கள் சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்குப் போனார்கள். அங்கே அதிகமாக 60 கிலோ மீட்டர், 70 கிலோ மீட்டர் வேகத்தில் போகிற போக்குவரத்து வாகனங்களைப் படம் பிடித்துக் காட்டி, காவல் துறைக்குத் தகவல் கொடுக்கிற நவீனக் கருவிகள் எல்லாம் வந்திருக்கின்றன. தற்போது கணினி மயமாவதைப் பார்க்கிறோம்; பல நவீன முறைகளையெல்லாம் பார்க்கிறோம். அதேபோல் வாகனங்கள் வேகமாகப் போவதையெல்லாம் எளிய முறையிலே படம் எடுத்து, அதன் மீதான நடவடிக்கைகளை நம்முடைய அரசு எடுக்கும் என்று சொன்னால், ஓரளவிற்கு உயிர்களைப் பாதுகாக்க முடியும். எனவே வாகன விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு இந்த மாதிரி முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து காவல் துறையைப் பொறுத்த அளவில் எனக்கு முன்னால் பல உறுப்பினர்கள் பேசியிருந்தாலும், மனித நேயத்தோடு நடந்து கொள்ளக்கூடிய அளவிற்கு காவல் துறையினருக்கு பயிற்சிகளைக் கண்டிப்பாக வழங்க வேண்டும். பல அதிகாரிகள், நல்ல அதிகாரிகள், நேர்மையான அதிகாரிகளாக இருந்து ஓரிடத்திலே செயல்பட முடியவில்லை. எங்களுடைய முத்துப்பேட்டையிலே காவல் துறையினுடைய துணை ஆய்வாளரை, அந்த ஊர் மக்களே மாற்றக்கூடாது என்று சொல்கிறார்கள். அவர் அங்கேயே இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சரே, "இல்லப்பா, அந்த மாதிரி காவல் துறை அதிகாரிகள் எங்கள் ஊர் காவல் நிலையத்திலே இரண்டு நாட்களுக்கு இருந்தால்போதும்; அவரை அனுப்பி வையுங்கள்; இரண்டு மாதத்திற்குப் பிறகாவது நீங்கள் அழைத்துக்கொண்டு செல்லலாம்" என்று சொல்லக்கூடிய அளவுக்கு அதிகாரிகளும் இருக்கிறார்கள். நேர்மையான அதிகாரிகள் செயல்படுவதிலே மிகுந்த கஷ்டம் இருக்கிறது. ஆகையால் இந்தக் கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.



**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று மாநில ஆயத் தீர்வைத் துறை, காவல் துறை, தீயணைப்புப் பணிகள் ஆகிய மூன்று கோரிக்கைகளின்மீது இந்த அவையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த நம்முடைய தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய தமிழ்நாட்டைச் சுற்றி இன்று மிகப் பெரியதொரு போர் மேகம் சூழ்ந்திருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், விடுதலைப் புலிகளைப் பற்றி இங்கே கடந்த வெள்ளிக்கிழமை பலரும் பேசினார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூட ஒரு விளக்கத்தை இங்கே கொடுத்தார்கள். அது இன்று தமிழ்நாடு மட்டுமல்லாமல், இந்தியா முழுவதும் மிகப் பெரியதொரு பிரச்சினையாக உருவாகிக் கொண்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

விடுதலைப் புலிகள் என்பவர்கள் வேறு; இலங்கைத் தமிழர்கள் என்பவர்கள் வேறு என்பதை நாம் முதலிலே உணர்ந்தாக வேண்டும். விடுதலைப் புலிகள் என்பவர்கள் அராஜக சக்திகள் மட்டுமல்லாமல், தமிழர்களுக்கே விரோதிகள் என்பதை ஆணித்தரமாக தமிழகத்திற்கு இந்த அவையின் மூலம் நாம் உணர்த்தியாக வேண்டும். அவர்கள் எவ்வளவு கொலைகள் செய்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் வரலாறு நமக்கு எடுத்து வைத்திருக்கிறது. தமிழ்நாட்டிலேகூட, இப்போது இராமநாதபுரம் மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் ஏராளமாக நுழைந்திருக்கிறார்கள்; பல நேரங்களில் அவர்கள் இங்கே வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள் என்ற வரலாறெல்லாம் ஆங்காங்கே செய்திகளாக வந்துகொண்டிருக்கின்றன. நம்முடைய திருவாடனை தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கூட நேற்று ஊரிலிருந்து வந்திருக்கிறார்; அங்கே விடுதலைப் புலிகளுடைய நடமாட்டம் மிக அதிமாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். இன்று கோவையில் Commissioner-ஆக இருக்கிற திரு. இராதாகிருஷ்ணன் அவர்கள், எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டத்தில் S.P.-ஆக இருந்த நேரத்தில் அவரையே சுடுவதற்கு இதே விடுதலைப் புலிகள்தான் முயற்சி செய்தார்கள். அவருடைய திறமையின் காரணமாக, பந்து பறப்பது போன்று பறந்து. விழுந்து, தன்னுடைய உயிரைக் காப்பாற்றிக் கொண்டார். ஆனால் அவருக்குப் பாதுகாப்பாக நின்ற போலீஸ் அதிகாரிகளை அந்த விடுதலைப் புலிகள் சுட்டுக் கொன்றார்கள். அதுமட்டுமல்லாமல் விடுதலைப் புலிகள் எப்படிப்பட்டவர்கள் என்பதைக் காண்பிப்பதற்காக அவர்கள் இராமநாதபுரம் தெருவிலே நெடுக சுட்டுக்கொண்டே போன

இடத்தில், ஓர் அப்பாவி ஏழைத் தொழிலாளிகூட அப்போது சாகடிக்கப்பட்டார்.

முற்பகல் 11-05

அதுமட்டுமல்லாமல், நம்முடைய நெஞ்சம் எல்லாம் நிறைந்த அமிர்தலிங்கம் போன்ற உயர்ந்த மனிதர்களையெல்லாம் கொலை செய்த கூட்டம், இந்த விடுதலைப் புலிகளினுடைய கூட்டம். அத்தகையவர்களுக்கு இங்கே ஒரு ஸ்தலம் அமைக்கின்ற சூழ்நிலை இப்போது உருவாகிக்கொண்டிருக்கிறது. சில அரசியல் கட்சிகள்கூட தெரிந்தோ, தெரியாமலோ, அவர்களுக்கு ஆதரவு அளித்துக் கொண்டிருக்கின்றன. நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள், இங்கே ஒரு சில வார்த்தைகளைச் சொன்னார்கள். என்ன சொன்னார்கள் என்று சொன்னால், 'விடுதலைப் புலிகள் மூலம் தமிழீழம் வந்தால் நான் சந்தோஷப்படுவேன்' என்று அவர்கள் ஒரு சில வார்த்தைகளை சொன்னார்கள். அது மிக....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் சொல்லாததைக் கற்பனையாகச் சொல்லி, அதை ஒரு பிரச்சினையாக ஆக்கி, ஊதி, பெருக்க வைக்கக்கூடாது என்று நான் தயவுசெய்து கேட்டுக்கொள்கிறேன். 'விடுதலைப் புலிகள் மூலம்' என்று நான் சொல்லவில்லை. அந்த மாதிரி வார்த்தையை நான் பயன்படுத்தவே இல்லை. உங்கள் துணைத் தலைவர்கூட, 'இல்லை' என்று தலை அசைக்கிறார். தாங்கள் அதைத் திருத்திக்கொள்ள வேண்டும். 'விடுதலைப் புலிகள் மூலம்' என்று நான் சொல்லவில்லை. 'பேச்சுவார்த்தையின் மூலம்' என்று சொல்லியிருக்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** இல்லை. விடுதலைப் புலிகள்—'பேச்சுவார்த்தையின் மூலமோ அல்லது அவர்களுடைய வன்முறை மூலமோ, ஏதோ வந்தால்' என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அதைத் திருத்திக்கொண்டால் நல்லது. ஏனென்றால், நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு அந்தக் கெட்ட பெயர் வரக்கூடாது என்பதற்காகத்தான் நான் இதைக் கூறுகிறேன். ஏனென்று சொன்னால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை....

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விஷயத்தை நான் சொல்கிறேன்........



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள். நான் பேசுகிறேன்...(குறுக்கீடு) நான் பேசிய பிறகுதான் நீங்கள் பேச வேண்டும். உட்காருங்கள், நீங்கள். முதலமைச்சர் எந்த இயக்கத்தைப் பற்றியும் சொல்லவில்லை. 'போராட்டம் மூலமாக இருந்தாலும் சரி, பேச்சுவார்த்தை மூலமாக இருந்தாலும், ஈழம் வந்தால் நான் வரவேற்பேன்' என்று சொன்னார். ஆனால் விடுதலைப் புலிகளைப் பற்றிச் சொல்லவில்லை. ஆகையினால் அவர் திருத்திக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அடுத்ததாக நம்முடைய அருமைத் தலைவர், உலகப் புகழ்பெற்ற தலைவர், இராஜீவ் காந்தி அவர்கள் விடுதலைப் புலிகளுக்காக தன்னையே தியாகம் செய்த ஓர் உத்தமர். அவர், நம்முடைய இலங்கைத் தமிழர்களுக்காக என்னென்ன சாதனைகள் செய்திருக்கிறார் என்பதை இங்கே பட்டியலிட நான் விரும்புகிறேன். இந்தியா—இலங்கை உடன்பாட்டினால், தமிழ்த் தாயகம் என்ற நீண்ட நாளைய கோரிக்கை ஏற்கப்பட்டு, இலங்கையின் மூன்றில் ஒரு பங்கு நிலப்பரப்பில் பரவியுள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு, இந்தியாவிலுள்ள மாகாணங்களைப் போல ஒரு மாநில நிர்வாக சுயாட்சியுடன்கூடிய அரசு உருவாக்க வழி ஏற்படுத்திக் கொடுத்தார். 1956 முதல், சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்ற நியாயமற்ற நிலை மாறி, தமிழும் ஆட்சி மொழி என்ற சம உரிமை பெற்றது. இலங்கை சிறைச்சாலைகளில் கைதிகளாக நான்காண்டுகளுக்கு மேலாக இருந்த ஐயாயிரம் தமிழ்க் கைதிகளுக்கு விடுதலை வழங்கப்பட்டு, பொது மன்னிப்பும் இலங்கை அரசால் தரப்பட்டது. அன்னியச் சக்திகள் இந்தியாவின் நலனுக்கு எதிராக, இந்தியப் பெருங்கடல் பகுதியில் ஊடுருவுவதைத் தடுக்க, இலங்கை அரசு ஒப்புக்கொண்டது. தெற்கு ஆசியாவில், குறிப்பாக தமிழ்நாடு, ஏகாதிபத்திய சக்திகளின் போர் அபாயத்திலிருந்து முழுமையாகப் பாதுகாக்கப்பட்டது. இது இந்தியாவின் தொலைநோக்கு கொண்ட வெளிநாட்டுக் கொள்கைக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி.

அதோடு ஜெயவர்த்தனாவே ஒன்றைச் சொல்லியிருக்கிறார். 'பெரிய வல்லரசுகள்மீது எனக்கு எல்லா நம்பிக்கையும் போய்விட்டது. நான் இந்தியாவைச் சார்ந்திருக்க முடிவு செய்வதற்கு இராஜீவ் காந்தி மீதுள்ள நம்பிக்கையே காரணம். எனக்கு இராஜீவைப் பிடித்திருக்கிறது. அவரை நண்பராக நான் கருதுகிறேன். இந்தியா, இப்பிராந்தியத்தின் பாதுகாவலனாக இருக்க வேண்டும். இந்தியாவை நான், பிராந்திய

வல்லரசாகக்கூட ஏற்கத் தயாராக இருக்கிறேன். பிரிட்டன், அமெரிக்கா உட்பட உலக அளவிலே பெரிய வல்லரசுகள், இந்தியாவை அதிகமாக ஏற்று மதிக்கின்றன. இது மறுக்க முடியாத உண்மை. எனது அனுபவத்தை வைத்துச் சொல்வதானால், இந்தியாவைக் கலந்தாலோசிக்காமல், அமெரிக்கா, இலங்கைக்கு உதவி செய்ய, சுண்டு விரலைக்கூட ஆட்டாது' என்று ஜெயவர்த்தனாவே சொல்லியிருக்கிறார். இவற்றையெல்லாம் பார்த்த பிறகுதான், விடுதலைப் புலிகளினுடைய தலைவர் பிரபாகரனுக்கு இந்தியாமீது ஒரு பெரிய வெறுப்பு வந்துவிட்டது என்றுகூடச் சொல்ல வேண்டும். அவரே சொல்லியிருக்கிறார். இந்தியர்கள் வேறு, இலங்கையர்கள் வேறு என்று. இப்படிப்பட்ட இந்த விடுதலைப் புலிகளினுடைய தலைவர், நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய அன்பிற்குப் பாத்திரமானவர்களைக்கூட கொலை செய்திருக்கிறார் என்பதற்கு ஏராளமான உதாரணங்களை நான் சொல்லிக் கொண்டே போகமுடியும். ஆகவே இந்த அவையின்மூலம், தமிழ்நாட்டு மக்களுக்கு நான் சொல்லிக்கொள்வது, இலங்கைத் தமிழர்களுக்கு நாம் எந்தவகையிலும் உதவி செய்யத் தயாராக இருக்கிறோம். ஆனால் விடுதலைப் புலிகளுக்கு, சபாரத்தினத்தைக் கொன்றவர்களுக்கு, பத்மநாபாவைக் கொன்றவர்களுக்கு, அமிர்தலிங்கத்தைக் கொன்றவர்களுக்கு எந்தவகையிலும் நாம் உதவி செய்யக்கூடாது. அவர்களைத் தமிழகத்திற்கு வரவிடக் கூடாது. நம்முடைய அருமைத் தலைவர் இராஜிவ் காந்தி அவர்களைக் கொலை செய்தவர்களுக்கு எந்த ஒரு சிறு உதவி...டச் ...செய்யக்கூடாது. நம்முடைய காவல் துறை அதிகாரிகளுக்... ...யகக் கடுமையாக உத்தரவிட்டு, விடுதலைப் புலிகள் என்று சொல்கிறவர்களை உடனடியாக கைது செய்ய வேண்டும்; தமிழகத்திலேயிருந்து விரட்டி அடிக்க வேண்டுமென்று முதலில் நம்முடைய முதல்வர் அவர்களுக்கு என்னுடைய கோரிக்கையாக நான் வைத்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-10

அடுத்தபடியாக இங்கே ஓர் அருமையான செய்தி. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்', 'எம்மதமும் சம்மதம்' என்று வாழ்ந்து, மத நல்லிணக்கத்திற்காகவும், மக்கள் ஒற்றுமைக்காகவும், தனது உயிரைத் தியாகம் செய்த கோயம்புத்தூர் கோட்டை அமீர் அல்-உம்மா என்ற தீவிரவாத இயக்கம் தமிழகத்தில் ஏற்பட்டபோது, அதே இனத்தைச் சார்ந்தவராக அவர் இருந்தபோதும், அதை எதிர்த்ததால் அவர்களால்



படுகொலை செய்யப்பட்டார். வழக்கு நீதிமன்றத்தில் வந்தபோது ஒரு நல்ல தீர்ப்பை நீதிமன்றத்திலே கொடுத்திருக்கிறார்கள்.

"மத நல்லிணக்கத்திற்காகவும், சமுதாய நலனுக்காகவும், கோட்டை அமீர் பாடுபட்டு வந்தார். 1994 ஆம் ஆண்டில், கோவை கோணியம்மன் தெரு, தேர்த் திருவிழாவில் அவர் பங்கேற்றார். விழாவில் அவருக்கு மாலை அணிவிக்கப்பட்டு, திலகமிட்டு கௌரவிக்கப்பட்டது. இந்தச் செய்தி நாளிதழ்களில் வெளியானது. இதைப் பொறுத்துக்கொள்ள முடியாத எதிரிகள், மத நல்லிணக்கத்திற்கு ஊறு விளைவிக்கும் விதத்தில், சமாதானப் பிரியரான கோட்டை அமீரைக் கொன்று விட்டார்கள் என்று அரசுத் தரப்பில் மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்து-முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்தி, டெல்லியில் பிர்லா மாளிகையில் ஆராதனைக் கூட்டத்தை காந்தியடிகள் நடத்தினார். அப்போது இந்துத் தீவிரவாதியான நாதுராம் கோட்சே, காந்தியடிகளைக் கொன்றார். இந்த எதிரிகள் நாட்டிற்காகத் தியாகம் செய்வதற்குப் பதிலாக, மத நல்லிணக்கத்திற்கு விரோதமாகச் செயல்படுகிறார்கள் எனக் கருதும்போது, நாம் பெற்ற சுதந்திரத்திற்குப் பொருள் இல்லாமல் போகும் விதத்தில் நடந்துகொள்கிறார்கள் எனக் கருத வேண்டியுள்ளது. மதம் மனிதனைப் படைக்கவில்லை. ஆனால் மனிதன்தான் மதத்தைப் படைக்கிறான். இந்த உண்மையை இளைஞர்கள் மனதில் கொள்வார்களேயானால், இதுபோன்ற செயல்களில் ஈடுபட வாய்ப்பில்லை. இந்த இளைஞர்கள், தவறான பாதையில் இழுக்கப்பட்டு, துர்போதனைக்கு ஆளாகி, இதுபோன்ற கொலைக் குற்றங்களில் ஈடுபடுவதற்கு சமுதாயச் சீர்குலைவே முக்கியக் காரணம் ஆகும். தியாக உணர்வு இருக்க வேண்டிய இடத்தில் மதத் தீவிரம் இருக்கக்கூடாது. மதத் தீவிரவாதத்தின் காரணமாகவே, தங்களது செயல்களுக்கு இடையூறாக இருந்த கோட்டை அமீர் கொலை செய்யப்பட்டுள்ளார் எனக் கருதி, எதிரிகளுக்கு ஆயுள் தண்டனை விதிக்கிறேன்" என்று சொல்லிவிட்டு, "மகாத்மா காந்திக்குச் சமமாக தமிழகத்திலே ஒருவர் இருக்கிறார்" என்று சொல்லியிருக்கிறார்கள்.

நான் நம்முடைய முதலமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்வது, அண்ணா பதக்கம் என்று இருப்பதைப்போல, மத நல்லிணக்கத்திற்காகத், தன்னையே உயிர் பலி கொடுத்த, கோவை கோட்டை அமீர் அவர்கள் பெயரால் ஒரு நல்லிணக்கப் பதக்கம் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக நம்முடைய காவல் துறைக்கு வருகிறபோது, எந்தப் Police Station-க்கு நாம் சென்றாலும் போலீஸ் அதிகாரிகள் Court-க்குச் சென்று விட்டார்கள் என்றுதான் சொல்கிறார்கள். இது சம்பந்தமாக சட்டமன்றத்தில் நான் மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலே பேசியிருக்கிறேன். Court-களுக்குச் செல்வதற்காகவே, ஒரு தனி ஆய்வாளர், ஒரு வழக்குரைஞரை நியமியுங்கள் என்று கேட்டிருக்கிறேன். இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. எந்த Police Station-க்குப் போனாலும் Sub-Inspector, அந்த Court-க்குப் போய் விட்டார், Inspector High Court-க்குப் போய் விட்டார் என்றுதான் சொல்கிறார்களே தவிர, நம்முடைய நியாயத்தைக் கேட்பதற்கு அங்கே ஆளே இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே நம்முடைய அரசை ஒவ்வொரு Police Station-லேயும், Court வழக்குகளுக்குச் செல்வதற்காக, ஒரு தனி ஆய்வாளரை நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதோடு Police அதிகாரிகள் மற்றும் Police காவலர்களைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு ஏராளமான கோரிக்கைகள் இருக்கின்றன. அவர்களுக்குச் சங்கம் கிடையாது. சங்கம் இல்லாத காரணத்தினால், நம்முடைய அரசுதான் அவர்களைக் கவனித்து, காக்க வேண்டிய பொறுப்பிலே இருக்கிறது. ஆகவே, அவர்களை அழைத்துப் பேசி, என்னென்ன கோரிக்கைகளைக் கொடுக்கின்றார்கள் என்பதையெல்லாம் பார்க்க வேண்டியது நம்முடைய தமிழக அரசினுடைய கடமை.

*முற்பகல் 11-15*

உதாரணமாக கிராமப்புறங்களில் உள்ள அதிகாரிகள் மிகக் கடுமையாக, மிகச் சிரமமாக வேலை செய்து கொண்டு இருக்கிறார்கள். இங்கே ஒருவர் — கீழ்நிலை அதிகாரியாக இருப்பார் என்று நான் கருதுகிறேன். அவர் என்ன எழுதியிருக்கிறார் என்றால், ஒரு பெரிய File போட்டு இதை எல்லோருக்கும் அனுப்பியிருக்கிறார். அவர் என்ன சொல்கிறார் என்றால், 21 கோரிக்கைகளை வைத்து இதை நிறைவேற்ற வேண்டும் என்று நம்முடைய எல்லா அரசு அதிகாரிகளுக்கும் அனுப்பியிருக்கிறார். அதாவது Orderly முறையை அறவே அகற்றி முழுமையாக மக்கள் நலப் பணியில் ஈடுபட வழிகாட்ட வேண்டும் என்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்.



அடுத்தபடியாக காவலர்களை மரியாதையுடனும், மனித நேயத்துடனும் நடத்த வேண்டும் என்பது ஒரு கோரிக்கை. மூன்றாவது fixed T.A. எங்களுக்கு வேண்டும்.; வாரம் 7 நாட்களும் வேலை செய்கின்ற Police-காரர்களுக்கு வாராந்திர ஓய்வு நாள் வேண்டும், ஊதியம் மற்றும் உணவுப் படி வழங்குவதில் உள்ள குறைபாடுகளை அகற்ற வேண்டும். Uniform, இடுப்புக் கச்சை, தொப்பி, shoes மற்றும் boots, மழைக் கோட்டு ஆகியவற்றின் அளவுகளில் உள்ள குறைபாடுகள்—அதற்குத் துணியாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். பதவி உயர்வுகளில் உள்ள குறைபாடுகளை நீக்க வேண்டும்; பதவி உயர்வுகளில் வழிவகைகள் மற்றும் தரம் காக்கப்பட வேண்டும்; பணியாற்றும் இடங்களிலேயே பதவி உயர்வு கொடுக்கப்பட வழி வகுக்க வேண்டும்; பணி மாற்றங்களில் நேர்மை மற்றும் ஒழுக்கம் உண்டாக்க வேண்டும்; காவல் துறை அலுவலர்களின்மீது எழுப்பப்படும் புகார்களின் நிலையைத் தெளிவுபடுத்த வேண்டும்; காவலர் குடியிருப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும்; அலுவல் நிமித்தம் வரும் காவல் அலுவலர்களுக்குத் தங்கும் வசதியை உண்டாக்கிக் கொடுக்க வேண்டும்; விடுப்பு வழங்குவதில் உள்ள குறைகளை அகற்ற வேண்டும்; காவல் Executive அலுவலர்களுக்கும், காவல் அமைச்சுப் பணியாளர்களுக்கும் உள்ள இடைவெளியைப் போக்க வேண்டும்; அரசு ஆணைகள் பற்றிய விவரங்களை அனைத்துக் காவல் அலுவலகங்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும்; வெகுமதிகள் வழங்குவதில் உள்ள குறைகளை நீக்க வேண்டும்; தண்டனைக்கான கோப்புகளைப் பராமரிப்பதில் உள்ள குறைபாடுகளைக் களைதல் வேண்டும்.; ஓய்வு பெறுவோருக்கு ஏற்படும் அவல நிலையை அகற்ற வேண்டும்;. காவல் துறையை நவீனப்படுத்துவதிலே உள்ள சில குறைபாடுகளைக் களைய வேண்டும். காவல் துறையை நவீனப்படுத்துவதிலே இறுதி முடிவெடுப்பதற்கு வழி காண வேண்டும்; என்று 21 கோரிக்கைகளை வைத்திருக்கிறார். இந்தக் கோரிக்கைகளை எல்லாம் 60 பக்கத்தில் போட்டிருக்கிறார். நான் முதலமைச்சர் அவர்களிடத்திலே, நேரிலே இதைக் கொடுத்துவிடுகிறேன். அவர்கள் இதைப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக பெண் காவலர்கள்-பெண் காவலர்கள் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், இந்தப் பக்கத்திலே Reserve Bank பந்தோபஸ்துக்காக எங்களை இரவு நேரங்களில் அனுப்புகிறார்கள். இரவு நேரத்திலே நாங்கள் போகும்போது எங்களை Check பண்ண

வருவதாகச் சொல்லி சிலர் அங்கே வருகிறார்கள். அது எங்களுக்கு வெளியே சொல்ல முடியாத பல துன்பங்களைக் கொடுக்கிறது என்று அவர்கள் எழுத்து மூலமாகவே கொடுத்திருக்கிறார்கள். இதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். ஏனென்று சொன்னால், பெண் உதவி ஆய்வாளர்கள்—7, 8 வருடங்களாகப் பெண் உதவி ஆய்வாளர் பதவி உயர்வு பெற்றும், பயிற்சிக் காலம் முடிந்தும் இதுவரை உதவி ஆய்வாளர் சம்பளம் வழங்கப்படவில்லை. இது ஒரு குறை.

அடுத்ததாக Guard என்றால் A.R. காவலர்கள்தான் இதுவரையில் பார்த்து வந்தார்கள். தற்போது A.R. ஆண் அதிகாரிகள், காவலர்களை எடுத்துவிட்டு, முழுக்க முழுக்க local பெண் உதவி ஆய்வாளர்கள், தலைமைக் காவலர்களை R.B.I. (Reserve Bank of India) Guard அலுவலில் நியமித்துள்ளார்கள். இது ஒரு முக்கியமான இடம். இரவில் தணிக்கை செய்யும் அதிகாரிகளின் நிலையை வெளியில் சொல்ல முடியாது. எங்களுக்கு எந்தவிதப் பாதுகாப்பும் இல்லை, இதை உடனே மாற்றம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம் என்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

அடுத்து Police துறையில் சீர்த்திருத்தம் செய்வதற்காகக் கணினியை ஏற்படுத்தியிருக்கிறீர்கள். அது ஒரு நல்ல காரியம்தான். இருந்தாலும் 4 கோடியே 11 இலட்சம் ரூபாய்க்கு 484 கணினிகளை இத்துறை வாங்கியுள்ளது. இதைப்பற்றி ஒரு கணக்குப் போட்டுப் பார்த்தால், ஒரு கணினி விலை ரூ.86,000 ஆகிறது. இது ரொம்ப அதிகம் என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், இப்போது கணினி சாதாரணமாக ரூ.40,000, ரூ.35,000-க்கும் கிடைக்கிறது என்று சொல்கிறார்கள். இதை முதலமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். ரூ.4.11 கோடிக்கு 484 கணினி வாங்கியிருந்தால், இதில் பாதிக்குப் பாதி விலை அதிகமாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

அடுத்தபடியாக விரிவாக்கத் திட்டத்தில் 83 கணினிகளை ரூ.53 லட்சத்தில் வாங்குவதாக இன்னோர் இடத்தில் சொல்கிறார்கள். அப்படிப் பார்த்தாலும் ஒரு கணினிக்கு ரூ.64,000 வருகிறது. ஆகவே இந்த வித்தியாசத்தை முதலமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். அவருடைய கவனத்திற்கு வந்ததோ, வரவில்லையோ தெரியவில்லை. இதே மாதிரி தான், ஏற்கெனவே நம்முடைய Corporation-க்கு



ரூ.3 கோடியில் கணினி வாங்கியிருக்கிறார்கள். அதிலேயும் இதே விலைதான் வருகிறது. ஆனால் வெளியிலே இருக்கின்ற விலைக்கும் நீங்கள் சொல்லியிருக்கின்ற விலைக்கும் அதிக வேறுபாடு இருப்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து நிதி மோசடி செய்த Companies மீது சரியான நடவடிக்கை இல்லை என்று பலரும் பல கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். எங்களுடைய பணமெல்லாம் போய்விட்டது. காவல் துறை சரியான முறையில் நடவடிக்கை எடுக்கவில்லை என்று பலர் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதிலே ஒன்று, சேலம் சாமுண்டி நிதி நிறுவனம். அந்த மோசடியில் கோடிக்கணக்கான ரூபாய் போய்விட்டது. எங்களுக்கு இன்னும் பணம் வந்து சேரவில்லை, நடவடிக்கையே எடுக்கவில்லை என்று சொல்கிறார்கள்.

அதேபோல் திருப்பூர் Om Sakthi Finance, R.B.F., Anubhav போன்ற நிறுவனங்கள் மீதெல்லாம் சரியான முறையில் நடவடிக்கை எடுத்து—எங்களுக்குப் பணம் கிடைக்க வழி செய்யவில்லை என்று மிக ஆதங்கப்பட்டிருக்கிறார்கள்—அதையெல்லாம் விரைவில் சரி செய்து, பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பணம் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறையில் பல இடங்களில் கொடுக்கின்ற கோரிக்கைகள், மனுக்கள் எல்லாம் சரியான முறையில் விசாரிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று ஏராளமான கடிதங்கள் வந்திருக்கின்றன. அந்தக் கடிதங்களை எல்லாம் இங்கே படித்துக்கொண்டிருந்தால், அதுவே ஒரு பெரிய பிரசங்கம் ஆகிவிடும். ஆகவே சுருக்கமாகச் சொல்கிறேன். அண்ணா நகர் கிழக்கில், அசோகன் என்பவர் வீட்டில் ரூ.1 இலட்சத்திற்கு மேல் களவு போன வழக்கில் இன்றுவரை 11 மாதங்களாகியும், இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார். அதேபோல் 16-4-1999 அன்று காணாமல் போன பாலாம்பிகை என்ற அம்பிகா இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. தூத்துக்குடி தென்பாக காவல் நிலைய புகாரின் மீது இன்றுவரை நடவடிக்கை இல்லை. இதனால் தந்தை அதிர்ச்சியடைந்து வாய் பேசாமல் போன சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது என்று ஒரு கடிதம் வந்திருக்கிறது. அதேபோல் கண்ணம்மாள் என்பவர் தன்னுடைய கணவர் பழனி—அலங்கியம் சாலையில் இறந்து கிடந்தது குறித்த உண்மை நிலை இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார். அதேபோல் திருவாரூர் ஆலங்கோட்டையில் லெனின் என்பவர் எம்.எஸ்.சி. படித்த பட்டதாரி., அவரைப் பகலிலேயே

கொலை செய்துவிட்டார்கள். சரியான முறையில் வழக்குத் தொடுக்காததால் அந்த Case கூடத் தள்ளுபடி ஆகிவிட்டது. இதனால் திருவாரூரே ஒரு பெரிய பதட்ட நிலையில் இருக்கிறது என்று ஒருவர் கடிதம் எழுதியிருக்கிறார். அதேபோல், அலங்காக்கோட்டையைச் சேர்ந்த பட்டாளம் என்பவரின் மகன், 12 வயது பெண்ணைப் பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்துவிட்டார். இன்னும் யாரையும் கண்டுபிடிக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்.

அதேபோல கோவை மாவட்டம், கோட்டூர் காவல் நிலையத்தில் ஒரு Sub-Inspector தன்னுடைய கோரிக்கையை நிறைவேற்றவில்லை என்று ஜானி பாஷா என்பவர் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி ஏராளமான கடிதங்கள் வந்திருக்கின்றன. அவற்றினுள்ளே போகாமல் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய பார்வைக்கே நான் வைத்துவிடுகிறேன்.

கள்ளச் சாராயம் குறித்து எல்லோரும் பேசியிருக்கிறார்கள். நான் இதில் புதிதாகப் பேச வரவில்லை. கள்ளச் சாராயம் குறித்து எனக்கு வந்த தபால் பூராவிற்குமாகச் சேர்த்து ஒரு தனி file போட்டு வைத்திருக்கிறேன். அதிலே அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால்— கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் பற்றி நம்முடைய அரசாங்கத்திற்கு, அதிகாரிகளுக்குத் தெரியாமல் இருக்க முடியாது. அவர்களையெல்லாம் நீங்கள் குண்டர் சட்டத்தில் ஓராண்டு, இரண்டு ஆண்டுகள் சிறையிலே போட்டுவிட்டால் கள்ளச் சாராயமே ஒழிந்துவிடும். இன்று நாட்டில் இருக்கிற எல்லா ஒழுங்கீனங்களுக்கும் கள்ளச் சாராயம்தான் காரணம். இதில் நம்முடைய அரசு கவனம் செலுத்தி, மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-25

தீயணைப்புத் துறையைப் பொறுத்தவரையில், 5 கோடி ரூபாய்க்கு Fire equipments வாங்கியிருக்கிறார்கள். அப்படி வாங்கியதெல்லாம் முறைப்படி Fire Officer-ஐ வைத்து வாங்காததனால் எதை எதையோ வாங்கி வந்துவிட்டார்கள் என்று கடிதம் வந்திருக்கிறது. வாங்கியவை Hose Pipe, Breathing Suit, Diving Suit, Gas Mask. Gas Mask-க்குப் பதிலாக Acid Mask வாங்கிவிட்டார்களாம். எல்லாம் டெல்லியிலே வாங்கியிருப்பதாகத் தெரிகிறது. இதனால் 5 கோடி ரூபாய்க்கு வாங்கிய பல பொருட்கள் இன்று உபயோகப்படுத்தப்படாமல் கிடக்கின்றன என்று ஒரு புகார் வந்திருக்கிறது.



அடுத்தபடியாக திருமாவளவன் என்பவர் தாழ்த்தப்பட்ட மக்களுடைய தலைவர். அவர் தேர்தலில் நின்றதற்காக ஏராளமான வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. அந்த வழக்குகளை எல்லாம் இங்கே விரிவாக நான் சொன்னால் நேரம் ஆகும். ஆகவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அந்த வழக்குகளை எல்லாம் வாபஸ் வாங்கி அந்த ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மக்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

Food Corporation of India என்று ஓர் அலுவலகம் சென்னையிலே இருக்கிறது. அந்த Food Corporation of India அலுவலகத்தில் தாழ்த்தப்பட்ட சகோதரர்களுக்கு நடக்கின்ற துன்பங்கள், துயரங்கள் அளவிடங்காதது என்று சொல்கிறார்கள். இந்திய உணவுக் கழகத்தின் சென்னை மண்டல மேலாளர் சிவன்நாத் மற்றும் தமிழ்நாடு Senior Regional Manager பாண்டாவா ஆகியோர் கடந்த வருடம் ஜூன் மாதம் பொறுப்பு ஏற்றதிலிருந்து SC/ST ஊழியர்களுக்கு எதிராக திட்டமிட்டு கொடுமைகளையும் பழிவாங்குகின்ற நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறார்கள். கடந்த ஆண்டில் 48 ஊழியர்களை, ஆந்திரா, கர்நாடகா, தூத்துக்குடி, போன்ற தொலைதூரப் பகுதிகளுக்குப் பணிமாற்றம் செய்தார்கள். இதில் 43 பேர் SC/ST வகுப்பைச் சார்ந்தவர்கள். மத்திய அரசு நிறுவனமாக இருந்தாலும் (குறுக்கீடு) நான் எதற்காகச் சொல்கிறேன் என்று சொல்லிவிடுகிறேன். SC/ST-க்கான சட்டபூர்வ உரிமைகளைப் பறித்து அவர்களைக் கேவலப்படுத்தி பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்ற மண்டல மேலாளர் மற்றும் அதற்குத் தொடர்பான அதிகாரிகள்மீது வன்கொடுமை தடுப்புச் சட்டம் 89-ன்படி ஆயிரம் விளக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருக்கிறார்கள். இதுவரை எந்த நடவடிக்கையையும் காவல் துறை எடுக்கவில்லை. அதற்கு மேலாக தங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு உண்ணாவிரதம் இருந்த SC/ST சங்க நிர்வாகிகளைக் கைது செய்தது மட்டுமின்றி உண்ணாவிரதப் பந்தலையும் பிரித்து, மைக்கைப் பிடுங்கி அம்பேத்கார் படம் போட்ட banner-களைக் கழட்டி தண்ணீர்ப் பானைகளைக்கூட காவல் துறையினர் எடுத்துச் சென்றுவிட்டனர். மற்ற தொழிலாளர் Union-களுக்கு வழங்கப்பட்டிருக்கிற மதிய உணவு இடைவேளை ஆர்ப்பாட்டங்களைக்கூடச் செய்யவிடாமல் எங்களை காவல்துறையினர் தடுக்கின்றனர். இதற்கு முக்கிய காரணம் உணவுக் கழகத்தில் Officer on Special Duty என்று ஓர் அதிகாரி இருக்கிறார். அவர்தான் இந்த அக்கிரமங்களுக்கு எல்லாம் காரணமாக இருக்கிறார். இந்த SC/ST பிரிவு கொடுத்த புகார் குறித்து அகில இந்திய SC/ST Commission தமிழக D.G.P. அவர்களுக்கும் மாநகரக் காவல் துறைக்கும்

கடிதங்களை எழுதியிருக்கிறார்கள். கடிதங்கள் எழுதியும்கூட எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை: உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

'From

National Commission for
Scheduled Castes and Scheduled Tribes.

To

The Director-General of Police,

Government of Tamil Nadu,

Chennai.

I am directed to enclose a copy of the complaint on the above subject. It is requested that the case may be investigated and the factual position communicated to the Commission. The relevant provisions of the SC/ST Act, 1989 may be adhered to during the conduct of the investigation' என்று கடிதமே எழுதியிருக்கிறார்கள். அதேபோல Commissioner of Police-க்கும் கடிதம் எழுதியிருக்கிறார்கள். எந்த நடவடிக்கையும் இல்லை என்று அவர்கள் தகவல் கொடுத்திருக்கிறார்கள்.

*முற்பகல் 11-30*

முதுகுளத்தூரில் ஏற்கெனவே D.S.P. Office இருந்தது. அந்த D.S.P. அலுவலகத்தை பரமக்குடிக்கு மாற்றியிருக்கிறார்கள். இப்போது முதுகுளத்தூர் பகுதியில் D.S.P. Office இல்லாததனால், அந்தப் பகுதியில், என்னுடைய தொகுதியில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. ஆகவே முதுகுளத்தூரில் ஒரு D.S.P. அலுவலகத்தை உடனடியாகத் திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரியில் Traffic Police Station வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதையும் உடனடியாகக் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதிக நேரம் சட்டமன்றத்திலே பேசியதே அந்த உறுப்பினர்தான். அதனால் எதிர்கட்சித் தலைவர் அவர்கள் அவருடைய கோரிக்கைகளையெல்லாம் ஒன்றும் வைக்கக்கூடாது. (சிரிப்பு)



**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** ஊர்க்காவல் படையில் 10,000 பேர் வேலை செய்கிறார்கள். இந்த ஊர்க்காவல் படை என்பது மற்ற ஊர்களிலே எல்லாம் அது ஒரு Part-time work-ஆக உள்ளது. எனவே தினமும் 100 ரூபாய் கிடைக்கிற மாதிரி செய்து இந்த ஊர்க்காவல் படையை பலப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய காவல் துறையைப் பற்றி ஒரு நண்பர் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் எழுதிய ஒரு கடிதத்தில், அவருடைய பெயரைக்கூடப் படித்துவிடுகிறேன்; மிகவும் முக்கியமான record இது. திரு. எஸ். இராமகிருஷ்ணன், மு.நி.கா. மு.நி.கா. என்றால் என்ன என்று தெரியவில்லை; மு.நி.கா. 8484 (குறுக்கீடு) ஆம். முதல்நிலைக் காவலர்தான். அவர் சொல்கிறார் பாருங்கள்; 'காவல் துறையில் Annual income and property statement ஆண்டுதோறும் முறையான வருமான வழிகள் மற்றும் சொத்து அறிக்கைகளை நிர்வாகம் பெற்று பணிப் புத்தகத்தில் பதிவு செய்ய வழிவகைகள் இருந்தும் இவை ஏதும் கடைப்பிடிக்கப்படுவதில்லை. பொதுத் துறை ஊழியர்கள் தவறான முறையில் சொத்துக்கள் வாங்குவதைத் தடுப்பதுடன் முறையாகச் சொத்துக்களை வாங்குபவர்களின் பணிகளிலும் ஒழுங்குமுறையைத் தோற்றுவிக்கிறது. இப்போதெல்லாம் காவல் துறையில் கடமையே பெரிது என்ற எண்ணங்கள் சிறிது சிறிதாக மறையப்பட்டு எப்படியாவது தங்கள் வாழ்க்கையைச் செல்வச் செழிப்புள்ளவர்களாக மாற்றிக்கொள்ளும்பொருட்டு தவறான எண்ணங்களை வளர்த்து, தவறான முறையில் சொத்து சேர்ப்பது, சேர்ப்பவரது எண்ணிக்கைகள் காவலர் முதல் உயர் நிலையிலுள்ள அதிகாரிகள் வரை போய்க்கொண்டிருக்கிறது. இந்நிலை தொடர்ந்தால் என்றாவது ஒருநாள் காவல் துறையின் அஸ்திவாரத்தையே ஆட்டம் காணச் செய்துவிடும் என்பதில் துளியும் சந்தேகமில்லை. இனிவரும் 2000 ஆண்டிலிருந்தாவது, இதைக் கருத்தில் கொண்டு, சென்னை மாநகரக் காவல் துறையின் அனைத்து அலுவலர்களது, காவலர் முதல் உயர் அதிகாரிகள்வரை, அதுபோல் தமிழ்நாட்டிலே இருக்கின்ற எல்லா காவல் அதிகாரிகளின் சொத்து சேர்ப்பு அறிக்கையைப் பெற்று, அவற்றை கணினியில் பதிவு செய்து பத்திரமாகப் பராமரித்து, நடத்தை விதிகள் மூலம் காவல் துறையை ஒழுக்கத் துறைக்கேற்ப கண்காணித்து, ஒருவரது மனதில் மட்டுமின்றி வாழ்க்கையிலேயும் ஒழுக்க நெறி முறைகள் உருவாக வழிவகை ஏற்படுத்த வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.' மிகவும் அருமையான வாசகம்.

நம்முடைய முதலமைச்சர் அவர்களின் காவல் துறை என்பது இன்று எந்தவொரு கட்டுப்பாடும் இல்லாமல் போய்க் கொண்டிருக்கிறது. அவர்களுக்கென்று ஏற்கெனவே, 2 தடவை Police Commission-ஐ நீங்கள் அமைத்திருக்கிறீர்கள். அதை நான் பாராட்டுகிறேன். அதேபோல இப்போதும் ஒரு Police Commission-ஐ ஏற்படுத்தி அவர்களுடைய குறைகளையெல்லாம் களைய வேண்டும்.

இரண்டாவது, இருக்கின்ற Police அதிகாரிகள் என்ன குறை சொல்கிறார்கள் என்று சொன்னால், 10 ஆண்டு காலம் ஆனால் ஒரு Promotion வருமென்கின்ற எண்ணம் எங்களுக்கு வராதவரை எப்படி நாங்கள் இந்தத் துறையில் நிம்மதியாக வேலை செய்ய முடியும் என்று அவர்கள் கேட்கிறார்கள். அது ஒரு நியாயமான கோரிக்கை: இந்த கோரிக்கைகளையெல்லாம் சிறப்பான முறையில் நிறைவேற்றி, காவல் துறை அதிகாரிகளுடைய மனக் குறையைப் போக்கி, அவர்களுடைய வாழ்க்கையில் ஒளியேற்ற வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மற்றும் அதன் தொடர்பான துறைகள் குறித்து இரண்டு நாட்களாக எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட 19 பேர் உரையாற்றி, நான் என்னுடைய விளக்கத்தைக் கூறுகின்ற வாய்ப்பைப் பெற்று இந்த அவையில் சில கருத்துக்களை எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். முதலில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தீயணைப்புத் துறைக்கு—காவல் துறைக்கு ஒரு Computer 80,000 ரூபாய்க்கு வாங்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டு——

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** காவல் துறைக்குக் கணினி..

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** காவல் துறையிலே கணினி, அதுதான் Computer என்று சொன்னேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** தீயணைப்புத் துறை அல்ல, காவல் துறை.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** ஆமாம். காவல் துறைக்கு வாங்கப்பட்டிருப்பதாகச் சொல்லி, இது அதிக விலை என்று குறிப்பிட்டார்கள். ஏனென்றால் தலைப்புச் செய்தியாக அதுதான் வரும்



என்ற காரணத்தால் அதைப் பற்றிய விளக்கத்தை முதலிலேயே கொடுத்துவிட நான் விரும்புகிறேன். 80,000 ரூபாய்க்கு வாங்கப்பட்டது பிரதான Computer மாத்திரம் அல்ல. Computer, அத்துடன் இணைந்த Printer, Modem-Network-தொடர்பு, பெரிய Computer Server-கள், UPS ஆகிய Computer உள்ளிட்ட இந்த 6 item-களும் சேர்ந்துதான் 80,000 ரூபாய்க்கு வாங்கப்பட்டிருக்கிறது. எனவே அது ஒன்றும் அதிக விலை அல்ல. Computer மாத்திரம் வாங்கியிருந்தால், கணினி மாத்திரம் வாங்கியிருந்தால் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன அந்தத் தொகைக்கு வாங்கி இருக்க முடியும். இவற்றோடு சேர்ந்து Printer, Modem, Net Work-தொடர்பு, பெரிய Computer Server-கள், UPS ஆகியவற்றையும் வாங்கியிருக்கின்ற காரணத்தால் இந்தத் தொகை அளிக்க வேண்டியதாயிற்று என்ற என்னுடைய விளக்கத்தைத் தர விரும்புகின்றேன்.

காவல் துறைக்கு அரசின் சார்பில் அளிக்கப்பட்டிருக்கின்ற மொத்த நிதியொதுக்கீடு எவ்வளவு என்று பார்த்தால் 1995-96-இல், கடந்த ஆட்சியில், 450 கோடியே 57 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1996-97-இல் அது 497 கோடியாக உயர்ந்து இப்போது 2000-2001 வரவு-செலவுத் திட்டத்தில் காவல் துறைக்கு மொத்த நிதியொதுக்கீடு 1116 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது 4 ஆண்டுகளில் காவல் துறைக்கு அதிகமாக்கப்பட்ட நிதியொதுக்கீடு 663 கோடி ரூபாய் ஆகும்.

என்னுடைய அருமை நண்பர் திரு. பழனிசாமி அவர்களும் மற்றும் பல உறுப்பினர்களும், ஆளுங்கட்சி சார்பிலே பேசியவர்களும், எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தவர்களும், காவல் துறையினுடைய தவறான போக்குகள், தவறான காரியங்கள் இவற்றை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் நம்முடைய நண்பர் பழனிசாமி அவர்கள் காவல் துறையினுடைய சிறந்த செயல்களுக்கான பாராட்டுகளையும் இங்கே தெரிவித்திருக்கின்றார். ஆகவே இந்தத் துறை முழுவதும் கண்டிக்கத்தக்க ஒன்று அல்ல என்பதும் அதிலே ஒரு சிலருடைய செயல்பாடுகள் கண்டிக்கத்தக்க அளவிற்கு இருக்கின்றன என்பதும் புலனாகின்ற உண்மையாகும்.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விடுதலைப் புலிகளைப் பற்றியும் மத நல்லிணக்கத்தைப் பற்றியும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். பிறகு நான் என்னுடைய பேச்சின் இடையிலே மறந்துவிடக்கூடும். அமீர் அவர்களுடைய பெயரால் மத நல்லிணக்கப் பதக்கம் ஒன்று

வழங்க வேண்டும் என்று இங்கே சுட்டிக்காட்டினார்கள். நிச்சயமாக அந்தப் பெருமகனுடைய பெயரால் அந்தப் பதக்கம் வழங்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவர் குறிப்பிட்ட விடுதலைப் புலிகள் பற்றிய அந்தப் பிரச்சினைகளை எல்லாம் என்னுடைய பேச்சின் இடையிலே குறிப்பிடலாம் என்று கருதுகின்றேன். கழக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சரியாகச் செயல்படுகிறது; சாதி மதக் கலவரங்கள் குறைந்திருக்கின்றன என்பதை இங்குள்ள உறுப்பினர்கள் மாத்திரம் அல்ல, நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாநிலச் செயலாளர் தோழர் நல்லக்கண்ணு அவர்கள்கூட ஆனந்தவிகடன் ஏட்டிற்கு அளித்த பேட்டியில் சாதி, மதத் தகராறுகளை இந்த ஆட்சியிலே குறைத்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டுவிட்டு, அவருடைய கருத்துகள் சிலவற்றை அவர்கள் இணைத்திருந்தாலும்கூட பொதுவான ஒரு பாராட்டுதலை அவர் குறிப்பிட்டிருக்கிறார். அதற்காக நான் இங்கிருந்தவாறே அவருக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-40*

சாதி, மதக் கலவரங்கள் 1996-ஆம் ஆண்டு தமிழகத்திலே 29 என்ற எண்ணிக்கை அளவிலேயிருந்து, 1997-ஆம் ஆண்டு 67 என்கின்ற எண்ணிக்கை அளவிற்கு உயர்ந்து, நாம் அனைத்துக் கட்சிக் கூட்டங்களை எல்லாம் கூட்டி, அதற்கு என்ன நிவாரணம் தேடலாம் என்றெல்லாம் யோசித்து, இரண்டு மூன்று முறை அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கலந்து ஆலோசித்துப் பல நடவடிக்கைகளை எடுத்த பிறகு 1998-ஆம் ஆண்டு 12 ஆகக் குறைந்து, 1999-ஆம் ஆண்டு 6 என்ற அளவிலே குறைந்து, இப்போது ஒரேயொரு கலவரம்தான் (மேசையைத் தட்டும் ஒலி) சிறிய அளவில் திருவண்ணாமலையிலே ஒரு பள்ளிக்கூடத்திலே மாணவர்களிடத்திலே, T.V. சம்பந்தமான பிரச்சினையிலே ஏற்பட்டது. ஒரு முஸ்லிம் மாணவருக்கும், முஸ்லிம் அல்லாத மாணவருக்கும் என்ற அளவோடு, ஒன்று என்ற அளவிற்குக் குறைந்திருக்கின்றது. இதிலே நாம் மகிழ்ச்சியடைந்துவிட முடியாது. இந்த ஒன்றும் இல்லாத அளவிற்கு--சாதி, மதக் கலவரங்கள் ஒன்றுமே இல்லாத அளவிற்கு நாம் பாடுபட்டாக வேண்டும். மேலும் ஒன்றோ, இரண்டோ கூடுவதற்குக்கூட இடம் தராமல் நாம் பாடுபட்டாக வேண்டும். அமைதியான முறையிலே பெரிய விழாக்கள் எல்லாம்கூட நடைபெற்றிருக்கின்றன. காவல் துறையினுடைய கடமையுணர்வின் காரணமாக, கட்டுப்பாடு காரணமாக கடந்த நான்கு ஆண்டுகளில்



தேவர் ஜெயந்தி விழா மற்றும் விநாயகர் சதுர்த்தி ஊர்வலம் போன்றவை எந்தவிதமான அசம்பாவிதங்களும் இல்லாமல் நடந்தேறியதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். இந்த 4 ஆண்டுக் காலத்திலே நடைபெற்ற உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள், நாடாளுமன்றத் தேர்தல்கள், இடைத் தேர்தல்கள்—1996-இல் நடைபெற்ற உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள், தொடர்ந்து நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்கள் மற்றும் தமிழக சட்டமன்றத்தினுடைய இடைத் தேர்தல்கள், இவையெல்லாம் மிக அமைதியான முறையிலே நடைபெற்றிருக்கின்றன என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழ்நாட்டில் குற்ற நிகழ்வுகளினுடைய விகிதாச்சாரத்தைப் பற்றி நான் அல்ல, தேசிய குற்றப் பதிவுப் பிரிவு (National Crime Records Bureau) 1999-ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜூன் முடிய 6 மாதங்களில் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்ற குற்ற நிகழ்வுகள் குறித்து புள்ளிவிவரங்களை வெளியிட்டுள்ளது. Mid Term Review. 1999 என்ற அந்த அறிக்கையிலுள்ள சில புள்ளிவிவரங்களை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

கொலைகள்—இந்த 6 மாத காலத்தில் உத்தரப் பிரதேசத்திலே 4,668; பீகாரில் 2,716; மத்தியப் பிரதேசத்தில் 1,647; மராட்டியத்தில் 1,513; ஆந்திரப் பிரதேசத்தில் 1,367; தமிழ்நாட்டில் 907. இந்த 907 என்பது மிகக் குறைவு என்று நான் கூறமாட்டேன். இந்த 907 கூட நடைபெறாவண்ணம் நம்முடைய காவல் துறை இன்னும் கடமையாற்றிட வேண்டும் என்பதுதான் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்து என்பதை நான் மிகத் தெளிவாக உணர்வேன்.

கற்பழிப்பு போன்ற காரியங்கள்—மத்தியப் பிரதேசத்திலே 1,868; உத்தரப் பிரதேசத்திலே 825; மராட்டியத்தில் 648; இராஜஸ்தானில் 609; பீகாரில் 596; ஆந்திரப் பிரதேசத்தில் 485; அசாமில் 327; மேற்கு வங்கத்தில் 412; கேரளாவில் 214; தமிழ்நாட்டில் 202;

கூட்டுக்கொள்ளைகள் (Dacoity)—பீகாரில் 1,190; உத்தரப் பிரதேசத்தில் 509; அசாமில் 448; மராட்டியத்தில் 269; மேற்கு வங்கத்தில் 202; கர்நாடகாவில் 151; குஜராத்தில் 147; ஆந்திரப் பிரதேசத்தில் 123; தமிழ்நாட்டில் 87;

வழிப்பறி—(Robbery)—உத்தரப் பிரதேசத்தில் 2,295; பீகாரில் 1,430; ஒரிசாவில் 557; கர்நாடகாவில் 551; ஆந்திரப் பிரதேசத்தில் 403; தமிழ்நாட்டில் 297; கன்னக்களவு (Burglary) —மத்தியப் பிரதேசத்தில் 8,962; மராட்டியத்தில் 7,339; உத்தரப் பிரதேசத்தில் 4,739; கர்நாடகாவில் 3,940; ஆந்திரப் பிரதேசத்தில் 3,396; தமிழ்நாட்டில் 2,745.

கலவரங்கள் (Riots)—இராஜஸ்தானில் 7,861; பீகாரில் 5,540; கர்நாடகாவில் 3,722; உத்தரப் பிரதேசத்தில் 3,494; கேரளாவில் 3,199; மேற்கு வங்காளத்தில் 2,258; தமிழ்நாட்டில் 1,939 என்ற அளவில் இந்த விகிதாச்சாரங்கள். குற்ற நிகழ்வுகளைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 11-45

காவல் துறையினுடைய சிறப்பான பணி என்று எடுத்துக்கொண்டால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், காவல் துறையினுடைய எண்ணிக்கை ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு எவ்வளவு பேர், மற்ற மாநிலங்களிலே எவ்வளவு பேர் என்ற கணக்கைப் பார்க்கின்றபொழுது, ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு, பஞ்சாபில் 297 காவலர்கள்; அஸ்ஸாமில் 193 காவலர்கள்; ஹரியானாவில் 162 காவலர்கள்; மராட்டியத்தில் 155 காவலர்கள்; குஜராத்தில் 138 காவலர்கள் என்ற விகிதத்திலே இருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டிலேதான் ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு நூற்றி இருபத்து நான்கே பேர்கள்தான் காவலர்கள் என்ற விகிதத்திலே, குறைவான எண்ணிக்கையில் உள்ளது. ஆனால் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்பொழுது, காவலர்கள் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும்கூட, செயல்பாடுகள் மற்ற மாநிலங்களை மிஞ்சக்கூடிய அளவில் இருக்கின்றன.

பதிவு செய்யப்பட்ட வழக்குகளில், குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளினுடைய சதவீதம் என்று பார்த்தால், அகில இந்திய சராசரி, 1997-ல் 77 சதவீதம். தமிழ்நாட்டில் 91 சதவீதம். 1998 ஆம் ஆண்டு அகில இந்திய சராசரி 77 சதவீதம். தமிழ்நாட்டில் 90 சதவீதம்.

அதேபோல தொடரப்பட்ட வழக்குகளில், தண்டனையில் முடிவுற்ற வழக்குகளினுடைய சதவீதம் அகில இந்திய சராசரி 1997-ல் 38 சதவீதம். தமிழ்நாட்டில் 64 சதவீதம். 1998-ல் அகில இந்திய சராசரி 37 சதவீதம், தமிழ்நாட்டில் 64 சதவீதம். அதிலும் நாம் சிறப்பாகப் பணியாற்றினோம் என்பதைத்தான் அந்தப் புள்ளிவிவரம் நமக்கு இங்கே காட்டுகின்றது.

காவல் துறையில் மதம், ஜாதி இவையெல்லாம் தலைக் காட்டக்கூடாது என்ற ஒரு நல்ல தத்துவத்தை நம்முடைய அருமை நண்பர் அப்துல் லத்தீப் அவர்கள் இங்கே எடுத்துக்கூறி, காவல் துறையிலே இஸ்லாமியர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவேயில்லை என்று கூறினார். அதிலும் குறிப்பாக இரகசியப் புலனாய்வுத் துறை போன்ற துறைகளிலிருந்து இஸ்லாமியர்கள்



நீக்கப்பட்டிருக்கின்றார்கள் என்று கூறினார். கடந்த ஆண்டு காவல் துறை மானியத்திலே பேசும்போதும் திரு. லத்தீப் அவர்கள் இதையேதான் கூறினார். இந்த ஆண்டும் அதையேதான் கூறியிருக்கின்றார்.

1989 ஆம் ஆண்டு நான் ஆட்சியிலே இருந்தபோதுதான், ஜாபர் அலி அவர்களைப் புலனாய்வுத் துறைப் பொறுப்பில் வைத்திருந்தேன். ஜாபர் அலி என்றாலே அவர் முஸ்லிம் என்று நமக்குத் தெரியும். ஜாபர் அலி செட்டியார் என்றோ, ஜாபர் அலி முதலியார் என்றோ யாரும் சொல்லமுடியாது. அவரைத்தான், புலனாய்வுக் துறைப் பொறுப்பிலே அமர்த்தி அவருக்கு மாநில அளவிலே அந்தப் பொறுப்பை நான் அளித்திருந்தேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மாற்றப்பட்ட பிறகு, வந்த ஆட்சியினர், அவரை என்ன பாடுபடுத்தினார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். அருமை நண்பர் லத்தீப் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். அந்த வேதனையைத் தாங்கமாட்டாமல் தாமாகவே ஓய்வு பெற்றுக்கொண்டார் ஜாபர் அலி அவர்கள். புலனாய்வுத் துறையிலே தலைமைப் பொறுப்பில் ஜாபர் அலியை நான் நியமித்ததற்கு முன்பு, இஸ்லாமியர் யாருமே இருந்ததில்லை என்பதையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். தற்போதுகூட, எனக்கு முதன்மைப் பாதுகாவலராக இருப்பவர், ஜாபர் சேட், I.P.S. அவர்கள்தான் என்பதை நான் லத்தீப் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

காவல் துறையிலே ஒட்டுமொத்தமாக இஸ்லாமியர்கள் என்று பார்த்தால், S.P. நிலை அதிகாரிகள் 5 பேர்; கூடுதல் S.P. கடந்த ஆண்டு 3 பேர், இந்த ஆண்டு 6 பேர்; D.S.P. கடந்த ஆண்டு 16 பேர், இந்த ஆண்டு 17 பேர். Inspectors கடந்த ஆண்டு வரை 132 பேர், இந்த ஆண்டு 137 பேர். Sub-Inspectors கடந்த ஆண்டு வரையில் 231 பேர், இந்த ஆண்டு 271 பேர். தலைமைக் காவலர்கள் மற்றும் காவலர்கள், கடந்த ஆண்டு வரையில் 4,617 பேர், இந்த ஆண்டு 4,648 பேர். ஒட்டுமொத்தமாக கடந்த ஆண்டு 4,604 இஸ்லாமியர்கள் இருந்ததற்கு மாறாக இந்த ஆண்டு 5,084 பேர் காவல் துறையிலே பணியாற்றுகின்றார்கள். காவல் துறையில் மொத்தப் பணியாளர்களுடைய எண்ணிக்கையில் இது 6.3 விழுக்காடு என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். 1 விழுக்காடு உண்டா என்று அன்றைக்கு அவர்கள் ஆணித்தரமாகக் கேட்டார்கள். 6.3 விழுக்காடு காவல் துறை மொத்தப் பணியாளர்களில் இஸ்லாமியர்கள் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-50

இன்னும் சொல்லப்போனால், அரசின் முக்கிய துறையான பொதுத் துறையின் செயலாளரே பரூக்கி என்ற இஸ்லாமிய I.A.S. அதிகாரிதான். மாவட்ட ஆட்சித் தலைவர்களில் மூன்று பேர் இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான்.

இரகசியத் துறையிலே இஸ்லாமியர் இல்லை என்றும், இருந்தவர்கள் நீக்கப்பட்டு விட்டார்கள் என்றும் லத்தீப் அவர்கள் கூறினார்கள். குற்றப் புலனாய்வுத் துறை, ஒற்றாய்வுத் துறை, `Q' பிரிவு ஆகியவற்றில் இஸ்லாமியர்கள் S.P. நிலையில் ஒருவரும், D.S.P. நிலையில் ஒருவரும், 6 Inspector-களும், 7 Sub-Inspector-களும், 30 தலைமைக் காவலர் மற்றும் காவலர்களும் ஆக மொத்தம் 45 பேர் பணியாற்றுகின்றார்கள். அண்மைக்காலத்தில் 'Q' பிரிவிலிருந்து ஒரேயொரு Inspector-ரும், ஒரு தலைமைக் காவலரும்தான் மாற்றப்பட்டுள்ளார்கள். மற்றவர்கள் யாரும் மாற்றப்படவில்லை.

இன்னொன்று, இலட்சக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான இஸ்லாமிய இளைஞர்கள் சிறையில் இருப்பதாகச் சொன்னார்கள். நான் அதைப்பற்றி வலியுறுத்திக் கேட்டபோது, இவையெல்லாம் ஒரு உயர்வு நவிற்சி என்று சொன்னார்கள். உயர்வு நவிற்சி என்பது இல்லாத பெருமையை அதிகமாகச் சொல்வது; இல்லாத எண்ணிக்கையை அதிகமாகச் சொல்வது, மிகைப்படுத்துதல். அவர் பன்மொழிப் புலவர். அவருக்கு நான் தமிழ் கற்றுக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. மிகைப்படுத்தி, அன்றைக்கு, ஆயிரக்கணக்கான இஸ்லாமிய இளைஞர்கள், அப்பாவி இளைஞர்கள் சிறையில் இருப்பதாகச் சொன்னார்கள். அந்த எண்ணிக்கையை நீங்கள்தான் கொண்டு வரவேண்டுமென்று எனக்குச் சொன்னார்கள், நான் திருப்பிக் கேட்டபோது. கொண்டு வந்து இருக்கின்றேன். கட்டளையை ஏற்று. (சிரிப்பு)

தமிழகத்திலே உள்ள பத்து சிறைச்சாலைகளிலும் சேர்த்து 12-5-2000 அன்று சிறையிலே இருக்கின்ற மொத்தக் கைதிகளின் எண்ணிக்கை 13,138. 12 ஆம் தேதியோடு தமிழ்நாட்டு சிறையிலே, 10 சிறைக் கோட்டங்களிலே இருக்கின்றவர்களுடைய எண்ணிக்கை 13,138. இதில் இஸ்லாமியர்கள் 351 பேர்; இஸ்லாமியர்கள் அல்லாதவர்கள் 12,787 பேர்.



இஸ்லாமியர்கள் 2.67 சதவிகிதம்; அல்லாதவர்கள் 97.33 சதவிகிதம் என்ற இந்த விவரத்தை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விரைவான புலன் விசாரணை நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டு அன்று பேசிய எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் சிலரால் எடுத்து வைக்கப்பட்டது. நம்முடைய சுந்தரம் அவர்களும் அதே கருத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். நத்தை வேகத்திலே காவல் துறை நடைபெறுவதாக அன்றைக்கு அவர்கள் கூறினார்கள். எந்த அளவுக்குத் தீவிரமாக, விரைவாக புலன் விசாரணை நடைபெற்று, குற்றப் பத்திரிகைகள் எல்லாம் கொடுக்கப்பட்டு, விசாரணையும் முடிவுற்று, தண்டனைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதற்குச் சில விவரங்களை இந்த அவைக்குத் தெரிவிப்பது என்னுடைய தலையாய கடமையாகும்.

கோயம்புத்தூரில் நடந்த வெடிகுண்டுச் சம்பவங்களை விசாரிக்க அமைக்கப்பட்ட சிறப்புப் புலனாய்வுக் குழு தீவிரமாக விசாரணை செய்து, 175 குற்றவாளிகளைக் கைது செய்தது. கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டு காலத்திற்குள் விசாரணை முடிக்கப்பட்டு 5-5-1999 அன்று 180 பேருக்கு எதிராகக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

சென்னையிலிருந்து திருச்சி, ஈரோடு, திருச்சூர் சென்ற ரயில்களில் 6-12-1997 அன்று குண்டு வெடித்து, 10 பேர் இறந்த சம்பவத்தைப் புலனாய்வு செய்த சிறப்புப் புலனாய்வுக் குழு, குற்றவாளிகள் ஒன்பது பேரை விரைந்து கைது செய்தது.

சென்னை, கோவை மற்றும் திருச்சி ஆகிய நகரங்களில் 30-5-1999 அன்று குண்டு வைத்த குற்றவாளிகள் கைது செய்யப்பட்டார்கள். சென்னை இந்து முன்னணி அலுவலகத்தை வெடி வைத்துத் தகர்த்த வழக்கு, திரைப்பட இயக்குநர் மணிரத்தினம் வீட்டின்மீது குண்டு வீசப்பட்ட வழக்கு, சென்னையில் மூன்று ஓட்டல்களில் குண்டு வெடிக்கப்பட்ட வழக்குகள்—முந்தைய ஆட்சிக்காலத்தின்போது நிகழ்ந்து—நீண்டகாலமாக நிலுவையிலிருந்தன. அந்த வழக்குகள், கழக ஆட்சி பொறுப்பேற்றவுடன் விரைந்து புலன் விசாரணை செய்யப்பட்டு, குற்றவாளிகள் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

தருமபுரியிலே கோவை விவசாயக் கல்லூரி மாணவிகள் சென்ற பேருந்து ஒன்று எரிக்கப்பட்டு, அதிலிருந்த 3 விவசாயக் கல்லூரி மாணவிகள் எரித்துக் கொல்லப்பட்டார்கள். நாட்டையே அதிர்ச்சி அடையச் செய்த அந்த வன்முறை கொலைச் சம்பவம் குறித்த வழக்கில் குற்றப் புலனாய்வுத் துறையின் சிறப்புப் புலனாய்வுக் குழுவினால் புலனாய்வு செய்யப்பட்டு குற்றவாளிகள் கைது செய்யப்பட்டார்கள். 28-4-2000 அன்று, குற்றம் நடைபெற்ற மூன்று மாதத்திற்குள் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட 3 முக்கியக் குற்றவாளிகள் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் சிறையிலடைக்கப்பட்டார்கள். இன்னும் முக்கியமான வழக்குகள் என்று எடுத்துக்கொண்டால் பரபரப்பான பல வழக்குகள் விரைந்து முடிவு செய்யப்பட்டிருக்கின்றன.

*முற்பகல் 11-55*

போலிச் சாமியார் பிரேமானந்தா வழக்கில், பிரேமானந்தாவுக்கு 30 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் அபராதமாக ரூபாய் 66 இலட்சத்து 40 ஆயிரமும் விதிக்கப்பட்டது. இதர நான்கு குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனையும் மற்றும் பெண் குற்றவாளியான டாக்டர் சந்திராதேவிக்கு 2 ஆண்டு 7 மாதம் 2 நாட்கள் சிறைத் தண்டனையும், அபராதமாக ரூபாய் 25 ஆயிரமும் விதிக்கப்பட்டது.

சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழக மருத்துவக் கல்லூரி முதலாமாண்டு மாணவர் பொன். நாவரசு கொலை வழக்கில், ragging காரணமாக அக்கொலையைச் செய்த ஜான் டேவிட் என்ற குற்றவாளிக்கு ஆயுள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

பொள்ளாச்சியில் ஜிகாத் Committee தலைவர் திரு. பழனிபாபா கொலை செய்யப்பட்ட வழக்கில் 10-11-1999 அன்று ஐந்து குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனையும் மேலும் 5 வருடக் கடுங்காவல் தண்டனையும் அளிக்கப்பட்டது.

சிதம்பரம் ம.தி.மு.க பிரமுகர் பழனிவேலு கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட 17 குற்றவாளிகள், கைதாகாமல் இருக்க எடுத்துக்கொண்ட எல்லா முயற்சிகளையும் முறியடித்து காவல் துறையினர் அவர்களைக் கைது செய்து, குற்றப் பத்திரிகையும் தாக்கல் செய்துள்ளார்கள்.

தேவகோட்டை தி.மு.க. இளைஞர் அணி அமைப்பாளர் ரூசோ கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட காளிமுத்து, சொர்ணலிங்கம்



மற்றும் 11 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு விசாரணை முடிந்து குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

மதுரை கல்லூரிப் பேராசிரியர் பரமசிவம் கொலை செய்யப் பட்ட வழக்கில் சம்பந்தப்பட்ட இப்ராஹிம், நூர்தீன், ஷாகுல் ஹமீது, இப்ராஹிம் ஷா மற்றும் பழனி ஆகிய குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். இவர்கள்மீதும், நீதிமன்றத்தில் சரண் அடைந்த பக்ருதின் என்பவர்மீதும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அத்துடன் இவர்களில் 4 குற்றவாளிகளின்மீது தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

மதுரையில் உதவி ஜெயிலர் ஜெயப்பிரகாஷ் கொலை செய்யப்பட்ட வழக்கில் அபுதாகிர், ஆசிக், அஸ்லாம் மற்றும் ஜாப்ரு என்ற சையது ஜபார் அகமது ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள்மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

திண்டுக்கல் மாவட்டம், களத்தூரைச் சேர்ந்த மந்திரவாதி வேலுசாமி தனது தாயார், மாமனார் மற்றும் தனது உதவியாளர் ஆகிய மூன்று பேரைக் கொன்ற வழக்கில், புலன் விசாரணை C.B.-C.I.D-க்கு மாற்றப்பட்டுள்ளது. வேலுசாமி உள்ளிட்ட மூவர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். 25-2-2000 அன்று குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நாகர்கோவிலைச் சேர்ந்த செல்வி என்பவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளிகள் சிவகுமார், வாத்தியார் முருகன் என்கிற தியாகராஜன் மற்றும் நாகராஜன் ஆகியோர் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள். இவ்வழக்கில் விரைவில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட இருக்கிறது.

தருமபுரி மாவட்டத்தில் மூன்று வனப் பாதுகாவலர்கள் எரித்துக் கொல்லப்பட்ட வழக்கில், மூன்று வனப் பாதுகாவலர்களும் பசவன் என்பவனின் கும்பலினால் கொலை செய்யப்பட்டு, அவர்களது உடல்கள் எரிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. அனைத்துக் குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டார்கள். வழக்கு நடைபெற்று வருகிறது.

மார்த்தாண்டத்தில் ஆசிரமம் நடத்திவந்த ஜான் ஜோசப் என்ற போலிச் சாமியார்மீது கற்பழிப்பு, பயமுறுத்தல், கொலை ஆகிய குற்றச் செயல்கள் புரிந்ததாகப் புகார்கள் வந்தன. தீவிர புலன் விசாரணைக்குப் பிறகு, போலிச் சாமியாரும் மேலும் 4 பேரும் கைது செய்யப்பட்டார்கள்.

தூத்துக்குடி காயல்பட்டினம் பேட்மா நகரில் மஜீத் என்பவர் நரபலி தரப்பட்ட வழக்கில் இரண்டு எதிரிகளும் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டார்கள். இவ்வழக்கில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

Eve-teasing காரணமாக பலத்த காயமடைந்து சரிகா ஷா என்ற கல்லூரி மாணவி இறந்துவிட்டார். இதற்குக் காரணமான குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார்கள். குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

திருச்சியில் டாக்டர் ஸ்ரீதர் கொலை செய்யப்பட்ட வழக்கில் சம்பந்தப்பட்ட 13 குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டார்கள். குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்ட R.S.S. அமைப்பாளர் குப்புராம் தாக்கப்பட்ட வழக்கில் இரு குற்றவாளிகளையும் காவல் துறையினர் கைது செய்துள்ளார்கள். குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு தற்போது நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

திருச்சியில் லீலாவதி என்பவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் கொலைக்குக் காரணமான ஸ்ரீபுத்ரா, தினகரன், ஸ்ரீஜெயந்தி, மாதாஜி, பெரிய சத்தியநாராயணன், சின்ன சத்தியநாராயணன் மற்றும் அவர்களுக்கு உடந்தையாக இருந்த 7 பேரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டனர்.

சென்னையில் கிறித்துவக் கல்லூரியில் விண்ணப்பம் வாங்கச் சென்ற ராஜேஸ்வரி என்ற இளம்பெண் கல்லூரி வளாகத்தில் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். காவல் துறையின் தீவிரமான புலன் விசாரணையின் மூலம் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டார்கள். 4 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்தது போன்ற போலியான ஜாமீன் உத்தரவுகளைத் தயார் செய்து, அவற்றைப் பயன்படுத்தி, நெல்லை,



தூத்துக்குடி, குமரி மாவட்டங்களைச் சேர்ந்த 48 கைதிகளை ஜாமீனில் விடுவித்துவிட்டார்கள். இந்த வழக்கில் குற்றவாளிகளான தூத்துக்குடியைச் சேர்ந்த குருமூர்த்தி, உடன்குடியைச் சேர்ந்த பொன் ஆதித்தன், சேரன்மகாதேவியைச் சேர்ந்த பாலநாசம் மற்றும் நாகர்கோவிலைச் சேர்ந்த பொன்ராஜ் ஆகியோரை ஆதாரங்களோடு கைது செய்து, போலியான ஜாமீன் உத்தரவுகள் தயார் செய்வது ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

நண்பகல் 12-00

பெரம்பலூர் மாவட்டத்தில் 1999 ஆம் ஆண்டில் 6 மாத காலத்தில் நடந்த வெவ்வேறு சம்பவங்களில், ஒதுக்குப்புறமாக இருந்த வீடுகளில் வசித்த 21 பெண்கள் ஒரே முறையில் கொலை செய்யப்பட்டார்கள். போலீசாரின் தீவிரமான புலன் விசாரணைக்குப் பிறகு இக்கொலைகளைச் செய்த மருதமுத்து என்பவர் கைது செய்யப்பட்டு குண்டர்கள் தடுப்புச் சட்டத்திலே சிறையிலே அடைக்கப்பட்டார்.

கன்னியாகுமரி, தெரிசனம்கொப்பு என்ற இடத்தில் ஒரு தனியார் வங்கியின் (GSC) பாதுகாப்புப் பெட்டகம் உடைக்கப்பட்டு ரூ.60 இலட்சம் மதிப்புள்ள நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன. இந்த வழக்கில் அனைத்துக் குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டார்கள். கொள்ளையடிக்கப்பட்ட அனைத்து நகைகளும் திரும்பக் கைப்பற்றப்பட்டன.

மதுரை மாநகராட்சி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திருமதி லீலாவதி கொலை வழக்கில் ஆளுங்கட்சிக்காரர்கள் மீதே குற்றஞ்சாட்டப்பட்டது, என்றாலும் அவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டார்கள், அதுமாத்திரமல்ல. வழக்கு முடியும்வரை அவர்கள் ஜாமீனில்கூட வரமுடியாமல், குற்றவாளிகள் ஆறு பேருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கோவையில் பச்சிலை ராமன் என்பவர் ஜக்கம்மா பூஜை என்ற பெயரில் சுமார் 20 அப்பாவிப் பெண்களைக் கடத்திச் சென்று உடலுறவு வைத்து பின்னர் திருப்பி அனுப்பியிருக்கிறார். 8-2-2000 அன்று இவர் கைது செய்யப்பட்டு ஓராண்டு தடுப்புக் காவல் சட்டத்திலே வைக்கப்பட்டுள்ளார்.

சேலம் மாவட்டத்தில் சுப்பிரமணி என்பவர் சாமியாடி வாக்கு சொல்லுவதாகக் கூறி பல நாட்களாக ஏமாற்றி வந்திருக்கிறார். இறுதியாக வள்ளி அம்மாள் என்பவரைக் கற்பழித்ததாகப் புகார் வந்ததையொட்டி வழக்குப் பதிவு செய்யப்பட்டு இவரும் கைது செய்யப்பட்டார்.

இவ்வளவு ஏன், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்களுடைய மகனுடைய இல்லத்திலேகூட 12 ஆம் தேதி திருட்டு, 13 ஆம் தேதி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மகன் வீட்டில் திருடியதை 24 மணி நேரத்தில் பிடித்துவிட்டார்கள். அதனால் எனக்கு என்ன தொல்லை என்றால், திருட்டுக்கு உள்ளானவர்கள் எல்லாம் நீங்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதால் வந்துவிட்டது. அதேபோல் எங்களுக்கும் வாங்கிக் கொடுங்கள் என்று ஏகப்பட்ட phone calls வருகிறது. (சிரிப்பு)

**மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி:** எப்படியோ செய்தி, விளம்பரமானால் சரி. (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், பலமாடிக் குடியிருப்புகளில் திருடுவதில் கைதேர்ந்த கவுஸ் பாஷா, அவருடைய மகன் அக்பர் பாஷா மற்றும் மருமகன் நாசர் ஆகியோர் சென்னை நகரக் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டார்கள். 18 வழக்குகளில் தொடர்புள்ள இவர்களிடம் இருந்து ரூ.5.2 இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் மீட்கப்பட்டன. இவர்கள் குண்டர்கள் தடுப்புச்சட்டத்தின் கீழ் சிறையிலே அடைக்கப்பட்டார்கள்.

தாம்பரத்தை அடுத்த பொழிச்சலூரைச் சேர்ந்த, 1990 முதல் திருட்டுக் குற்றங்களில் ஈடுபட்டு வந்து 105 வழக்குகளில் குற்றவாளியான இரத்தின பாண்டியன் என்பவர் 13-9-1999 அன்று கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 87 தொலைக்காட்சிப் பெட்டிகள், 131 சவரன் தங்க நகைகள் கைப்பற்றப்பட்டன. 4-11-1999 அன்று இவர் குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் அடைக்கப்பட்டார்.

தென் சென்னைப் பகுதிகளில் திருட்டுகள் புரிந்து வந்த கல்கத்தாவைச் சேர்ந்த கொடூரமான குற்றவாளி பர்வீஸ் அலி என்பவர் 2-7-1999



அன்று கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து ரூ.3 இலட்சம் மதிப்புள்ள தங்க நகைகள் மீட்கப்பட்டன. இக்குற்றவாளி, குண்டர்கள் தடுப்புச் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டார்.

சென்னை பூக்கடைப் பகுதிகளிலே உள்ள வியாபாரிகளிடமிருந்து பெரிய அளவில் பணத்தைக் கொள்ளை அடித்து, 10 கிலோ எடையுள்ள தங்க நகைகள் மற்றும் சுமார் 25 இலட்சம் ரூபாய் பணத்தைக் கொள்ளையடித்த குற்றவாளிகளான மன்னீர்பேட்டையைச் சார்ந்த அனில்குமார் மற்றும் அவரது கூட்டாளிகள் 20-7-1999 அன்று கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் அனைவரும் குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

பல்வேறு கொள்ளைகள் மற்றும் பணத்திற்காக ஆட்களைக் கடத்துதல் போன்ற குற்றங்களைச் செய்து வந்த முகேஷ் மற்றும் அவனது கூட்டாளிகள் அனைவரும் 29-12-1999 அன்று கைது செய்யப்பட்டார்கள். அவர்களிடமிருந்து மூன்று கைத்துப்பாக்கிகள், 37 குண்டுகள், அம்பாசிடர் கார், இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ரூ.4 இலட்சம் கைப்பற்றப்பட்டன.

வருமான வரி அதிகாரிகளைப் போலவும், சுங்க இலாகா அதிகாரிகளைப் போலவும் மேலும் Police C.I.D. அதிகாரிகள் போலவும் போலியான வேஷத்தோடு மக்களை ஏமாற்றியும் மிரட்டியும் கொள்ளைகள் நடத்திய சதீஷ் மற்றும் அவனது கூட்டாளிகள் கைது செய்யப்பட்டார்கள். 11-3-1999 அன்று குண்டர்கள் தடுப்புச சட்டத்தின்கீழ் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஏமாற்று, கொள்ளை அடித்தல், வஞ்சித்து திருடுதல் போன்ற காரியங்கள் மாத்திரமல்ல, ரவுடிகள் ராஜ்யத்தைக்கூட இந்த 4 ஆண்டுகாலத்திலே நம்முடைய காவல் துறையினர் பெருமளவுக்குக் கட்டுப்படுத்தி, தகர்த்தெறிந்திருக்கிறார்கள்.

சென்னையிலே மோகன் என்ற கபிலன், ஆசைத்தம்பி, மனோ, கோபால் ஆகிய ரவுடிகள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். திருநெல்வேலியில் முத்துராஜ் என்ற ரவுடி; கன்னியாகுமரியில் நாவல்காடு ஆர்னால்டு என்ற ரவுடி; தஞ்சாவூரில் கண்ணன் என்ற ரவுடி; தூத்துக்குடியில் பால் என்ற ரவுடி; சில நாட்களுக்கு முன்பு திருச்சியிலே பிச்சைமுத்து என்ற ரவுடி; சில மாதங்களுக்கு முன்பு திருச்சியிலே கோசிஜின்—இப்படி பிரபல ரவுடிகள் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டு இருக்கின்றார்கள்.

பிற்பகல் 12-05

பல்வேறு கொலைகள், கொள்ளைகள் மற்றும் வழிபறிகள் புரிந்து நீண்ட நாட்களாகத் தலைமறைவாய் இருந்துவந்த கொடூரமான ரவுடி ரவி என்கிற வெள்ளை ரவி கைது செய்யப்பட்டு 12-5-1999 அன்று குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் சிறையில் அடைக்கப்பட்டு இருக்கிறார்.

பல்வேறு கொலைக் குற்றங்கள், கொள்ளைகள், பணத்திற்காக ஆட்களைக் கடத்துதல், கட்டப் பஞ்சாயத்து செய்து குடியிருப்பவர்களை மிரட்டி வீட்டைக் காலி செய்ய வைப்பது போன்ற கொடுங் குற்றங்களைச் செய்து வந்த சைதாப்பேட்டையைச் சேர்ந்த பிரபல ரவுடி குமார் என்ற பங்க் குமார் கைது செய்யப்பட்டு 7-4-1999 அன்று குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் சிறையில் அடைக்கப்பட்டார். இன்னொரு ரவுடி சேராவும் கைது செய்யப்பட்டார்.

ஏற்கெனவே 17 முறை சிறைத் தண்டனை அனுபவித்து 32 கொள்ளைகள், கொலை மற்றும் வன்முறை போன்ற குற்றங்களில் சம்பந்தப்பட்ட சென்னை சேத்துப்பட்டைச் சேர்ந்த தங்கையன் என்பவரும் அவனது 8 கூட்டாளிகளும் 14-12-1999 அன்று கைது செய்யப்பட்டார்கள். குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

சென்னை வால்டாக்ஸ் சாலையைச் சார்ந்த தங்கவேல் மற்றும் அவரது சகோதரர்கள், உறவினர் ஆகியோர் 7-2-1999 அன்று கோபி என்பவரைக் கொலை செய்தார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டு 22-2-1999 அன்று குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

பல்வேறு கொள்ளை, பணத்திற்காக ஆட்களை கடத்துதல் மற்றும் வியாபாரிகளை மிரட்டிப் பணம் வசூலித்தல் போன்ற குற்றங்களைச் செய்து வந்த சுப்பிரமணி என்ற குற்றவாளி 27-6-1999 அன்று குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் சிறையில் அடைக்கப்பட்டார்.

கட்டப் பஞ்சாயத்து செய்தல், ஆட்களைக் கடத்துதல் மற்றும் ஆட்களை மிரட்டி குடும்பத்தினரை வீடு காலி பண்ணச் செய்து வந்த இராஜா என்பவனும் அவனது கூட்டாளிகள் 12 பேர்களும் 10-4-1999 அன்று கைது செய்யப்பட்டு குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

கன்னியாகுமரி மாவட்டம் ரவுடி கும்பலைச் சேர்ந்த லிங்கம், பாபு சுரேஷ் ஆகியோரைக் கொலை செய்த ரவுடி சீலன் கும்பலைச் சேர்ந்த 24 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள்.



பல குண்டு வெடிப்புச் சம்பவங்களில் சம்பந்தப்பட்ட ஏர்வாடி காசிம் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டார்.

ரவுடிகள் மீண்டும் தொடர்ந்து தலையெடுக்காமல் இருக்கத் தேவையான கடுமையான நடவடிக்கைகளை இந்த அரசு தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது. அதற்குப் பொதுமக்களுடைய ஒத்துழைப்பு நிரம்பத் தேவை என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருட்டு வீடியோ. சினிமா படம் எடுப்பவர்களை பெரும் நஷ்டத்திற்கு ஆளாக்கும் வகையிலே நடைபெறுகின்ற ஒரு காரியம் திருட்டு வீடியோ என்பது. ஒரு படம் தயாரிக்கப்பட்டு, அது வெளியிடப்பட்ட முதல் நாளோ அல்லது வெளியிடப்படுவதற்கு முதல் நாளோ இந்த திருட்டு வீடியோக்கள் நாட்டிலே பரவி, படத்தினுடைய வசூலைக் கெடுப்பதாக படத் தயாரிப்பாளர்கள், திரைப்படக் கலைஞர்கள், பலமுறை என்னிடத்திலே முறையிட்டு இருக்கின்றார்கள். கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அளித்த உறுதியின் காரணமாக 2000 ஆண்டு ஜனவரி முதல் இதுவரை திருட்டு வீடியோ தொடர்பாக 99 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 108 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டார்கள். 2 கோடியே 49 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

1999 ஆம் ஆண்டில் திருட்டு வீடியோ தடுப்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு 123 வழக்குகளைப் பதிவு செய்தது. அதில் 10 வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. 68 வழக்குகள் நிலுவையிலே இருக்கின்றன. ஒரு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார். 6 இலட்சத்து 57 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள திருட்டு வீடியோக்கள் கைப்பற்றப்பட்டன.

சென்னை மாநகரில் கடந்த ஆண்டு மட்டும் திருட்டு வீடியோ தொடர்பாக மொத்தம் 80 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 7 பேர்மீது குண்டர்கள் தடுப்புச் சட்டப்படி வழக்குப் போடப்பட்டு மூன்று மாதங்கள் சிறையிலே இருந்த பிறகுதான் உயர் நீதிமன்றத்தின் ஆய்வுக் குழு ஆணைப்படி சிறையிலிருந்து வெளியே வந்துள்ளார்கள். மேலும் 36 பேர்மீது வழக்குத் தொடரப்பட்டு நடைபெற்று வருகிறது.

5,840 வி.சி.டி.-க்களும், 14,205 வீடியோ கேசட்டுகளும் கைப்பற்றப்பட்டு இருக்கின்றன. இந்த ஆண்டில் மாத்திரம் சென்னை மாநகரில் 24 வழக்குகள் போடப்பட்டு 26 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 5,455 வி.சி.டி.-க்களும், 115 வீடியோ கேசட்டுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. 12-5-2000 அன்று மாலை நடைபெற்ற சோதனையிலே மாத்திரம் 1,180 வி.சி.டி.-க்கள் கைப்பற்றப்பட்டு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் நகரிலே உள்ள சில வீடியோ கடைகளில் திடீர் சோதனை செய்ததில் 79 வி.சி.டி.-க்கள் கைப்பற்றப்பட்டு மேலும் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்ற விவரத்தையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-10

காவல் நிலைய மரணங்களைப்பற்றி நம்முடைய ஞானசேகரன் அவர்கள் பேசினார்கள். காவல் நிலையத்திற்குச் சென்றாலே மரணம்தானா என்று ஆத்திரத்தோடு கேட்டார்கள். காவல் நிலைய மரணங்களை இந்த அரசு வரவேற்கவில்லை. மாறாக தன்னுடைய கவலையை அதற்காகத் தெரிவித்துக்கொள்கிற அரசுதான் இந்த அரசு என்பதையும் அதற்குக் காரணமாக இருக்கின்ற காவல் துறை அதிகாரிகளைக் கடுமையாகத் தண்டிக்கின்ற அரசு இந்த அரசு என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள். கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற அளவுக்கு, சமீப காலமாக, காவல் நிலைய மரணங்கள் இப்போது நிகழவில்லை. உறுப்பினர்களுக்குத் தரப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பிலும் அது விளக்கப்பட்டிருக்கிறது. 1996 ஆம் ஆண்டு காவல் நிலையங்களிலே நடந்த மரணங்கள் 13; 1997-ல் 16; 1998-ல் 8; 1999-ல் 8. இந்த மரணங்களும் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய முக்கியமான நோக்கம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தவறு செய்த அதிகாரிகள்மீது இந்த அரசு எடுத்த நடவடிக்கை, இந்த 4 ஆண்டுகளில் மட்டும், 1 Inspector, 2 Sub-Inspectors, 9 காவலர்கள் இந்தக் காவல் நிலைய மரணங்களுக்காகக் கைது செய்யப்பட்டுள்ளார்கள். 4 D.S.P-க்கள், 16 Inspectors, 20 Sub-Inspectors, 75 காவலர்கள்மீது குற்றவியல் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



டாக்டர் செல்லக்குமார் பேசும்போது ஈழத் தமிழர் ஆதரவு மாநாடு தமிழகத்திலே நடைபெற்றதைக் குறித்தும், அது தடுக்கப்பட்டதைக் குறித்தும், தடுக்கப்பட்ட நேரத்திலேகூட அவர்கள், அந்த மாநாட்டுப் பிரச்சாரம் செய்தார்கள் என்பது குறித்தும் இங்கே கருத்துத் தெரிவித்தார். ஈழத் தமிழர் ஆதரவு மாநாட்டை இந்த அரசு ஆதரிக்கவில்லை என்பதற்கு அடையாளமாகத்தான், நிச்சயமாக அதை எதிர்க்கிறது என்பதற்குச் சான்றாகத்தான், சிதம்பரத்தில் நடைபெற்ற அந்த மாநாடு தடுக்கப்பட்டது. அந்த மாநாட்டிலே கலந்துகொள்வதற்கு வந்தவர்களெல்லாம்—சுமார் 200-க்கும் மேற்பட்டவர்கள்--கைது செய்யப்பட்டார்கள். ஆனால் டாக்டர் செல்லக்குமார் பேசும்போது ஒன்று கேட்டார். திருவாரூரில் இந்த மாநாடு நடத்த எப்படி அனுமதி கொடுத்தீர்கள் என்பது போன்ற ஒரு கருத்தை இங்கே எழுப்பினார். தமிழீழ விடுதலை ஆதரவாளர்கள் ஒருங்கிணைப்புக் குழு, திரு. நெடுமாறன் தலைமையில் 19-1-1997 அன்று மதுரை தமுக்கம் மைதானத்தில் தமிழர் எச்சரிக்கை மாநாடு என்ற பெயரில் மாநாடு நடத்த இருந்தார்கள். இதற்குக் காவல் துறை அனுமதி மறுத்துவிட்டது. இதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட Writ மனுமீது சென்னை உயர் நீதிமன்றம் மாநாடு நடத்த அனுமதி வழங்கிவிட்டது. உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கிய காரணத்தால்தான் மதுரையிலும், தொடர்ந்து திருவாரூரிலும், இராணிப்பேட்டையிலும் மாநாடு நடத்த, அந்தக் கூட்டங்கள் நடத்த அனுமதிக்கப்பட்டன. அவைகூட, பெரிய அளவில் நடைபெற்ற மாநாடுகள் அல்ல. ஆனால் அந்த நேரத்திலே இலங்கையிலும் இதுபோன்ற அளவிற்கு தீவிரமான நிலையில்லை. இருந்தபோதிலும்கூட, நீதிமன்றத்தினுடைய அந்தத் தீர்ப்புக்கு நாம் கட்டுப்பட வேண்டியவர்களானோம். எனவே அப்போது தடை விதிக்கப்படவில்லை. இந்த நேரம் மிகத் தீவிரமான நேரம். இலங்கையிலே தீவிரமான போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற நேரம்.

7-5-2000 அன்று சிதம்பரத்தில் ஈழத் தமிழர் ஆதரவு மாநாடு நடத்துவதாக முதலில் அறிவித்துவிட்டு பின்னர் இலங்கையில் விடுதலைப் புலிகள் ஆனையிறவு வெற்றி மாநாடு என்ற பெயரால் மாநாடு நடத்தப் போவதாக அறிவித்தார்கள். இலங்கையில் தற்போது நிலவி வரும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டும், கூட்டம் நடத்தவிருந்த திருமண மண்டபத்திற்கு அச்சுறுத்தல்கள் வந்ததாலும், சட்டம் ஒழுங்கைக் கருதியும் இந்த மாநாட்டிற்கு அரசு தடை விதித்தது.

தடையைமீறி மாநாட்டிற்கு வந்திருந்த 258 பேர் கைது செய்யப்பட்டார்கள். கைது செய்யப்பட்டு அவர்கள் வைக்கப்பட்டிருந்த திருமண மண்டபத்திலே அவர்களுக்கு என்று ஒலிப்பெருக்கி எதுவும் கொடுக்கப்படவில்லை. ஒலிப்பெருக்கி இல்லாமலே—நாங்கள் எதிர்க்கட்சியிலே இருந்திருக்கிறோம், நீங்கள் இப்போது இருக்கிறீர்கள். கைது செய்யப்பட்டு கொண்டுபோய் காவல் நிலையத்திலே வைத்தாலே அங்கே நாம் ஒரு கூட்டத்தை நடத்திவிடுவோம். இது இயற்கை. நாங்கள் ஜெயிலில் இருந்தபோதுகூட—6 மாதம் நான் ஜெயலில் இருந்தபோதும் சரி, பிறகு 3 மாதம், 2 மாதம் இருந்தபோதும் சரி, அங்கே, ஜெயிலுக்குள்ளே கூட்டம் நடத்துவதுதான் வழக்கம். அது மாதிரி நடந்த கூட்டம்தானே தவிர அரசாங்கத்தினுடைய அனுமதியோடு நடைபெற்ற கூட்டம் அல்ல என்பதை நான் நம்முடைய நண்பர் செல்லக்குமார் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-15

விடுதலைப் புலிகளை அனுமதிக்கக் கூடாது என்று நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே உணர்ச்சி வசப்பட்டு சில கருத்துகளைச் சொன்னார்கள். ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம் என்றாலே, இலங்கையில் உள்ள தமிழீழத்தை ஒரு காலத்திலே ஆதரித்தோம் என்ற காரணத்திற்காக அல்லது இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்படுகிறார்கள் என்பதற்காக கண்ணீர் உகுத்தோம் என்ற ஒரு காரணத்திற்காக அந்தப் போராளிகள் செய்கின்ற எல்லாக் காரியங்களையும் நாங்கள் ஆதரித்தவர்கள் அல்ல. இங்கே சொன்னார்கள் அமிர்தலிங்கத்தைப்பற்றி. அதைப்போல ஸ்ரீசபாரத்தினத்தைப் பற்றி. அவர்களெல்லாம் எனக்கு மிக நெருங்கிய நண்பர்கள். அவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. வெவ்வேறு இயக்கங்களைச் சேர்ந்தவர்கள். நான்கு, ஐந்து இயக்கங்கள் அதிலே இருந்தன. இந்த நான்கு, ஐந்து இயக்கங்களும் இந்தியாவிலே இறக்குமதியானபோது ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு இயக்கத்திற்குப் பின்னணியிலே இருந்து அவர்களுக்காகக் குரல் கொடுக்கத் தொடங்கிவிட்டார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் மிக நன்றாகத் தெரியும். அந்த நிலையிலேதான் எம்.ஜி.ஆர். அவர்கள் விடுதலைப் புலிகள் — இவர் சொல்லுகின்ற Tigers (L.T.T.E.) அவர்களுக்கு, அவர்களைச் சார்ந்தவர்களுக்கு நிறைய உதவிகளைச் செய்தார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் பக்கம் சில குழுக்கள் அன்றைக்கு வந்தன. 'TELO' போன்ற குழுக்கள் எல்லாம் அன்றைக்கு எங்கள் பக்கம் வந்து எங்களுடைய ஆதரவைக் கோரினார்கள்.



E.P.R.L.F. என்ற ஒரு group இருந்தது. அவர்கள் சில கட்சிகளுடைய தயவை நாடினார்கள். இப்படி நான்கு ஐந்து groups இருந்தபோது, குழுக்கள் இருந்த அந்தக் காலகட்டத்தில் நாங்கள் எல்லோரையும் சமமாக நினைத்துத்தான் உதவினோம். என்னுடைய பிறந்தநாள் ஒன்றிற்கு உண்டியலிலே போடப்பட்ட பணத்தை எல்லாக் குழுவினருக்கும் பகிர்ந்தளிப்பதாக அறிவித்து, அப்படி அந்த அறிக்கையை நான் வெளியிட்டபோது மூன்று, நான்கு குழுக்கள் வந்து வாங்கிக்கொண்டார்கள். விடுதலைப் புலிகள் மாத்திரம் வந்து வாங்கிக்கொள்ள மறுத்துவிட்டார்கள். நான் கொடுப்பதை வாங்கிக்கொள்ள முடியாது என்று மறுத்துவிட்டார்கள். காரணம் அங்கேயே group-ஆக இருந்துதான் வந்தார்கள், இங்கே வந்தாலும் இங்கே வேறு group இவர்களுக்கு. அதனால் வாங்கினால் யாரோ கோபித்துக் கொள்வார்கள் என்பதற்காக வாங்காமல் இருந்துவிட்டார்கள். அது நாடறிந்த இரகசியம். பிறகு அந்தப் பணத்தை மறுபடியும் பிரித்து மிச்சம் இருக்கிற குழுக்களுக்கே கொடுத்துவிட்டேன். விடுதலைப் புலிகள் வாங்க மறுத்துவிட்டார்கள். அந்த அளவுதான் எனக்கும் விடுதலைப் புலிகளுக்கும் உள்ள தொடர்பு என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பத்மநாபா கொலையைப்பற்றி நம்முடைய டாக்டர் செல்லக்குமார் அவர்கள்கூடப் பேசினார்கள். பத்மநாபா கொலை நடந்தது 19-6-1990. அதற்குப்பிறகு 4 மாதங்கள் கழித்து 4-10-1990-லே முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைகளுக்கு ஒரு தனிப் பேட்டி கொடுக்கிறார்கள். அந்தப் பேட்டியில் என்ன சொல்லியிருக்கிறார்கள் தெரியுமா? 'பத்மநாபா கொலைக்குப் பிறகு புகார் கூறுகிற அளவுக்கு விடுதலைப் புலிகள் எந்தக் காரியத்திலும் ஈடுபடவில்லை' என்று ஒரு Certificate கொடுக்கிறார்கள். இது இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே 4-10-1990 அன்று வந்த அவருடைய பேட்டி, ஜெயலலிதா அவர்களுடைய பேட்டி.

"சிங்கள இராணுவமும், காவல் துறையும் இலங்கையில் தமிழ் இனத்தை அழிப்பதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார்கள். விடுதலைப் புலிகள் இயக்கம் துணிவான போராட்டத்தில் ஈடுபட்டு சிங்கள இராணுவத்தை எதிர்த்து தீரத்தோடு போர் நடத்தி வருகிறது. கடந்த இரு மாதங்களில் தமிழ்நாட்டில் புகார் கூறும் அளவுக்கு எந்தவிதமான

நடவடிக்கைகளிலும் விடுதலைப் புலிகள் ஈடுபடவில்லை. இப்போது விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு நாட்டின் அரசாங்கத்தை எதிர்த்துப் போர் நடத்தி வருகின்றது. இது ஒரு அதி தீரமான செயல்......

விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டுவிட்டால் இலங்கையில் உள்ள தமிழினம் முழுவதும் அழிந்துவிடும் என்பதை நாம் மனதில் நிறுத்த வேண்டும். விடுதலைப் புலிகளினுடைய வெற்றி, இலங்கைத் தமிழர்களின் வெற்றியாகும். அவர்களுக்கு உதவும் வகையில் எதுவும் செய்வதற்குப் பதிலாக, தமிழக முதலமைச்சர் கருணாநிதி தன்னைப் பாதுகாத்துக்கொள்வதிலேயே கவனம் செலுத்தி வருகிறார். அவருடைய அனைத்து சக்தியும் மற்றும் கவனம் முழுவதும் முதலமைச்சருடைய நாற்காலியைப் பாதுகாத்துக்கொள்வதற்கே அர்ப்பணிக்கப்பட்டு வருகின்றது''

என்று என்மீது குற்றஞ்சாட்டி விடுதலைப் புலிகளுக்கு நான் உதவவில்லை என்பதை பத்திரிகையிலே தனிப் பேட்டியாகக் கொடுத்தவர் செல்வி ஜெயலலிதா அவர்கள் என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அதுமாத்திரமல்ல.................. (குறுக்கீடு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் இராஜீவ் காந்தி இங்கே தமிழகத்திற்கு வந்து கொலை செய்யப்பட்ட பிறகு உள்ள நிகழ்ச்சி ஒன்று. இராஜீவ் காந்தி நிகழ்ச்சிக்கு முன்பு அவர்களுடைய நிலைமை வேறு. அதை விடுதலைப் புலிகள்...........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை யாரும் மறுக்கவில்லை. முதலமைச்சர் அவர்கள் தேதியைச் சொல்லும்போதே அது தெளிவாகத் தெரிகிறது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் அதை மறுக்கவில்லை. ஆனால் பத்மநாபா கொலைக்குப் பிறகு நாங்கள் விடுதலைப் புலிகளை ஏற்றுக்கொள்ளவில்லை. பத்மநாபா கொலைக்குப் பிறகே செல்வி ஜெயலலிதா அவர்கள் விடுதலைப் புலிகளை ஏற்றுக்கொண்டு விடுத்த அறிக்கை இது. (குறுக்கீடு) போதும், போதும், அதற்குமேலே பேசமுடியாது. போதும் போதும். பத்மநாபா கொலைக்குப் பிறகு ........... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், தெளிவாகச் சொல்லியாகிவிட்டது. அதற்குப் பிறகு நீங்கள் ஏன் எழுந்து நின்று கொண்டிருக்கிறீர்கள்? நான் உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை. உட்காருங்கள்.



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பத்மநாபா கொலைக்குப் பிறகு என்றுகூடச் சொல்லமாட்டேன். அதற்கு முன்பே அமிர்தலிங்கத்தினுடைய கொலையானாலும் 'TELO'-வினுடைய தலைவர் ஸ்ரீசபாரத்தினத்தினுடைய கொலையானாலும் அதைப்போல வேறு சில போராளிகளுடைய கொலை, போராளிக் குழுவினுடைய தலைவர் உமாமகேஸ்வரன் அவர்களுடைய கொலையானாலும் இந்தக் கொலைகள் எல்லாம் நடந்த பிறகு, தன்னுடைய இனத்திலே உள்ளவர்களையே அழித்துவிட்டு தன்னுடைய இனத்தை எப்படிக் காப்பாற்ற முடியும் என்கின்ற அந்த ஆதங்கம் எங்களுக்கு ஏற்பட்டது. அதனால் நாங்கள் விடுதலைப் புலிகளை ஆரம்பத்திலிருந்தே எந்த அளவுக்கு ஆதரித்தோமோ அந்த அளவுக்கு ஆதரிக்கவில்லை, நாங்கள் ஒதுங்கிவிட்டோம் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்வதற்காகத்தான் இதைக் கூறுகின்றேன். (குறுக்கீடு)

பிற்பகல் 12-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு.சுந்தரம், உங்களுக்கு நான் அனுமதி கொடுக்கவில்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) நான் அனுமதி கொடுக்கவில்லை. நீங்கள் பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது. உட்காருங்கள். (குறுக்கீடு) நான் அனுமதி கொடுக்கவில்லை என்று சொன்னதற்குப்பின் எழுந்து நின்றால் என்ன அர்த்தம்?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இப்போதும்கூட, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான கடத்தல்காரர்கள் 51 பேர் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்படி (N.S.A.) கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். 4 wireless கருவிகள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன என்பதையும் சொல்ல விரும்புகின்றேன். 1996 மே மாதத்திற்குப் பிறகு L.T.T.E. சம்பந்தப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் ஒன்றுகூட நடைபெறவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். 1991-96 ஆகிய 5 ஆண்டுக் காலத்திலே பல சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. அந்தப் பழைய கதைக்கெல்லாம் நான் மீண்டும் செல்ல விரும்பவில்லை.

'பங்களாதேஷ் பிரச்சினையில் இந்திரா காந்தி செய்ததைப் போல இராணுவ நடவடிக்கைபற்றி இந்தியா சிந்தித்தால் அதில் தவறு எதுவும் இல்லை என்று கருதுகிறேன்'

என்றுகூடச் சொன்னவர்தான் ஜெயலலிதா: இந்து பத்திரிகையிலே 29-4-1991 அன்று வந்தது. பிறகு அவரது கருத்தை மாற்றிக்

கொண்டிருக்கிறார். நான் அதை வரவேற்கிறேன். ஆனால் இப்படி ஒரு கருத்தைச் சொன்னதற்காகவே, அந்தக் கருத்திலேயே கடைசிவரையிலே இருக்கிறார்கள் என்று யாரும் அதை அழுத்தந்திருத்தமாகச் சொல்லிவிட முடியாது........ (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்ல வருவதைத்தான் அவரே சொல்லுகிறார். நீங்கள் ஊடே எழுந்திருக்க வேண்டாம். நான் உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை. முதலமைச்சர் தன்னுடைய நிலையைத் தெளிவாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) நீங்கள் பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது. நீங்கள் முதலில் உட்காருங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** முதலில் அவர் தமிழைக் கொஞ்சம் கற்றுக்கொள்ள வேண்டும். முதலில் நான் பேசுகின்ற தமிழைக் கற்றுக்கொள்ள வேண்டும். தமிழைக் கற்றுக்கொள்ளாமல் பேசக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) 'தமிழ் ஈழத்தை ஆதரிக்கிறேன்' என்று நான் சொல்லவில்லை. 'தமிழ் ஈழம் பெறுவார்களேயானால் மகிழ்ச்சியடைவேன்' என்று சொன்னேன். அதற்கும், இதற்கும் எவ்வளவு வேறுபாடு இருக்கிறது, எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். அதுதான் தமிழ்; தமிழில் அதுதான் பெரிய கோளாறு.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** **

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தமிழ் ஈழத்தை ஆதரித்து இங்கே போராட்டம் நடத்துவோம் என்று சொல்லவில்லை. அந்தக் காலத்திலே ஜெயவர்தனாவுக்கு வராத கோபம் உங்களுக்கு ஏன் இன்று வருகிறது? சந்திரிகாவுக்கு வராத கோபம் உங்களுக்கு ஏன் இப்போது வருகிறது என்று எனக்குத் தெரியவில்லை. அதற்கு என்ன காரணம் என்று எனக்குத் தெரியவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், நம்முடைய ஞானசேகரன் அவர்களும் பேசும்போது நிதி நிறுவனங்களுடைய மோசடிகள் குறித்துப் பேசினார்கள். இந்த நிதி நிறுவனங்களுடைய மோசடிகளைக் கண்டு பிடித்து நடவடிக்கை எடுக்க ஆரம்பித்ததே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் என்பதை அறிவீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே ஒன்றிரண்டு நிகழ்வுகளில் கணக்கம் இருந்திருக்கலாம்;

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



அல்லது ஒன்றிரண்டு நிகழ்வுகளில் சில அதிகாரிகளால் தவறுகள் கூட ஏற்பட்டிருக்கலாம். அவற்றையெல்லாம் நம்முடைய செல்லக்குமார் அவர்கள்கூட அன்றைக்குச் சுட்டிக்காட்டினார்கள். அவையெல்லாம் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு, அவை மறுபடியும் ஒழுங்குபடுத்தப்பட்டன என்பதை அறிவீர்கள். ஆனால் இந்த அரசு எடுத்த நடவடிக்கைகளினால் நிதி நிறுவனங்களுடைய மோசடிகள் மக்கள் மன்றத்திலே அம்பலமாக்கப்பட்டன. அதுவும் குறிப்பாக, இந்தியாவிற்கே வழிகாட்டியாக, 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி நிறுவன வைப்பீட்டாளர்கள் பாதுகாப்புச் சட்டத்தை இந்த அரசுதான் முதன்முதலாக இயற்றியது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மோசடி சம்பந்தமான வழக்குகளை விசாரிக்க சென்னையிலே தனி நீதிமன்றம் ஒன்றை அமைத்தது. தனி நீதிமன்றம் என்றால் அந்த நீதிமன்றம் அல்ல. இது வேறு. இந்த மோசடிக்காக, நிதி நிறுவனங்களுடைய மோசடிக்காக தனி நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட்டதை நீங்கள் அறிவீர்கள். மோசடி நிதி நிறுவனங்கள்மீது நடவடிக்கை எடுக்க பொருளாதாரக் குற்றப் பிரிவு-2 என்ற புதிய காவல் துறைப் பிரிவை இந்த அரசு 1999-ல் ஏற்படுத்தியது. இதுவரையில் பொருளாதாரக் குற்றப் பிரிவில் மொத்தம் 235 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு இவற்றில் 4 வழக்குகளில் எதிரிகள் முதலீட்டாளர்களுக்கு முதலீட்டுத் தொகை முழுவதையும் செலுத்திவிட்டபடியால் மேல் நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருக்கின்றன.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிறுவனங்களில் கடன் பெற்றவர்கள் இருக்கிறார்கள். நிறைய கடன் பெற்றுவிட்டு கட்டாமலேயே விட்டுவிடுகிறார்கள். அதனால் deposit செய்தவர்களுக்குப் பணம் கிடைக்க வழியில்லாமல் இருப்பதால், நிதி நிறுவனங்களிடம் கடன் பெற்றவர்களின் சொத்தை attach செய்கின்ற முறையில் சட்டத்திருத்தம் செய்ய வேண்டுமென்ற வலியுறுத்தல் இருக்கிறது. அதுகுறித்து மாநில அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 12-25

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிறுவனங்களிலே மோசடி செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் சொல்லுகின்றபோது மிகத் தெளிவாகச்

சொல்லியிருக்கிறேன். நீதிமன்றத்திலே காவல் துறையைக் கண்டிப்பு செய்த பிறகு, கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கைதான் அதிகமாகியிருக்கிறது. 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்ட பிறகும்கூட அவர்கள் தப்பிவிட்டார்கள் என்று சொல்கின்ற சூழ்நிலை இப்போது இருந்து கொண்டிருக்கிறது. பல நிதி நிறுவனங்களினுடைய அதிபர்கள் SRI MARIAS என்று சொல்கின்ற நிறுவனம், NEW INDIA FINANCE என்கிற நிறுவனம், RICHARD AND CLIFF என்கிற நிறுவனம் போன்ற பல நிறுவனங்களினுடைய அதிபர்கள் இதுவரை கைது செய்யப்படாமல், அவர்கள் தப்பித்துவிட்டார்கள் என்று காவல் துறை அதிகாரிகள் சொல்கின்ற சூழ்நிலை தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் சொன்னதுபோல, நான் ஏற்கெனவே கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே பேசுகின்றபோது, இந்தக் கருத்தை வலியுறுத்தினேன். ஏனென்று சொன்னால், கடன் பெற்றவர்கள் செல்வாக்கு பெற்றவர்கள். பல்வேறு அரசியல் தலைவர்களுடைய பின்னணியிலே செயல்பட்டுக் கொண்டிருப்பவர்கள்; பல்வேறு அரசியல் இயக்கங்களினுடைய பின்னணியிலே செயல்பட்டுக் கொண்டிருப்பவர்கள்; கோடிக்கணக்கான ரூபாய்க்கு கடனைப் பெற்றுவிட்டு, அந்த நிதி நிறுவனத்தினுடைய அதிபர்கள் கைது செய்யப்பட்டபிறகு, தாங்கள் தப்பித்துக் கொண்டோம் என்கிற சூழ்நிலையில், அவர்கள் இப்போது தப்பிக்கின்ற நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களுடைய சொத்துக்களை அரசு கையகப்படுத்துவதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, திரு. சுப்பராயன் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு இப்போது நடைபெற்று வருகிற அந்த வழக்குகளில் சாதக பாதகமாக என்ன இருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்து, அவர் கூறிய அந்தக் கருத்தை இணைத்து, சட்டப்படி யோசித்து ஆவன செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். செல்லக்குமார் எழுப்பியது; ஏதோ ஒன்றிரண்டு பேர் தப்பித்துக் கொண்டார்கள் என்று நானே ஒத்துக்கொண்டு சொன்னேன். அவர் அந்தப் பெயர்களைச் சொல்ல வேண்டும்; ஏதோ அரசியல் இயக்கங்களினுடைய பின்னணியிலே இருக்கின்றன என்பதையெல்லாம் இங்கே சொல்ல வேண்டும் என்று எண்ணிச் சொல்கின்றார். அரசியல் இயக்கங்களினுடைய பின்னணியில் இருக்கின்றன என்று சொல்கின்ற காரணத்தால், அது திராவிட முன்னேற்றக் கழகம் என்று ஆகிவிடாது. எந்த அரசியல் இயக்கமும்



இருக்கலாம். எந்தெந்த அரசியல் இயக்கங்கள் எதெதிலெல்லாம் பின்னணியாக இருக்கின்றன என்பதை நான் மிக நன்றாக அறிவேன்; நாடும் மிக நன்றாக அறியும். எனவே அதைச் சொல்ல விரும்பவில்லை.

இதுவரை 235 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அதில் நான்கு வழக்குகளில் எதிரிகள் முதலீட்டாளர்களுக்கு முதலீட்டுத் தொகை முழுவதையும் செலுத்திவிட்டபடியால் மேல்நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருக்கின்றன. அவர்கள் முழுப் பணத்தையும் செலுத்திவிட்டார்கள். ஆகவே மேல் நடவடிக்கை கைவிடப்பட்டிருக்கின்றது. மேலும் நான்கு வழக்குகளில் எதிரிகள் மீது புதிதாக இயற்றப்பட்ட 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி நிறுவன வைப்பீட்டாளர்களின் பாதுகாப்புச் சட்டப்படி தண்டனையில் முடிந்து நிதி நிறுவன உரிமையாளர்களுக்கு அதிகபட்சத் தண்டனையாக 10 வருட கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. ஒருவருக்கு 1 இலட்ச ரூபாய் அபராதமும் மற்றும் மூவருக்கு தலா 50,000 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டிருக்கிறது.

41 வழக்குகளில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, பல்வேறு நீதிமன்றங்களில் விசாரணையில் உள்ளன. இவ்வழக்குகளில் 17 வழக்குகள் சென்னையிலே தனி நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளன. மேற்படி 235 வழக்குகளில் 8 இலட்சத்து 24 ஆயிரத்து 724 முதலீட்டாளர்களின் 1,477 கோடி ரூபாயை பல்வேறு மோசடி நிதி நிறுவனங்கள் ஏமாற்றியுள்ளன. ஒன்றிரண்டு அல்ல. 1,477 கோடி ரூபாய். இதுவரை மொத்தம் 1 இலட்சத்து 32 ஆயிரத்து 589 புகார்கள் பெறப்பட்டுள்ளன. 1,048 கோடி ரூபாய் மதிப்புள்ள நிதி நிறுவனங்களின் சொத்துக்கள் அடையாளம் காணப்பட்டுவிட்டன. 1,477 கோடியில் 1048 கோடி ரூபாய் மதிப்புள்ள நிதி நிறுவனங்களின் சொத்துக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேற்படி 235 வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ள 725 நபர்களில் 301 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். மீதமுள்ள 302 எதிரிகளைக் கைது செய்ய தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நிதி நிறுவன மோசடி வழக்குகளில் 34 நிதி நிறுவனங்களுக்குச் சொந்தமான 314.83 கோடி ரூபாய் மதிப்புள்ள அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை காவல் துறை கண்டுபிடித்து, சொத்துக்கள் முடக்கப்பட்டு, மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. காவல் துறையின் நடவடிக்கையால் இதுவரை முதலீட்டாளர்களுக்கு 103 கோடியே 62 இலட்ச ரூபாய் பெற்றுத் தரப்பட்டுள்ளது என்பதையும்

நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் அதிக வட்டிக்கு ஆசைப்பட்டு, பொதுமக்கள் இனிமேலாவது ஏமாறாமல் இருக்க வேண்டும் என்றுதான் இந்தப் புள்ளிவிவரத்தின் மூலமாக நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எத்தனை செய்திகள் வந்தாலும், மறுபடியும் இன்னொரு நிதி நிறுவன மோசடி என்று வருகிறது. காரணம், பொதுமக்கள் அதிக வட்டிக்கு ஆசைப்பட்டு, அங்கே கொண்டுபோய் பணத்தைப் போடுகிறார்கள். பணத்தைப் போட்டுவிட்டு ஏமாந்த பிறகு, அதற்கு அரசாங்கம்தான் பொறுப்பு; வாங்கிக் கொடு என்று பழியை நம் தலையிலே போடுகிறார்கள். பல சாமியார்களிடம் ஏமாந்தாலும்கூட, புதுப்புது சாமியார்கள் முளைத்துக்கொண்டு இருப்பதைப்போல, இந்த நிதி நிறுவனங்களில் ஏமாந்தாலும்கூட, புதுப்புது நிதி நிறுவனங்கள் முளைத்துக் கொண்டேதான் இருக்கின்றன என்பதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-30*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிறுவன மோசடியில், ஆரணி, குடியாத்தம், வேலூர் போன்ற பகுதிகளிலே, பணத்தைப் பெற்றுக் கொண்டு, அவர்கள் cash certificate என்று கொடுப்பதற்குப் பதிலாக, pro-note என்று கொடுத்து விட்டிருக்கிறார்கள். இந்த pro-note என்கிற வார்த்தையை வைத்துக்கொண்டு, இதற்கு civil வழக்குப் போட்டுத்தான் நடவடிக்கை எடுக்க வேண்டுமேயொழிய, நாங்கள் criminal சட்டப்படி நடவடிக்கை எடுக்கமாட்டோம் என்று வழக்கும் பதிவு செய்யாமல், கைதும் செய்யாமல் காவல் துறையினர் இருந்து கொண்டிருக்கிறார்கள்; எந்தப் பொருளையும் seize செய்யாமல் இருக்கிறார்கள். pro-note என்று அவர்கள் மோசடியாக எழுதியிருக்கிற காரணத்தினால், அதை மோசடிக் குற்றமாகச் சேர்த்து, இந்தச் சட்டத்திலே கொண்டுவந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அது pro-note ஆக இருக்கிற வரையிலே pro-note தான். அது மோசடி என்று கண்டுபிடிக்கிற வரையிலே அது pro-note ஆகத்தான் இருக்கும். அதற்குள்ள சாஸ்திரம், சம்பிரதாயம் என்று இருக்க முடியுமே தவிர, pro-note-ஐப்போய் திடீரென்று மோசடி என்று சொல்ல முடியாது. அது pro-note இல்லை; அது மோசடி என்று கண்டுபிடிக்கப்பட்ட பிறகு



வேண்டுமானால், இரண்டுக்கும் சேர்த்து அவர்கள்மீது வழக்குத் தொடரலாம்.

இன்னொன்றையும் சொன்னார், செல்லக்குமார். வடபழனி காவல் நிலையம் நான் கேட்டேன்; நீங்கள் கொடுத்தீர்கள்; ஆனால் அந்தக் காவல் நிலையத் திறப்பு விழாவிற்கு எனக்கு அழைப்பு இல்லை; என்னைக் கூப்பிடவில்லை என்று சொன்னார். அதிலே பாதி உண்மை. காவல் நிலையம் கேட்டது உண்மை; நான் கொடுத்தது உண்மை. ஆனால் அதற்குத் திறப்பு விழா நடக்கவில்லை. நடந்தால்தானே கூப்பிட முடியும்? நடக்கவில்லை. (குறுக்கீடு) எல்லாவற்றுக்கும் இப்படி எழுந்து நின்றால் எப்படி?

**டாக்டர் அ. செல்லக்குமார்:** தவறாகச் சொல்லவில்லை; பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நான் சொல்கிறேன். எனக்கு வந்த தகவலை நான் சொல்கிறேன். (குறுக்கீடு) எனக்கு வந்த தகவல்-(குறுக்கீடு) நான் தகவலைச் சொல்வதற்கு முன்னால் சொன்னால் எப்படி? நான் அதிகமாக இடம் கொடுத்து உட்காருகிறேன் என்பதற்காக சும்மா சும்மா எழுந்திருப்பதா? நான் கொஞ்சம் ஓய்வு எடுக்கலாம் என்பதற்காக உட்காருகிறேன்; அவ்வளவுதான். (சிரிப்பு) ஏற்கெனவே, கோடம்பாக்கத்திலே ஒரு காவல் நிலையம் இருக்கிறது. அந்தக் காவல் நிலையத்திலே, நான் செல்லக்குமாருக்குக் கொடுத்த அந்த வடபழனி காவல் நிலையத்தையும் அங்கே வைத்து, இரண்டு பேரையும் வைத்து, ஒண்டிக் குடித்தனம் வைத்து நடத்தினார்கள் கொஞ்சம் நாட்கள். கொஞ்சம் நாட்கள் நடத்தினார்கள். அதற்குப் பிறகு, அந்தக் கோடம்பாக்கம் காவல் நிலையத்தை அங்கேயிருந்து அகற்றிவிட்டார்கள். 'ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியைத் துரத்தியது' மாதிரி'. (சிரிப்பு) உங்கள் பிடாரி—வடபழனி காவல் நிலையம்—அங்கே இருக்கிற கோடம்பாக்கம் காவல் நிலையத்தை வேறு இடத்திற்கு அப்புறப்படுத்தியது. அந்தக் கோடம்பாக்கம் காவல் நிலையம் வேறு இடத்திற்குப் போன பிறகு, பழைய கோடம்பாக்கம் காவல் நிலையத்திற்குத் திறப்பு விழா. திறப்பு விழா என்றால், invitation கிடையாது. யாருக்கும் அழைப்பு என்று எதுவும் கிடையாது. சும்மா அதிகாரிகள்போய் குத்து விளக்கு ஏற்றி வைத்தார்கள் பழைய காவல் நிலையத்திற்கு. புதிய காவல் நிலையத்திற்கு அதுகூட நடக்கவில்லை. அதனால்தான் செல்லக்குமார் அழைக்கப்படவில்லை. நான் செல்லக்குமார் போன்றவர்களெல்லாம் அழைக்கப்படவில்லை

.என்பதற்காக வருத்தப்படுவேனே தவிர, அதற்காக மகிழ்ச்சியடையக் கூடியவன் அல்ல என்பதையும் அவர் உணர வேண்டும்.

உதவி ஆய்வாளர் சம்பத்துக்குப் பதவி உயர்வு கொடுக்கப்படவில்லை என்று சொன்னார். அவர் செய்தது வெடிகுண்டு இருக்கிற இடத்தைப் போய் கண்டுபிடித்தார் என்பது. அதோடு அந்த வெடிகுண்டு வெடிக்குமா, வெடிக்காதா என்று பார்த்தார் என்கிற ஒரே தீரச் செயல்தான். வேறு ஒன்றும் இல்லை. ஆனால் சந்திரசேகரனுக்கு கோயம்புத்தூர் நிகழ்வில் கொடுத்தோம் என்றால் அவர், துப்பாக்கிப் பிரயோகத்தின் இடையிலே புகுந்து, வீரசாகசம் புரிந்து, அங்கே சமாளித்தார் என்பதற்காகத்தான் அவருக்கு பதக்கம் எல்லாம் கொடுத்தோம்; பதவி உயர்வு கொடுத்தோம். இவர் அப்படி அல்ல. இருந்தாலும்கூட சம்பத் அவர்களைப் பாராட்டி, 1,500 ரூபாயும், ஒட்டுமொத்தமாக அந்தக் குழுவினருக்கு 18 ஆயிரம் ரூபாயும் வெகுமதி வழங்கப்பட்டது. இவருக்கு குடியரசுத் தலைவர் விழாவில் விருது அல்லது பதக்கம் வழங்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து நமது திரு. ஜி.கே. மணி அவர்கள், வன்னியர் சங்கம் வழக்குகள் எல்லாம் வாபஸ் ஆகவில்லை என்று சொன்னார். சில வழக்குகள் G.O.-விற்குப் பிறகு அல்லது நீதிமன்றத்திலே சில தேக்கத்தின் காரணமாக வாபஸ் ஆகாமல் இருக்கலாம். அவை தவிர, வாபஸ் செய்ய வேண்டும் என்று எல்லாவற்றுக்கும் பொதுவான உத்தரவு போட்டாகிவிட்டது. 722 வழக்குகள்—1986 முதல் 1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையில் 722 வழக்குகள் அந்தச் சங்கத்தின் மீது இருந்தன அந்த ஆட்சியில். அவற்றில் நீதிமன்ற நிலுவையில் இருந்தது 409. எல்லாவற்றையும் சேர்த்து மூன்றே மாதங்களில், அரசு ஆணை எண் 854, பொதுத் துறை, தேதி 1-8-1996-இன்படி, திரும்பப்பெற ஆணையிடப்பட்டுவிட்டது. இவை தவிர, புலன் விசாரணையில் இருந்தவை என்ற அடிப்படையில் 72 வழக்குகளில் மேல் நடவடிக்கை கைவிடப்பட்டுவிட்டது. 137 வழக்குகள் பல்வேறு காரணங்களுக்காக நீதிமன்றத்திற்கே செல்லாமல் கைவிடப்பட்டன. 104 வழக்குகள் அரசிடம் கோரிக்கை வைக்கப்படுவதற்கு முன்பாகவே நீதிமன்றத்தாலும், காவல் துறையினராலும் முடிக்கப்பட்டுவிட்டன. எனவே ஏதாவது மிச்சம் மீதி இருந்தால், அதைக் குறிப்பாகச் சுட்டிக்காட்டினால், அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



பிற்பகல் 12-35

**திரு. இரா. தாமரைக்கனி:** எங்களுடைய பகுதியிலே, ஜாதிக் கலவரம்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாமரைக்கனி, கையை, கையைக் காண்பித்தால் என்ன அர்த்தம்?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அவையும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டு இருக்கின்றன.

சென்னையில் ஊர்வலம் நடத்த அனுமதியில்லையென்று பழனிசாமி அவர்களும் சொன்னார்கள்; ஹேமச்சந்திரன் அவர்களும் அன்றைக்குப் பேசினார்கள். சென்னை மாநகரத்திலே போக்குவரத்து நெருக்கடி காரணமாக, சில வரைமுறைகளைக் காவல் துறையினர் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இருந்தாலும்கூட, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, 1999-ஆம் ஆண்டு அனுமதி கோரிய நிகழ்வுகள் 75. அந்த 75-லே 56 நிகழ்வுகளுக்கு, அவர்கள் கோரிய இடத்திலேயே அனுமதி தரப்பட்டிருக்கிறது. 19 நேர்வுகளிலேதான் அனுமதி தரப்படவில்லை. இந்த ஆண்டு ஜனவரி முதல் 30-4-2000 வரை, அதே கட்சியினர் 33 முறை அனுமதி கோரினார்கள். 28 நிகழ்வுகளில் அவர்கள் கோரிய இடம் தரப்பட்டிருக்கிறது. 5 நிகழ்வுகளிலே மாத்திரம்தான் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அனுமதி வழங்குவது குறித்து நம்முடைய காவல் துறையினருக்குச் சொல்லியிருக்கிறேன். அனுமதி கேட்கும்போது, இரண்டு இடங்களைக் குறிப்பிட்டு அல்லது மூன்று இடங்களைக் குறிப்பிட்டு, இந்த மூன்றில் எந்த இடத்தை நீங்கள் எடுத்துக்கொள்கிறீர்கள் என்று அவர்களுக்கு எழுதுங்கள்; அந்த மூன்றில் ஒன்றையோ, இரண்டில் ஒன்றையோ எடுத்துக் கொள்ளட்டும் என்று நான் காவல் துறையினருக்குச் சொல்லி இருக்கிறேன். எனவே அந்தப் பிரச்சினை இனி எழாது.

நம்முடைய சுப்பராயன் அவர்கள் மோகனாம்பாள் கொலையைப்பற்றியும் அஞ்சலை கொலையைப்பற்றியும் பேசினார்கள். ஏதோ ஒரு பழைய காலத்து நாவலுக்கு தலைப்பு மாதிரி பேசினார்கள். அவர்களுக்கு எழுதி அனுப்பப்பட்ட அந்த முறையீட்டைப் படித்தால் உருக்கமாக இருக்கிறது. நான் இல்லை என்று மறுக்கவில்லை. எப்பொழுதுமே அந்த முறையீடுகளையும், மனுக்களையும் படித்துவிட்டு, அதை முழுவதும் நாம் உண்மை என்று நம்பிவிட முடியாது. ஆனால் அதை உண்மை அல்ல என்றும் நான் எடுத்துக்கொள்ளவில்லை. அதையும்

நான் சுப்பராயன் அவர்களுக்குச் சொல்கிறேன். ஆனால் முருகேசன் வழக்கைப் பொறுத்தவரையில், அது குற்றப் பத்திரிகையாகவே தாக்கல் செய்யப்பட்டுவிட்டாகிவிட்டது. இங்கே சொன்னார்கள். கடைசி நேரத்திலேதான் எங்களுக்கு அனுப்புகிறார்கள், அதுவரையிலும் அனுப்புவதில்லை என்று. அதேமாதிரி குற்றப் பத்திரிகை தாக்கல் செய்த பிறகு, இந்த விவரங்களை சுப்பராயன் அவர்கள் என்னிடத்திலே இங்கே கொடுத்திருக்கின்றார்கள். அதைப்பற்றி நான் விசாரித்தேன். இந்த வழக்கிலே, அந்த முருகேசன் தன்னுடைய மைத்துனியையும் கல்யாணம் செய்துகொள்வதற்கு விரும்பியிருக்கிறார். அதனாலே ஏற்பட்ட தகராறு. அதனாலே விளைந்த கொலை. அது ரங்கோன் ராதா மாதிரி நடந்திருக்கிறது.

எனக்கு தந்தத் தகவலைச் சொல்கிறேன். தகவல் வேறாக இருந்தால் திருத்திக்கொள்ளலாம். ஆனால் குற்றப் பத்திரிகை வரையிலும் வந்தாகிவிட்டது.

முருகேசன் தனது மைத்துனியையும் திருமணம் செய்துகொள்ள விரும்பியதாகவும் அதைத் தொடர்ந்து அவர் மனைவியைக் கொலை செய்துள்ளார் என்றும் காவல் துறை கூறுகிறது. கணவன் மனைவிக்கு இடையே அடிக்கடி தகராறு நடந்ததற்கும் கொலை நடைபெற்றதற்கும் சாட்சிகள் வாக்குமூலம் கொடுத்து அது குற்றவியல் நடுவர் முன்னால் பதிவு செய்யப்பட்டுள்ளது. முருகேசனிடமும் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு அவரிடமிருந்து, இறந்துபோன அந்தப் பெண்மணியினுடைய காது தோடும் கைப்பற்றப்பட்டுள்ளது. இந்த வழக்கிலே விசாரணை முடிந்து குற்றப் பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டு, வாய்தா 6-6-2000 அன்று போடப்பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணை குறித்து ஏற்கெனவே ஒரு குறிப்பிட்ட இயக்கத்தினர் புகார் செய்ததன்பேரில், C.B., C.I.D. இந்த வழக்கை மேற்பார்வை செய்து, ஒழுங்காக விசாரணை நடைபெற்றதாக, அவர்களும் ஒரு மதிப்பீடு செய்து, விசாரணை செய்து ஓர் அறிக்கையைக் கொடுத்திருக்கின்றார்கள்.

அதைப்போலவே விழுப்புரம் மாவட்டத்திலே, அஞ்சலை என்ற பெண், காவல் துறையினர் மிரட்டியதன் காரணமாக தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவித்தார். இந்த வழக்கில் அஞ்சலை, ராஜா என்பவரைக் காதலித்தார். காதலித்து அது கருவுறுகிற வரையிலே வந்து, அதற்குப் பிறகு அந்தக் காதலன் மறுத்துவிட அதன் காரணமாக, இறந்துவிட்டாரே தவிர, காவலர்கள் மோசமாகப் பேசினார்கள். ஆகவே



அவர் தன்னை கொலைக்கு உள்ளாக்கிக் கொண்டார் என்று சொல்வது அவ்வளவு பொருத்தமாகத் தெரியவில்லை. இந்த வழக்கிலே காவல் துறையினருக்கு சம்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லை.

அஞ்சலையின் அண்ணன் கொடுத்த முதல் புகாரில், காவல் துறையினர்மீது எந்தத் தவறும் அஞ்சலையினுடைய அண்ணன் கூறவில்லை. அந்தப் புகார் மனுவில் எந்தத் தவறும் கூறவில்லை. மேலும் இதுகுறித்து ஐயப்பாடுகள் எழுமேயானால் முருகேசன் சம்பவத்திலே குற்றப் புலனாய்வுத் துறை உள்ளூர் காவலர்கள் செய்த விசாரணை முறையாக நடைபெற்றதா என்பதை சரிபார்த்ததைப் போல, விழுப்புரம் நிகழ்வுபற்றியும் குற்றப் புலனாய்வுத் துறைக்கு ஆணையிட்டு சரி பார்க்கச் சொல்கிறேன் என்கிற உறுதியை மாத்திரம் நான் திரு. சுப்பராயன் அவர்களுக்கு இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிற்பகல் 12-40

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கே.ஆர். இராமசாமி இங்கே எழுப்பிய, பட்டு குருக்கள் கொலை. அதிலேயும் பல கோணங்களிலே போலீசார் துருவித் துருவி ஆராய்கிறார்கள். அதற்கு 3, 4 கோணங்கள் இருக்கின்றன. ஒரு கோணம் காதல் கோணம். ஆகவே காதல் இல்லாத கொலை என்று எதுவும் கிடையாது. (சிரிப்பு). அது அவருக்குத் தெரியும். கே.ஆர். இராமசாமிக்குத் தெரிந்திருக்கும்; தெரியாமல் இல்லை. இருந்தாலும் காதலை மறைத்துவிட்டு, பாக்கி விஷயங்களை மாத்திரம் அவர் இங்கே பேசியிருக்கிறார். புகழேந்தி என்கிறவரும், அவருடைய கூட்டாளிகளும் இந்தக் கொலைக்குக் காரணமாக இருப்பார்களோ என்ற சந்தேகமும் அதிகமாக ஏற்பட்டுள்ளது. இதற்கான நோக்கம் எதுவாக இருக்கும் என்று பல கோணங்களிலும் காவல் துறையினர் ஆராய்ந்து வருகின்றார்கள். C.B.,C.I.D. போலீசும் இதை மிகத் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது. விரைவில் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கக் கூடும் என்ற உறுதியை காவல் துறை எனக்கு அளித்துள்ளது என்பதையும் நான் நம்முடைய கே.ஆர். இராமசாமி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கள்ளச் சாராயம் பற்றி நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசினார்கள். அவர்களையெல்லாம் குண்டர்கள் தடுப்புச் சட்டத்திலே கைது செய்ய வேண்டும் என்று கூறினார்கள். இப்போதே பல பேர் குண்டர்கள் தடுப்புச் சட்டத்திலேதான் கைது

செய்யப்படுகிறார்கள். நாம் மதுவிலக்குக் கொள்கையிலே தீவிரமாக இல்லை என்று இங்கே சொல்லப்பட்டது. ஏன் இல்லை? அருமை நண்பர் எம்.ஜி.ஆர். காலத்திலேயிருந்து ஒரு புதிய முறை மதுவிலக்குக் கொள்கையிலே வகுக்கப்பட்டு இன்றளவும் அதுவே நடைமுறையிலே இருந்து வருகின்றது. அதன்படி இந்த ஆண்டு மாத்திரம் நமக்கு இந்த ஆயத் தீர்வையிலே கிடைத்திருப்பது ஏலம் உட்பட 1,830 கோடி ரூபாய். விற்பனை வரி மூலமாக 1,000 கோடி; ஆக 2,800 கோடி ரூபாய்க்கு மேல் இந்த ஆயத் தீர்வை மூலமாக தமிழக அரசுக்குக் கிடைத்திருக்கின்றது. இதனுடைய சந்து பொந்துகளிலே நுழைந்து கொண்டு கள்ளச் சாராய வியாபாரிகள் நடத்துகின்ற கூத்துகள், திருவிளையாடல்கள் மீது இந்த அரசு இப்போது மிக வன்மையாக நடவடிக்கை எடுத்து கண்டித்திருக்கின்றது, தண்டித்திருக்கின்றது என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

1999 ஆம் ஆண்டு மாத்திரம் 4,521 வாகனங்கள் கைப்பற்றப்பட்டன. 2000 ஆண்டில், 31-3-2000 வரை, 1,811 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. 1999 ஆம் ஆண்டில் கள்ளச் சாராயம் காயச்சுவோருக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 4,20,878. கைது செய்யப்பட்டோர் 3,91,306 பேர். இதில் பெண்கள் 94,760 பேர் என்பதுதான் வேதனைக்குரியது.

ஆயத் தீர்வை இழப்பினைத் தடுக்கும் பொருட்டு, இந்திய தயாரிப்பு அயல் நாட்டு மது வகை சில்லறை விற்பனைக் கடைகளில் தீவிர சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு 1999 ஆம் ஆண்டில் உரிமை விதிகளை மீறியதற்காக 7,878 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றில் சட்ட விரோதமாக bar நடத்திய குற்றத்திற்காக பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 2,923. இவற்றையும் மீறி இந்தத் தவறு நடந்து கொண்டுதான் இருக்கிறது என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்பது எனக்குப் புரியாமல் இல்லை. இருந்தாலும்கூட இத்தனையையும் மீறி நடைபெறுகின்ற இந்தத் தவறுகளை அறவே ஒழித்துக்கட்ட நாம் அனைவரும் ஒன்றுபட்டு, ஒரே கண்ணோட்டத்தோடு, இந்தக் கள்ளச் சாராயத்தை ஒழிக்கின்ற முயற்சியிலே ஈடுபட வேண்டும். அந்த முயற்சியிலே நாம் இப்போது பெருமளவு வெற்றி பெற்றிருக்கிறோம். ஆனால் முழுமையாக வெற்றி பெறவில்லை என்பதை ஒத்துக்கொண்டு, எல்லோருடைய ஒத்துழைப்பும் எனக்குத் தேவை என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.



இந்த நேரத்திலே சில அறிவிப்புகளை காவல் துறையின் சார்பாக இந்த மாமன்றத்திலே வெளியிட நான் விரும்புகின்றேன். காவல் துறை இயக்குநர் அலுவலக வளாகம்—ஏற்கெனவே நம்முடைய கடற்கரை ஓரத்திலே வானொலி நிலையத்திற்குப் பக்கத்திலே இருந்த காவல் துறை தலைமை அதிகாரியினுடைய அலுவலகத்தை மாற்றுவதற்கான முயற்சிகள் எல்லாம் நடைபெற்று, அது இடிக்கப்படுகிற நேரத்திலே இந்த ஆட்சி பொறுப்பேற்று அதை இடிக்காமல் தடுத்து, அதே இடத்திலே பழைய கட்டடத்தையே பொலிவுபடுத்தி, வலிவுபடுத்தி, புதுமைக்கோலம் கொள்ளச் செய்தோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். இப்போது அந்தக் கட்டடத்தை ஒட்டினாற்போல், வானொலிப் பிரிவு மற்றும் தடய அறிவியல் துறை ஆகியவற்றின் கட்டடங்கள் பழுது பார்க்க இயலாத அளவிற்கு உள்ளபடியால்—அவற்றை இடித்துவிட்டு புதிய கட்டடத்தை அல்ல—அதற்குப் பின்னால் இருக்கின்ற, ஒட்டியிருக்கின்ற சில பழைய கட்டடங்களை இடித்துவிட்டு—அந்த இடத்திலேயே புதிய கட்டடங்களைக் கட்டுவது குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளிக்குமாறு வல்லுநர் குழு கேட்டுக் கொள்ளப்பட்டது. அந்தக் குழுவினுடைய அறிக்கை கிடைத்தவுடன் புதிய கட்டடங்கள், காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகக் கட்டடங்கள் அமைந்துள்ள அதே வடிவமைப்பில் கட்டுவதென்று அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது.

பிற்பகல் 12-45

தற்போதைய வேலூர் சரகம், வேலூர், தருமபுரி, சேலம், நாமக்கல் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய பெரிய சரகமாக இருக்கிறது. அதை இரண்டாகப் பிரித்து சேலத்தில் ஒரு புதிய காவல் சரகம் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சரகத்தின்கீழ் சேலம், நாமக்கல், தருமபுரி மாவட்டங்கள் இடம்பெறும். தற்போது விழுப்புரம் சரகத்தில் உள்ள திருவண்ணாமலை மாவட்டமும், வேலூர் மாவட்டமும் வேலூர் சரகத்தின்கீழ் இடம்பெறும்.

தமிழ்நாடு சிறப்புக் காவல்படையில் 11 அணிகளிலும் உள்ள வானொலி தொலைத் தொடர்புப் பிரிவில் தற்போதுள்ள 11 சார் ஆய்வாளர்கள் பதவிகளை 11 ஆய்வாளர் பதவிகளாகவும் மற்றும் 22 அவில்தார் பதவிகளை 22 சார் ஆய்வாளர் பதவிகளாகவும் நிலை உயர்த்தி ஆணை வழங்கப்படும்.

பொது மக்களின் புகார்களைப் பெறுவதற்கென்றே சென்னை மாநகரில் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, காவல் துறைத் தலைவர் அலுவலகத்தில் ஒரு தனி தொலைபேசி நிறுவப்படும். இந்த எண்ணை தொடர்பு கொள்வதற்காகும் தொலைபேசிக் கட்டணத்தை அரசே ஏற்கும். புகார் செய்பவர்களுக்கு தொலைபேசிக் கட்டணம் கிடையாது. இந்த வசதி படிப்படியாக மற்ற நகரங்களுக்கும் விரிவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சிறு வணிகர் பாதுகாப்பிற்கு என்று Food Cell. Food Cell போலீசார் அரிசி, ration மண்ணெண்ணெய் ஆகியவற்றைக் கடத்துபவர்கள் மற்றும் உணவுப் பொருட்களில் கலப்படம் செய்பவர்கள்மீது Criminal நடவடிக்கை எடுப்பதாகக் கூறி சிறு சிறு வணிகர்களை எல்லாம் பெரும் இன்னலுக்கு ஆளாக்கி வருவதாகப் புகார்கள் அரசுக்கு வந்துள்ளன. எனவே பிரத்தியேகமான வழக்குகளைத் தவிர மற்ற நேர்வுகளில் Food Cell போலீசார் சிறு சிறு வணிகர்களைத் தேவையில்லாமல் சோதனைகள் மற்றும் விசாரணைகளுக்கு ஆட்படுத்தக் கூடாது என்று அரசு உத்தரவு பிறப்பிக்கும்.

காவல் துறை இயக்குநர் அலுவலகத்திலிருந்து காவல் நிலையம் வரை கணினிமயமாக்கவும், பொது மக்கள் காவல் நிலையங்களைத் துரிதமாகத் தொடர்புகொள்ளவும் ஒரு திட்டம் உருவாக்கப்படுகிறது. இதன்மூலம் காவல் துறை—பொது மக்கள் தொடர்பு நவீன முறையில் சீரமைக்கப்படும். கணினி மூலம் பொது மக்கள் புகார்களைக் கொடுக்கவும் முதல் தகவல் அறிக்கை நகல் பெறவும் முடியும். இதனைச் செயற்படுத்த உள் துறைச் செயலாளர் தலைமையில் காவல் துறை இயக்குநர் மற்றும் தகவல் தொடர்பு தொழில் நுட்பவியல் துறைச் செயலாளர், கூடுதல் காவல் துறைத் தலைவர் ஆகியோரைக்கொண்ட உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்படும்.

மதுவிலக்கு ஆயத் தீர்வைத் துறையின் அனைத்து அலுவலகங்களும் கணினிமயமாக்கப்படும். இதனால் ஆயத் தீர்வைத் துறை நிர்வாகத்தின் செயல்பாடுகள் மேம்படும்.

கணினி மூலம் தகவல் பெற்று சாராவி, இரசாயனப் பொருட்கள் ஆகியவை வேறு காரணங்களுக்காக தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்க கண்காணிப்பு தீவிரமாக்கப்படும்.

கடந்த ஆட்சிக் காலத்தில் ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம் காவலர் குடியிருப்புகள் மட்டுமே கட்டப்பட்டு வந்தன. 1996-ல் ஆண்டு ஒன்றுக்கு



1,500 காவலர் குடியிருப்புகளாகவும், 1997 ஆம் ஆண்டு 2,500 காவலர் குடியிருப்புகளாகவும் உயர்த்தப்பட்டு அவ்வாறு கட்டப்பட்டு வருகின்றன. இதற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.90 கோடி செலவாகும். இந்த ஆண்டு முதல் காவலர் குடியிருப்புகளுக்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ.100 கோடி ஒதுக்கப்படும். இதன்மூலம் ஆண்டு ஒன்றுக்கு 3,000 காவலர் குடியிருப்புகள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த நான்கு ஆண்டு காலத்தில் காவல் துறைக்கு 624 புதிய வாகனங்கள் 19 கோடியே 69 லட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்டன. வரும் ஆண்டிற்கு மாத்திரம் 18 கோடியே 72 லட்சம் ரூபாய் செலவில் 434 புதிய வாகனங்கள் காவல் துறைக்காக வாங்கப்படவுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல் தொலைத் தொடர்புப் பிரிவில் பணிபுரியும் 628 பணியாளர்களுக்கு இதுவரை சீருடை வழங்கப்படவில்லை. இந்த 628 பேருக்கும் இந்த ஆண்டு முதல் சீருடை வழங்கப்படும்.

உணவுப்படி. சட்டம் ஒழுங்கு மற்றும் அவசர காலப் பணிகளில் காவலர்களை ஈடுபடுத்தும்போதும், சட்டம் ஒழுங்குப் பிரச்சினையில் மற்ற இடங்களுக்கும், மாவட்டங்களுக்கும் அனுப்பும் சமயத்திலும் அவர்களுக்கு உணவுப்படி வழங்கப்படுகிறது. இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு, 1997-ல் ரூ.16 என்பது ரூ.25ஆகவும், 1998-ல் ரூ.25 என்பது ரூ.35 ஆகவும் உயர்த்தப்பட்டது. தற்போது ரூ.35 என்பது ரூ.45-ஆக உயர்த்தப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) முதல் நிலைக் காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்களுக்கு, 1997-ல் ரூ.20 என்பது ரூ.30 ஆகவும், 1998-ல் ரூ.30 என்பது ரூ.40-ஆகவும் உயர்த்தப்பட்டது. தற்போது ரூ.40 என்பது ரூ.50-ஆக உயர்த்தப்படுகிறது. Sub-Inspector மற்றும் Inspector-களுக்கு 1997-ல் ரூ.30 என்பது ரூ.45-ஆக உயர்த்தப்பட்டது. தற்போது ரூ.45 என்பது ரூ. 55-ஆக உயர்த்தப்படுகிறது. இதன்மூலம் 10,904 இரண்டாம் நிலைக் காவலர்கள், 72,650 முதல் நிலை மற்றும் தலைமைக் காவலர்கள், 8,542 உதவி ஆய்வாளர்கள் பயன் பெறுவார்கள். சுமார் ரூ.1 கோடி கூடுதலாகச் செலவாகும்.

பிற்பகல் 12-50

Risk allowance—இடர்ப் படி. காவல் துறையினர் ஆபத்து நிறைந்த சூழ்நிலைகளில் பணிபுரிகின்றார்கள். அதனால் அவர்களுக்கு

மாதந்தோறும் இடர்ப் படி வழங்கப்பட்டு வருகிறது. காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரை 1997-ல் இடர்ப் படி 20 ரூபாய் என்று இருந்தது. 1998-ல் 50 ரூபாயாக உயர்த்தப்பட்டது. தற்போது இந்த இடர்ப் படி 60 ரூபாயாக உயர்த்தப்படுகிறது. துணைக் கண்காணிப்பாளர், கூடுதல் கண்காணிப்பாளர் ஆகியோருக்கு 1997-ல் 30 ரூபாய் என்று இருந்தது 1998-ல் 60 ரூபாயாக உயர்த்தப்பட்டது. இது தற்போது 70 ரூபாயாக உயர்த்தப்படுகிறது. இதனால் அரசுக்கு சுமாராக ஒரு கோடி ரூபாய் கூடுதலாகச் செலவாகும். 90 ஆயிரம் காவலர்கள் இதன் மூலம் பயன் பெறுவார்கள்.

காவலர்களுக்கு தற்போது ஆண்டு ஒன்றுக்கு இரண்டு set சீருடைகள் வழங்கப்படுகின்றன. சீருடை தைக்க set ஒன்றுக்கு 75 ரூபாய் வீதம் தையற்கூலி தற்போது வழங்கப்பட்டு வருகிறது. இதனை set ஒன்றுக்கு 100 ரூபாய் வீதம் இரண்டு set-ற்கு 200 ரூபாய் இந்த ஆண்டு முதல் உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சிறப்பு உதவி ஆய்வாளர்கள் பற்றி இங்கே பல உறுப்பினர்களும் எடுத்துக் கூறினார்கள். உதவி ஆய்வாளர்களுக்கான அந்தஸ்து இவர்களுக்குத் தரப்பட்டிருந்தாலும், உதவி ஆய்வாளர்களுக்கான ஊதியம் தரப்படவில்லை என்று தெரிவித்தார்கள். இந்தக் குறை களையப்பட்டு சிறப்பு உதவி ஆய்வாளர்களுக்கும் உதவி ஆய்வாளர்களைப் போலவே ஊதிய விகிதம் வழங்க ஆணை பிறப்பிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நிதிநிலை அறிக்கையில் ஏற்கெனவே அறிவித்தவாறு ஆயிரம் பெண் காவலர்கள் மற்றும் நான்காயிரம் ஆண் காவலர்கள் தேர்ந்தெடுப்பதற்கான பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. இது தவிர இந்த நிதி ஆண்டில் ஓய்வு பெறும் காவலர்களுக்குப் பதிலாக 1,500 காவலர்கள் தேர்வு செய்யப்படவுள்ளார்கள். இதையும் தவிர கடலோரக் காவல் படை, அதி விரைவுப் படை மற்றும் முக்கிய இடங்களில் பாதுகாப்பு ஆகிய பணிகளுக்காக மேலும் 2,000 காவலர்கள் இந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்படவுள்ளார்கள்.

நடப்பாண்டில் தேர்வு செய்யப்பட்டு வரும் 5,000 காவலர்களோடு இந்த 3,500 காவலர்களும் சேர்ந்து 8,500 காவலர்கள் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படவிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



1996 ஆம் ஆண்டு முதல் 2000 வரை, 4 ஆண்டுகளில் 37 புதிய காவல் நிலையங்கள் திறக்கப்பட்டன. 36 புறக்காவல் நிலையங்கள் முழுக்காவல் நிலையங்களாக நிலை உயர்த்தப்பட்டன.

புதிய காவல் நிலையங்கள் கோரி 150-க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் சட்டமன்ற உறுப்பினர்களால் என்னிடம் தரப்பட்டுள்ளன. இந்த 150 கோரிக்கைகளில் 15 கோரிக்கைகள் மாத்திரமே ஏற்கப்படுகின்றன.

மாவட்டங்களிலே உள்ள காவல் நிலையங்களின் எண்ணிக்கை, அந்தப் பகுதியிலே நடைபெறும் குற்றங்களின் எண்ணிக்கை மற்றும் சட்டம் ஒழுங்கு நிலை ஆகியவற்றை மனதிலே கொண்டு இந்த 15 காவல் நிலையங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன:—

1. திருப்பூர்-மங்கலம்
2. மேல வளவு
3. சிவகிரி
4. சங்கரன்கோவில்
5. மகாலிங்கபுரம்
6. வேப்பளங்குரிச்சி
7. தூக்கணாம்பாக்கம்
8. கிருஷ்ணாபுரம்
9. திருமுல்லைவாயில்
10. சாத்தூர் தாலுக்கா காவல் நிலையம்
11. உசிலம்பட்டி தாலுக்கா காவல் நிலையம்
12. பட்டீஸ்வரம்
13. அம்மாபட்டி
14. தென்கரை
15. கிருஷ்ணன்கோவில்

அடுத்து தாமரைக்கனி கையைக் காட்டுகிறார்.

காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியும் ஏராளமான கோரிக்கைகள் வந்துள்ளன. அவற்றில் 10 பேருடைய கோரிக்கைகள் ஏற்கப்படுகின்றன:—

1. மருதூர்
2. சத்திரப்பட்டி
3. மதுக்கூர்
4. வைத்தீஸ்வரன்கோவில்
5. வைப்பூர்
6. தூசி
7. கடத்தூர்
8. மல்லாங்கிணறு
9. கள்ளிக்குடி
10. நாகையாபுரம்

இங்கே கட்டடம் கட்டுவதற்கான ஆணை பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு இந்த மானியத்தில் நல்ல கருத்துகளைச் சொன்ன மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று மானியத்தை ஏற்குமாறு கேட்டு அமைகின்றேன். நன்றி. வணக்கம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், Please sit down. விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**(அ) கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.



**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ. தெய்வநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.



**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ரவி அருணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.24,06,56,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

*பிற்பகல் 12-55*

## (ஆ) கோரிக்கை எண் 15—காவல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 15—காவல் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ. தெய்வநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ரவி அருணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ச. புரட்சிமணி.

**திரு. ச. புரட்சிமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. புரட்சிமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 10,53,68,97,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (இ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.



**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ. தெய்வநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ரவி அருணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ச. புரட்சிமணி.

**திரு. ச. புரட்சிமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. புரட்சிமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 71,79,77,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (16-5-2000) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிறபகல் 12-57 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

168. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகத்தின் பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்.

289. 9-12-1992 ஆம் நாளன்று உருவாகி, அதே நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட II(1)/வ.வ.அ.நி/210/92 ஆம் எண் மற்றும் II(1)/வ.வ.அ.நி/211/92 ஆம் எண் அறிவிக்கைகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிகவரிகள் துறையின் 24-1-2000 ஆம் நாளிட்ட 13 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள்.

290. தடய அறிவியல் துறையின் 'மக்கள் சாசனம்' என்ற சிறு வெளியீடு, 2000-2001 (தமிழ், ஆங்கிலம்).

—0—

222391

அச்சு மையம் அச்சகம், சென்னை-600 079.

**Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing.
Chennai-600 002.